உ

கடவுள் துணை.

சைவசமயாசாரிகளாகிய
நால்வர் திருவாய்மலர்ந்த

தேவாரத்திரட்டு.

தாயுமானசுவாமி, இராமலிங்கசுவாமி
பாடலும் சேர்த்து,
ஆங்காங்கேதீகப்படி திருவுருப்படங்க ளமைத்து.

ம. திருவேங்கிடமுதலியாரால்,

மண்ணிப்பாக்கம்
மாதவகிருஷ்ணமுதலியார்
அவர்களால் தமது
சென்னை:
ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

விலை] [அணா-௪.

1905.



திருஞானசம்பந்த சுவாமிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

சரித்திரம்.

காழிநகர்ச்சிவபாதவிதயர்தந்த
  கவுணியர்கோனமுதுமையாள்கருதியூட்டு
மேழிசையினமுதுண்டுதாளம்வாங்கி
  யிலங்கியசித்திலச்சிவிகையிசையவேறி
வாழ்முயலகனகற்றிப்பந்தரேய்ந்து
  வளர்கிழிபெற்றரவின்விடமருகற்றீர்த்து
வீழிநகர்க்காசெய்திமறைக்கதவம்பிணித்து
  மீனவன்மேனியின்வெப்புவிடுவித்தாரே.

ஆரெரியிட்டெடுத்தவேடவைமுன்னேற்றி
  யாற்றில்விடுமேடெதிர்போயணையவேற்றி
யோரமணரொழியாமேகழுவிலேற்றி
  யோதுதிருப்பதிகத்தாலோடமேற்றிக்
காருதவுமிடிபுத்தன்றலையிலேற்றிக்
  காயாதபனையின்முதுகனிகளேற்றி
யீரமிலாவங்கமுயிரெய்தவேற்றி
  யிலங்குபெருமணத்தானையெய்தினாரே.

சோழமண்டலத்திலுள்ள சீர்காழியென்னும் தலத்தில்வசிக்கும் பிராமணகுல கௌணியகோத்திரத்தில்வந்த சிவபாத விரதயரும், பகவதியாருஞ்செய்த தவத்தால் திருவவதாரஞ்செய்து, மூன்றுவயதில் உமாதேவியார் தந்த ஞானப்பாலை உண்டு ஓதாதுணர்ந்து தமிழ்வேதம் வெளிப்

படத் திருவாய்மலர்ந்தருளியும், திருக்கோலக்காவென்னுந் தலத்தில் நாதமயமான பொற்றாளத்தைச் சிவபிரானிடத்திற்பெற்றும், திருவரத்துறையில் முத்துப்பல்லக்கும், முத்துச்சின்னமுங் கொண்டும், திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் மகளுக்கு முயலகனென்னும் வியாதியைத் தமிழ்வேதத்தால் நீக்கியருளியும், திருப்பட்டீச்சரத்தில் முத்துப்பந்தர்பெற்றும், சிவபாதவிரதயர் யாகஞ்செய்யுநிமித்தம் திருவாவடுதுறையில் பொற்கிழிபெற்றும், திருமருகலில் பாம்புகடித்திறந்த வைசிய குமாரனைத் தேவாரத்தால் பிழைப்பித்தருளியும், திருவீழிமிழலையில் சிவபிரானருள்செய்த பொற்காசுகொண்டு அடியார்கள் மகேச்சுர பூசை நடத்தியருளியும், வேதாரணியத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளால் திறப்பிக்கப்பட்ட கபாடத்தைச் சாத்தப்பாடியருளியும், மதுரையில் சிவனடியார்கள்வசித்த திருமடத்தில் சமணர்கள் பொறாமையால் வைத்ததீ அவர்களோடு சம்பந்தமுடைய கூன்பாண்டியனைச் சுரரோயாகப் பற்றச்செய்தருளியும், மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் விண்ணப்பத்தின்படி அச்சுரமும் பிறவிக்கூனும் நீங்கும்படி விபூதியளித்துச் சைவனுக்கியருளியும், சமணர்வாதமிட்டு அவர்கள் தீயிலிட்ட ஏடு வெந்தொழியத் தாம் திருநள்ளாற்றுத் தேவாரத்தை நெருப்பிலிட்டு எடுத்தருளியும், வைகைநதியில் சமணர்களிட்ட ஏடு வெள்ளத்தோடுசெல்ல சைவசித்தாந்தத்தி னுண்மை வெளிப்படுத்திய திருப்பாச்சுரம் எதிரேறச்செய்தருளியும், சமணர்கள் யாவரும் முன் றாங்கள் கூறியபடி கழுவிலேறவிட்டும், திருக்கொள்ளம் பூதூருக்குச் சமீபித்தபோது பெருவெள்ளத்தில் ஓட்டுபவர்களில்லாமல் படகு தானே செல்லத் தேவாரம் ஓதி அடியார்களுடனே எழுந்தருளியும், தூர்வாதஞ்செய்யும்படி கூட்டத்

துடன்வந்து திருச்சின்னத்தைத்தடுத்த புத்தநந்திதலையில் திருக்கூட்டத்துள்ள சம்பந்தசரணாலயரால் இடிவிழும்படி செய்வித்தருளியும், திருவோத்தூரில் ஆண்பனைகளைக்குலைகளையுடைய பெண்பனைகளாகச் செய்வித்தருளியும், திருமயிலாப்பூரில் சிவநேசச்செட்டியார் மகள் பூம்பாவையார் பாம்புகடித்து இறந்தபின் தகனம்செய்த எலும்பினைக்குடத்தினின்றும் யாவருங்கண்டு வியக்கும்படி அங்கம்பூம்பாவையாகப் பிழைத்துவரத் தேவாரம் அருளிச்செய்தும், நல்லூர்ப்பெருமணத்தில் தமது திருக்கல்யாண மகோத்ஸவ தரிசனத்துக்குவந்த முருகநாயனார், திருநீலநக்கவடிகள், திருநீலகண்டயாழ்ப்பாணர்முதலிய பெரியர்களோடு சிவாலயத்துள் எழுந்த சோதியுள் (பதினாறும் ஆண்டில் வைகாசிமாதம் மூலநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில்) கலந்தருளினார்.

பின்பு அந்தச் சோதிமறைந்து பழயபடி ஆலயமாகக் கண்டு மண்ணுலகத்தாரும், விண்ணுலகத்தாரும்வணங்கித் தோத்திரம் செய்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

———

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிக ளருளிச்செய்த

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௧

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதே
த்தப், பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௩

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௪

ஒருமைபெண்மையுடையன் சடையன் விடையூருமிவ
னென்ன, வருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவ
ர்கள்வன், கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்
மிதுவென்னப், பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மா
னிவனன்றே. ௫

மறைகலந்தவொலிபாடலொடாடலராகிமழுவேந்தி [ன்
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
கறைகலந்தகடியார்பொழில்நீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௬

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசச்சதிர்வெய்தி
யுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழிசூழ்குளிர்கானல்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௭

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௮

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானு
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வ
வாணுதல்செய்ம்மகளிர்ம்முதலாகியவையத்தவரேத்தப் [ன்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௯

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வ
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயமிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௰

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை [ய்த
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெ
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. ()

திருச்சிற்றம்பலம்.

———

கோயில் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவேண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே. ௧

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையல்தீர்வாரே. ௨

மையாரொண்கண்ணார்மாடநெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில்சிற்றம்பலந்தானே. ௩

நிறைவெண்கொடிமாடநெற்றிநேர்தீண்டப்
பிறைவந்திறைதாக்கும்பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச்சிற்றம்பலமேய
விறைவன்கழலேத்துமின்பமின்பமே. ௪

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. ௫

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட்சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணாதுள்ளமே. ௬

அலையார்புனல்சூடியாகத்தொருபாக
மலையான்மகளோடுமகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானார்களே. ௭

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே. ௮

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வர்ழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே. ௯

பட்டைத்துவராடைப்படிமங்கொண்டாடு
முட்டைக்கட்டுரைமொழிவகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
நட்டப்பெருமானைநாளுந்தொழுவோமே. ௰

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாறயிரந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே
பாடினாய்மறையோடுபல்கீதமும் பல்சடைப்பணிகால்கதிர்
சூடினாயருளாய்சுருங்கவெந்தொல்வினையே[வெண்டிங்கள்

கொட்டமேகமழுங்குழலாளொடுகூடினாயெருதேறினாய்
நுதல், பட்டமேபுனைவாயிசைபாடுவபாரிடமா, நட்டமேந
வில்வாய்மறையோர்தில்லை நல்லவர்பிரியாதசிற்றம்பல, மி
ட்டமாயுறைவாயிவைமேவியதென்னைகொலோ. ௨

நீலத்தார்கரியமிடற்றார்நல்லநெற்றிமேலுறைகண்ணினா
ர்பற்று, சூலத்தார்சுடலைப்பொடிநீறணிவார்சடையார், சீல
த்தார்தொழுதேத்து சிற்றம்பலஞ்சேர்தலாற்கழற் சேவடி
கைதொழக், கோலத்தாயருளாயுனகாரணங்கூறுதுமே. ௩

கொம்பலைத்தழகெய்தியநுண்ணிடைக்கோலவாண்மதி
போலமுகத்திரண், டம்பலைத்தகண்ணாண்முலைமேவியவா

ர்சடையான்,கம்பலைத்தெழுகாமுறுகாளையர்காதலாற்கழற்
சேவடிகைதொழ, வம்பலத்துறைவானடியார்க் கடையா
வினையே. ௪

தொல்லையாரமுதுண்ணநஞ்சுண்டதோர் தூமணிமிடறா
பகுவாயதோர், பல்லையார்தலையிற்பலியேற்றுழல் பண்டர
ங்கா, தில்லையார்தொழுதேத்துசிற்றம்பலஞ்சேர்தலாற்கழ
ற்சேவடிகைதொழ, வில்லையாம்வினைதானெரியம்மதிலெ
ய்தவனே. ௫

ஆகந்தோயணி கொன்றையாயனலங்கையா யமரர்க்கம
ராவுமை, பாகந்தோய்பகவா பலியேற்றுழல் பண்டரங்கா,
மாகந்தோய்பொழின்மல்குசிற்றம்பலமன்னினாய் மழுவாளி
னாயழ, னாகந்தோயரையாயடியாரைநண்ணாவினையே. ௬

சாதியார்பளிங்கினொடுவெள்ளியசங்கவார் குழையாய்
திகழப்படும், வேதியாவிகிர்தா விழவாகணிதில்லைதன்னு,
ளாதியார்க்கிடமாய சிற்றம்பலமங்கையாற்றொழ வல்லடி
யார்களை, வாதியாதகலுர்நலியாமலிதீவினையே. ௭

வேயினார்பணைத்தோளியோடாடலை வேண்டினாய்விகிர்
தாவுயிர்கட்கமு, தாயினாயிடுகாட்டெரியாடலமர்ந்தவனே,
தீயினார்கணையாற்புரமூன்றெய்தசெம்மையாய் திகழ்கின்ற
சிற்றம்பல, மேயினாய்கழலேதொழுதெய்துதுமேலுலகே.

தாரினார்விரிகொன்றையாய்மதிதாங்குநீள்சடையாய் த
லைவாநல்ல, தேரினார்மறுகிற்றிருவாரணி தில்லைதன்னுட்,
சீரினால்வழிபாடொழியாததோர் செம்மையாயழகாயசிற்ற
ம்பல, மேரினாலமர்ந்தாயுனசீரடியேத்துதுமே. ௯

வெற்றரையுழல்வார்துவராடையர்வேடத்தாரவர்கள்ளு
ரைகொள்ளன்மின், மற்றவருலகின்னவலம்மவைமாற்றகி
ல்லார், கற்றவர்தொழுதேத்து சிற்றம்பலங் காதலாற்கழற்
சேவடிகைதொழ, வுற்றவருலகின்னுறுதிகொளவல்லவரே.

நாறுபூம்பொழினண்ணியகாழியுணான்மறைவல்ல ஞான
சம்பந்த, னூறுமின்றமிழாலுயர்ந்தாருறை தில்லைதன்னு,
ளேறுதொல்புகழேந்துசிற்றம்பலத்தீசனையிசையாற்சொன்
னபத்திவை,கூறுமாறுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

திருஅண்ணாமலை - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்க
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார் [ள்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. ௧

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. ௨

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்க
ணானைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. ௩

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார் புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. ௪

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவிலொருகால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. ௫

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணாதாயன்கைமேற்குழலூத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. ௬

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. ௭

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாயெடுத்தான்றோ
ளிறந்தான்முறியநெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. ௮

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேயுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றாடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே. ௯

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச் சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்க
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயி [ல்
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. ௰

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருநேய்த்தானம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்
கையாடியகேடிற்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்நயனத்தவளோடுந்
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. ௧

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானூ
ரறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகரைமேல்
நிறையும்புனைமடவார்பயில்நெய்த்தானமெனீரே. ௨

பேயாயினபாடப்பெருநடமாடியபெருமான்
வேயாயினதோளிக்கொருபாகம்மிகவுடையான்

தாயாகியவுலகங்களைநிலைபேறுசெய்தலைவன்
நேயாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. ௩

சுடுநீறணியண்ணல்சுடர்சூலம்மனலேந்தி
நடுநள்ளிருணடமாடியநம்பன்னுறையிடமாங்
கடுவாளிளவரவாடுமிழ்கடனஞ்சமதுண்டா
னெடுவாளைகள்குதிகொள்ளுயர்நெய்த்தானமெனீரே. ௪

நுகராரமொடேலம்மணிசெம்பொன்னுரையுந்திப்
பகராவருபுனல்காவிரிபரவிப்பணிந்தேத்துந்
நிகரான்மணலிடுதண்கரைநிகழ்வாயநெய்த்தான
நகரானடியேத்தந்நமைநடலையடையாவே. ௫

விடையார்கொடியுடையவ்வணல் வீந்தார்வெள்ளெலும்பும்
உடையார்நறுமாலைச்சடையுடையாரவர்மேய
புடையேபுனல்பாயும்வயல்பொழில்சூழ்த்தநெய்த்தான
மடையாதவரென்றும்மமருலகம்மடையாரே. ௬

நிழலார்வயல்கமழ்சோலைகணிறைகின்றநெய்த்தானத்
தழலானவனனலங்கையிலேந்தியழகாய
கழலானடிநாளுங்கழலாதேவிடலின்றித்
தொழலாரவர்நாளுந்துயரின்றித்தொழுவாரே. ௭

அறையார்கடலிலங்கைக்கிறையணிசேர்கயிலாய
மிறையாரமுனெடுத்தானிருபதுதோளுறவூன்றி
நிறையார்புனனெய்த்தானநன்னிகழ்சேவடிபரவக்
கறையார்கதிர்வாளீந்தவர்கழலேத்துதல்கதியே. ௮

கோலம்முடிநெடுமாலொடுகொய்தாமரையானுஞ்
சீலம்மறிவரிதாயொளிதிகழ்வாயநெய்த்தானங்
காலம்பெறமலர்நீரவைதூவித்தொழுதேத்தும்
ஞாலம்புகழடியாருடலுறுநோய்நலியாவே.

மத்தம்மலிசித்தத்திறைமதியில்லவர்சமணர்
புத்தரவர்சொன்னம்மொழிபொருளாநினையேன்மி
னித்தம்பயினிமலன்னுறைநெய்த்தானமதேத்துஞ்
சித்தம்முடையடியாருடல்செறுநோயடையாவே. ௰

நலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனைநிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வர்சிவகதியே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. க

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராறோடப்பொன்றப்புறந்தாளா
லெண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. உ

பிறையும்புனலுஞ்சடைமேலுடையார்பறைபோல்விழிகட்
யுறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமக [பே
னறையுமலர்கொண்டடியார்பரவியாடல்பாடல்செய்
பறையுஞ்சங்குப்பலியுமோவாப்பழனநகராரே. ௩

உரமன்னுயர்கோட்டுலறுகூகையலறுமயானத்தி
லிரவிற்பூதம்பாடவாடியெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையினறவமேற்றபெம்மானெமையாளும்
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. ௪

குலவெஞ்சிலையால்மதின்மூன்றெரித்த கொல்லேறுடைய
கலவமயிலுங்குயிலும்பயிலுங்கடல்போற்காவேரி [ண்ணல்
நலமஞ்சுடையநறுமாங்கனிகள்குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள்திரைமுன்சேர்க்கும்பழனநகராரே. ௫

வீளைக்குரலும்விளிசங்கொலியும்விழவினொலியோவா
மூளைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாமதிளெய்தா
ரீளைப்படுகிவிலையார்தெங்கிற்குலையார்வாழையின்
பாளைக்கமுகின்பழம்வீழ்சோலைப்பழனநகராரே. ௬

பொய்யாமொழியார்முறையாலெத்திப்புகழ்வார்திருமேனி
செய்யார்கரியமிடற்றார்வெண்ணூல்சேர்ந்தவசலத்தார்
கையாடலினார்புனலால்மல்குசடைமேற்பிறையோடும்
பையாடரவமுடனேவைத்தார்பழனநகராரே. ௭

மஞ்சோங்குயரமுடையான்மலையைமாறாவெடுத்தான்றோ
ளஞ்சோடஞ்சுமாறுநான்குமடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணிந்தநம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனநகராரே. ௮

கடியார்கொன்றைச் சுரும்பின்மாலை கமழ்புன்சடையார்வி
முடியாப்படிமூவடியாலுலகமுழுதுந்தாவிய [ண்
நெடியானீடாமரைமேலயனுநேடிக்காணாத
படியார்பொடியாடகலமுடையார்பழனநகராரே. ௯

கண்டான்கழுவாமுன்னேயோடிக்கலவைக்கஞ்சியை
யுண்டாங்கவர்களுரைக்குஞ்சிறுசொல்லோரார்பாருட்
டண்டாமரையின்மலர்மேனறவமதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழுமவண்டியாழ்செய்யும்பழனநகராரே. ௰

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னு
ளாவுய்த்தனையதிறலார்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருக்கொள்ளம்பூதூர் - ஈரடிமேல்வைப்பு

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. க

கோட்டகக்கழனிக்கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. உ

குலையினார்தெங்குசூழ்கொள்ளம்பூதூர்
விலையிலாட்கொண்டவிகிர்தனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௩

குவளைகண்மலருங்கொள்ளம்பூதூர்த்
தவளநீறணித்தலைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௪

கொன்றைபொன்சொரியுங்கொள்ளம்பூதூர்
நின்றபுன்சடைநிமலனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௫

ஓடம்வந்தணையுங்கொள்ளம்பூதூ
ராடல்பேணியவடிகளையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௬

ஆறுவந்தணையுங்கொள்ளம்பூதூ
ரேறுதாங்கியவிறைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௭

குரக்கினம்பயிலுங்கொள்ளம்பூதூ
ரரக்கனைச்செற்றவாதியையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௮

பருவராலுகளுங்கொள்ளம்பூதூ
ரிருவர்காண்பரியான்கழலுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௯

நீரகக்கழனிக்கொள்ளம்பூதூர்த்
தேரமண்செற்றசெல்வனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. ௰

கொன்றைசேர்சடையான்கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண்ஞானசம்பந்த
னின்றுசொன்மாலைகொண்டேத்தவல்லார்போ
யென்றும்வானவரோடிருப்பாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு, சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினையே, கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட,னவ்னதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார்கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோவா, ரெந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாதேழைநெஞ்சே, யந்தணாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. ௨

நிணங்குடர்தோனரம்பென்புசேராக்கைதானிலாயதன்றூற், குணங்களாற்கல்லது குற்றநீங்காதெனக் குலுங்கினையே, வணங்குவார்வானவர்தானவர்வைகலுமணங்கொடேத்து, மணங்கனாரூர்தொழுதுய்யலா மையல்கொண்டஞ்சனெஞ்சே. ௩

நீதியால்வாழ்கிலைநாள்செலாநின்றனநித்தநோய்கள்
வாதியாவாதலானாளுநாளின்பமேமருவினையே
சாதியார்கின்னரர்தருமனும்வருணர்களேத்துமுக்க [சே.
ணாதியாரூர்தொழுதுய்ய லாமையால்கொண், டஞ்சனெஞ்

பிறவியால்வருவனகேடுளவர்தலாற்பெரியவின்பத்
துறவியார்க்கல்லதுதுன்பநீங்காதெனத்தூங்கினையே
மறவநீமார்க்கமேநண்ணினாய்தீர்த்தநீர்மல்குசென்னி
யறவனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே

செடிகணோயாக்கையைம் பாம்பின்வாய்த் தேரைவாச்சிறுபறவைக், கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினையே, முடிகளால்வானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்க, ணடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. ௬

ஏறுமாலியானையேசிவிகையந்தளகமீச்சேர்பிவட்டில்
மாறிவாழுடம்பினார்படுவதோர்கடலைக்குமயங்கினாயே
மாறிலாவனமுலைமங்கையோர்பங்கினர்மதியம்வைத்த
வாறனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

ஊன்பினார்கழிநிரைத்திறைச்சிமண்சுவரெறிந் திதுநம்மி
ல்லம், புன்புலானாறுதோல்போர்த்துப் பொல்லாமையான்
மூகடுகொண்டு, முன்பெலாமொன்பது வார்சலார்குரம்பை
யின்மூழ்கிடாதே,யன்பனாரூர்தொழுதுய்யலாமையல்கொ
ண்டஞ்சனெஞ்சே. ௮

தந்தைதாய்தன்னுடன்றோன்றினார்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்ந்துபோக்கில்லெனப்பற்றினாயே
வெந்தநீறாடியாராதியார்சோதியார்வேதகீத [ஞ்சே
ரெந்தையாரூர்தொழுதுய்யலா மையல்கொண் டஞ்சனெ

நெடியமால்பிரமனுநீண்டுமண்ணிடந்தின்னநேடிக்காணாப்
படியனார்பவளம்போலுருவனார்பனிவளர்மலையாள்பாக
வடிவனார்மதிபொதி சடையனார்மணியணி கண்டதெண்
டோ, ளடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண் டஞ்ச
னெஞ்சே. ௰

பல்விதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூர
னல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனாரூ
சொல்லியம்போர்தெரியாடுமெம்மீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லவர்தீதிலாரோதநீர்வையகத்தே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

———

திருவீழிமிழலை-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீ ரேசலில்லையே. ௧

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காசினை, முறைமைநல்குமே. ௨

செய்யமேனியீர், மெய்கொண்மிழலையீர்
பைகொளரவினீ ருய்யநல்குமே. ௩

நீறுபூசினீ, ரேறதேறினீர்
கூறுமிழலையீர், பேறுமருளுமே. ௪

காமன்வேவவோர், தூமக்கண்ணினீர்
நாமமிழலையீர், சேமநல்குமே. ௫

பிணிகொள்சடையினீர், மணிகொண்மிடற்றினீ
ரணிகொண்மிழலையீர், பணிகொடருளுமே. ௬

மங்கைபங்கினீர், துங்கமிழலையீர்
கங்கைமுடியினீர், சங்கைதவிர்மினே. ௭

அரக்கனெரிதர, விரக்கமெய்தினீர்
பரக்குமிழலையீர், கரக்கைதவிர்மினே. ௮

அயனுமாலுமாய், முயலுமுடியினீ
ரியலுமிழலையீர், பயனுமருளுமே. ௯

பறிகொள்தலையினா, ரறிவதறிகிலார்
வெறிகொண்மிழலையீர், பிரிவதறியதே. ௰

காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற், றாழுமொழிகளே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

———

திருச்சக்கல் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவுமதிவந்துலவும்மதின்மாளிகை
தேனுலாவுமலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே. ௧

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்துவெண்ணெய்ப் பெருமானடிமேவி
யடைந்துவாழுமடியாரவரல்லலறுப்பரே. ௨

நீலநெய்தனிலவிம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவ்வளமல்கியசிக்கலுள் [ரான்
வேலொண்கண்ணியினளையோர்பாகன் வெண்ணெய்ப்பி
பாலவண்ணன்கழலேத்தநம்பாவம்பறையுமே. ௩

கந்தமுந்தக்கைதைப்பூத்துக்கமழ்ந்துசேறும்பொழிற்
செந்துவண்டின்னிசைபாடன்மல்குந்திகழ்சிக்கலுள் [கழல்
வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்பிரான்விரையார்
சிந்தைசெய்வார்வினையாயினதேய்வதுதிண்ணமே. ௪

மங்குறங்குமறையோர்கண்மாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழில்செல்வமல்குந்திகழ்சிக்கலுள்
வெங்கண்வெள்ளேறுடை வெண்ணெய்பிரானடிமேவவே
தங்குமேற்சாதந்திருநாளுந்தகையுமே. ௫

வண்டிரைத்துமதுவிம்மியமாமலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனல்வந்தொழுகும்வயற்சிக்கலுள்
விண்டிரைத்தமலராற்றிகழ்வெண்ணெய்ப்பிரானடி
தண்டிரைத்துமனமேமதியாய்கதியாகவே. ௬

மூன்றுமாடம்மதின்மூன்றுடனேயெரியாய்விழத்
தூன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான்
செங்கெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுன்னிநீடமனமேநினையாய்வினையோயவே. ௭

தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினான்முடிபத்தொடுதோள்கணெரியவே
செற்றதேவனஞ்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுற்றுநீநினைவாய்வினையாயினவோயவே. ௮

மாவினோடருமாமறைவல்லமுனிவனுங்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோலியுஞ்
சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. ௯

பட்டைநற்றுவராடையினாரொடும்பாங்கிலாக்
கட்டமண்கழுக்கள்சொல்லினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமான்செழுமாமறைப்
பட்டன்சேவடியேபணிமின்பிணிபோகவே. ௰

கந்தமார்பொழிற்காழியுள்ஞானசம்பந்தனற்
செந்தண்பூம்பொழிற்சிக்கல் வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவுவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

———

திருக்கடனாகைக்காரோணம் - பண்-சேவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
வேனற்பூத்தம்மராங்கோதையோடும்விராவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. ௧

விலங்கலொன்றுசிலையாமதின்மூன்றுடன்வீட்டினா
னிலங்குகண்டத்தெழிலாமைபூண்டாற்கிடமாவது
மலங்கியோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடற்
கலங்களோதங்கழிசூட்கடனாகைக்காரோணமே. ௨

வெறிகொளாருங்கடற்கைதைநெய்தல்விரிபூம்பொழின்
முறிகொணாழன்மூடப்புன்னைமுல்லைமுகைவெண்மலர்
நறைகொள்கொன்றைநயந்தோங்குநாதற்கிடமாவது
கறைகளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. ௩

வண்டுபாடல்வளர்கொன்றைமாலைமதியோடுடன்
கொண்டகோலங்குளிர்கங்கைதங்குங்குருட்குஞ்சியு
ளுண்டுபோலுமெனவைத்துகந்தவொருவற்கிடங்
கண்டல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. ௪

வார்கொள்கோலம்முலைமங்கைநல்லார்மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச்சடைநெடுவெண்டிங்கணிகழ்வெய்தவே

போர்கொள்சூலப்படைபுல்குகையார்க்கிடமாவது
கார்கொளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. ௫

விடையதேறிவ்விடவரவசைத்தவிகிர்தரவர்
படைகொள்பூதம்பலபாடவாடும்பரமாயவ
ருடைகொள்வேங்கையுரிதோலுடையார்க்கிடமாவது
கடைகொள்செல்வங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. ௬

பொய்துவாழ்வார்மனம்பாழ்படுக்கும்மலர்ப்பூசனை
செய்துவாழ்வார்சிவன்சேவடிக்கேசெலுஞ்சிந்தையா
ரெய்தவாழ்வாரெழினக்கரெம்மார்க்கிடமாவது
கைதல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. ௭

பத்திரட்டிதிரடோளுடையான்முடிபத்திற
வத்திரட்டிவிரலாலடர்த்தார்க்கிடமாவது
மைத்திரட்டிவ்வருவெண்டிரைமல்கியவார்கடல்
கைத்திரட்டுங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. ௮

நல்லபோதிலுறைவானுமாலுநடுக்கத்தினா
லல்லராவரெனநின்றபெம்மாற்கிடமாவது
மல்லலோங்கிவ்வருவெண்டிரைமல்கியமால்கடல்
கல்லலோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. ௯

உயர்ந்தபோதினுருவத்துடைவிட்டுழல்வார்களும்
பயர்ந்தமண்டையிடுபிண்டமாவுண்டுழல்வார்களுந்
நயந்துகாணாவகைநின்றநாதர்க்கிடமாவது
கயங்களோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. ௰

மல்குதண்பூம்புனல்வாய்ந்தொழுகும்வயற்காழியா
னல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்
வல்லவாறேபுனைந்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளி - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தீயதில்லானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாத்திருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிரும்மே. ௧

கைம்மகவேந்திக்கடுவனோடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. ௨

மந்தம்முழவம்மழலைததும்பவரைநீழற்
செந்தண்புனமுஞ்சுனையுஞ்சூழ்ந்தசிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள்சடைமேலுடையார்விடையூரு
மெந்தம்மடிகளடியார்க்கல்லலில்லையே. ௩

துறைமல்குசாரற்சுனைமல்குநீலத்திடைவைகிச்
சிறைமல்குவண்டுந்தும்பியும்பாடுஞ்சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன்கனலெரியாடுங்கடவுள்ளெம்
பிறைமல்குசென்னியுடையவனெங்கள்பெருமானே. ௪

கொலைவரையாதகொள்கையர்தங்கண்மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச்செற்றனரேனுஞ்சிராப்பள்ளிக்
தலைவரைநாளுந்தலைவரல்லாமையுரைப்பீர்கா
ணிலவரைநீலமுண்டதும்வெள்ளைநிறமாமே. ௫

வெய்யதண்சாரல்விரிநிறவேங்கைத்தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
தையலோர்பாகமகிழ்வர்நஞ்சுண்பர்தலையோட்டி
லையமுங்கொள்வராரிவர்செய்கையறிவாரே. ௬

வேயுயர்சாரற்கருவிரலூகம்விளையாடுஞ்
சேயுயர்கோயிற்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
பேயுயர்கொள்ளிகைவிளக்காகப்பெருமானார்
தீயுகந்தாடறிருக்குறிப்பாயிற்றாகாதே. ௭

மலைமல்குதோளான்வலிகெடவூன்றிமலரோன்றன்
றலைகலனாகப்பலிதிரிந்துண்பர்பழியோரார்
சொலவலவேதஞ்சொல்வலகீதஞ்சொல்லுங்காற்
சிலவலபோலுஞ்சிராப்பள்ளிச்சேடர்செய்கையே. ௮

அரப்பள்ளியானுமலருறவானுமறியாமைக்
கரப்புள்ளிநாடிக்கண்டிலரேனுங்கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேயவார்சடைச்செல்வர்மனைதோறு
மிரப்புள்ளீரும்மையேதிலர்கண்டாலிகழாரே. ௯

நாணாதுடைநீத்தோர்களுங்கஞ்சிநாட்காலே
யூணாப்பகலுண்டோதுவோர்களுமுரைக்குஞ்சொற்
பேணாதுருசீர்பெருதுமென்பீரெம்பெருமானார்
சேணார்கோயில்சிராப்பள்ளிசென்றுசேர்மினே. ௰

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருக்கற்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமதித்துத்
தடந்திரைசேர்புனல்மாதைத்தாழ்சடைவைத்தசதுர
ரிடந்திகழ்முப்புரிநூலர்துன்பமொடின்பமதெல்லாங்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. ௧

அங்கமோராறுடைவேள்வியானவருமறைநான்கும்
பங்கமில்பாடலோடாடல்பரணிபயின்றபடிறர்
சங்கமதார்குறமாதர்தங்கையில்மைந்தர்கள்தாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. ௨

நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னொளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகிற்
காரகிலின்புகைவிம்முங்கற்குடிமாமலையாரே. ௩

ஒருங்களிநீயிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்கலமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசர்
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்முளைவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. ௪

போர்மலிதிண்சிலைகொண்டு பூதகணம்புடைசூழப்
பார்மலிவேடுருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தா
ரேர்மலிகேழல்கிளைத்தவிண்ணொளியாமணியெங்கும்
கார்மலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. ௫

உலந்தவரென்பதணிந்தேயூரிடுபிச்சையராகி
விலங்கல்வில்வெங்கனலாலேமூவெயில்வேவமுனிந்தார்
நலந்தருசிந்தையராகிநாமலிமாலையினாலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. ௬

மானிடமார்தருகையர்மாமழுவாரும்வலத்தா
ரூனிடையார்தலையோட்டிலுண்கலனாகவுகந்தார்
தேனிடையார்தருசந்தின்றிண்சிறையால்தினைவித்திக்
கானிடைவேடர்விளைக்குங்கற்குடிமாமலையாரே. ௭

வாளமர்வீரநினைந்தவிராவணன்மாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதுணைவர்
தாளமர்வய்தலைப்பற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கீறுங்கற்குடிமாமலையாரே. ௮

தண்டமர்தாமரையானுந்தாவியிம்மண்ணையளந்து
கொண்டவனும்மறிவொண்ணாக்கொள்கையர்வெள்விடை
வண்டிசையாயிளபாடநீடியவார்பொழினீழற் [யூர்வர்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. ௯

மூத்துவராடையினருமூசுகருப்பொடியாரு
னாத்துவர்பெய்ம்மொழியார்கணயமிலராமதிவைத்தா
ரேத்துயர்பத்தர்கள்சித்தரிறைஞ்சவவரிடரெல்லாங்
காத்தவர்காமருசோலைக்கற்குடிமாமலையாரே. க0

காமருவார்பொழில்சூழங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. ௰க

திருச்சிற்றம்பலம்.

திருமூக்கீச்சரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழையோடாடியகாரண
மாய்ந்துகொண்டாங்கறியந்நிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே.

வெண்டலையோர்கலனாப்பலிதேர்ந்துவிரிசடைக்
கொண்டலாரும்புனல்சேர்த்துமையாளொடுங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தெழக்
கண்டவர்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்கன்மமே. உ

மருவலார்தம்மதிலெய்ததுவும்மான்மதலையை
யுருவிலாரவ்வெரிபூட்டியதும்முலகுண்டதாற்
செருவிலாரும்புலிசெங்கயலானையினான்செய்த
பொருவின்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்யும்பூசலே. ந

அன்னமன்னநடைச்சாயலாளோடழகெய்தவே
மின்னையன்னசடைக்கங்கையான்மேவியகாரணந்
தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினான்
மன்னன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மாயமே. ச

விடமுனாரவ்வழல்வாயதோர்பாம்பரைவீக்கியே
நடமுனாரவ்வழலாடுவர்பேயொடுநள்ளிருள்

வடமணிபுகழ்ப்பூழியன்றென்னவன்கோழிமன்
னடன்மன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோராச்சமே. ரு

வெந்தநீறுமெய்யிற்பூசுவராடுவர்வீங்கிருள்
வந்தனாரவ்வனைகொள்வதுமிங்கொருமாயமா
மந்தணமாதனனேரியன்செம்பியனுக்கிய
வெந்தைமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரேதமே. சு

அரையிலாருங்கலையில்லவனாணொடுபெண்ணுமா
யுரையிலாரவ்வவலாடுவரொன்றலர்காண்பினே
விரவலார்தம்மதின்மூன்றுடன்வெவ்வழலாக்கினா
னரையன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோராச்சமே. எ

ஈர்க்குநீர்ச்செஞ்சடைக்கேற்றதுங்கூற்றையுதைத்ததுங்
கூர்க்குநன்மூவிலைவேல்வலனேந்தியகொள்கையும்
மார்க்கும்வாயானரக்கன்னுரத்தைநெரித்தவ்வடன்
மூர்க்கன்மூக்கீச்சரத்தடிகள்செய்யாநின்றமொய்ம்பதே.

நீருளாருமலர்மேலுறைவானெடுமாலுமாய்ச்
சீருளாருங்கழறேடமெய்த்தீத்திரளாயினான்
சீரினாலங்கொளிர்தென்னவன்செம்பியன்வில்லவன்
சேருமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்செம்மையே. கூ

வெண்புலான்மார்பிடுதுகிலினர்வெற்றரையுழல்பவ
ருண்பினாலேயுரைப்பார்மொழியூனமதாக்கினா
ஞெண்புலால்வேன்மிகவல்லவனேங்கெழிற்கிள்ளைசேர்
பண்பின்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்பச்சையே.

மல்லைவார்மும்முடிமன்னர்மூக்கீச்சரத்தடிகளைச்
செல்வராகநினையும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாய்பவர்காழியுண்ஞானசம்பந்தன்
சொல்லவல்லாரவர்வானுலகாளவும்வல்லரே. ௰க

திருச்சிற்றம்பலம்.

திருப்பாராய்த்துறை-பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை
கூறுசேர்வதோர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பாராய்த்துறை
யாறுசேர்சடையண்ணலே. ௧

கந்தமாமலர்க்கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல்வைத்தவர்
பைந்தண்மாதவிசூழ்ந்தபாராய்த்துறை
யந்தமில்லவடிகளே. ௨

வேதர்வேதமெல்லாமுறையால்விரித்
தோதநின்றவொருவனார்
பாதிபெண்ணுருவாவர்பாராய்த்துறை
யாதியாயவடிகளே. ௩

தோலுந்தம்மரையாடைசுடர்விடு
நூலுந்தாமணிமார்பினர்
பாலுநெய்பயின்றாடுபராய்த்துறை
யாலநீழலடிகளே. ௪

விரவிநீறுமெய்பூசுவர்மேனிமே
லிரவினின்றெரியாடுவர்
பரவினாரவர்வேதம்பராய்த்துறை
யரவமார்த்தவடிகளே. ௫

மறையுமோதுவர்மான்மறிக்கையினர்
கறைகொள்கண்டமுடையவர்
பறையுஞ்சங்குமொலிசெய்பராய்த்துறை
யறையநின்றவடிகளே. ௬

விடையுமேறுவர்வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கைதரித்தவர்
படைகொள்வெண்மழுவாளர்பராய்த்துறை
யடையநின்றவடிகளே. ௭

தருக்கின்மிக்கதசக்கிரீவன்றனை
நெருக்கினார்விரலொன்றினாற்
பருகினாரவர்போலும்பராய்த்துறை
யருக்கன்றன்னையடிகளே. ௮

நாற்றமாமலரானொடுமாலுமாய்த்
தோற்றமுமறியாதவர்
பாற்றினார்வினையானபராய்த்துறை
யாற்றன்மிக்கவடிகளே. ௯

திருவிலிச்சிலதேரமணாதர்க
ளொருவிலாவுரைகொள்ளேலும்
பருவிலாலெயிலெய்துபராய்த்துறை
மருவினான்றனைவாழ்த்துமே. ௰

செல்வமல்கியசெல்வர்பராய்த்துறை
செல்வமேற்சிதையாதன
செல்வன்ஞானசம்பந்தன்செந்தமிழ்
செல்வமாமிவைசெப்பவே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

———

திருஈங்கோய்மலை - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடித்
தேனொத்தனமென்மொழிமான்விழியாள்தேவிபாகமாக்
கானத்திரவிலெரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
வேனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. ௧

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகாடிடமாக
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொந்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவாடும்பரனா
ரேலத்தொடுநெல்லிலவங்கமழுமீங்கோய்மலையாரே. ௨

கண்கொணுதலார்கறைகொண்மிடற்றார்கரியினுரிதோ
லார், விண்கொள்மதிசேர்சடையார்விடையார்கொடியார்
வெண்ணீறு, பெண்கொடிருமார்பதனிற்பூசும்பெம்மானெ
மையாள்வா, ரெண்குமறியுந் திரியுஞ்சார லீங்கோய்மலை
யாரே. ௩

மறையின்னிசையார்நெறிமன்கூந்தன்மலையான்மகளோ
டுங், குறைவெண்பிறையும்புனலுங்நிலவுங் குளிர்புன்சடை
தாழப், பறையுங்குழலுங்கழலுமார்ப்பப்படுகாட்டெரியாடு
மிறைவர்சிறைவண்டறைபூஞ்சாரலீங்கோய்மலையாரே. ௪

நொந்தசுடலைப்பொடிநீறணிவார்நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள்பலவுநிலகமழ்புன்சடைதாழப்
பந்தொண்விரலாள்பாகமாகப்படுகாட்டெரியாடு
மெந்தமடிகள்கடிகொள்சாரலீங்கோய்மலையாரே. ரு

நீருரகலமுடையார்நிறையார்கொன்றையரவோடு
மாரூர்சடையாரயில்வெங்கணையாலவுணர்புரமூன்றுஞ்
சீருவெரிசெய்தேவர்பெருமான்செங்கணடல்வெள்ளை
யேரூர்கொடியாருமையாளோடுமீங்கோய்மலையாரே. கூ

வினையாயினதீர்த்தருளேபுரியும்விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல்மதியஞ்சூடுநம்பர்நலமல்கு
தனையார்கமலமலர்மேலுறைவான்றலையோடனலேந்து
மெனையாளுடையானுமையாளோடு மீங்கோய்மலையாரே.

பரக்கும்பெருமையிலங்கையென்னும்பதியிற்பொலிவாய
வரக்கர்க்கிறைவன்முடியுந்தோளுமணியார்விரல்தன்னா
னெருக்கியடர்த்துநிமலாபோற்றியென்றுநின்றேத்த
விரக்கம்புரிந்தாருமையாளோடுமீங்கோய்மலையாரே. அ

வரியார்புலியினுரிதோலுடையான்மலையான்மகளோடும்
பிரியாதுடனாயாடல்பேணும்பெம்மான்றிருமேனி
யரியோடயனுமறியாவண்ணமளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானீங்கோய்மலையாரே.

பிண்டியென்றுபெயராநிற்கும்பிணங்குஞ்சமணரு
மண்டைகலனாக்கொண்டுதிரியுமதில்தேரரு
முண்டிவயிறுருரைகள்கொள்ளாதுமையோடுடனாகி [ரே
இண்டைச்சடையாநிமையோர்பெருமானீங்கோய்மலையா

விழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னு
ளழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்த
னெழிலார்சுனையும்பொழிலும்புடைசூழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகழல்வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருப்பைஞ்ஞீலி - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடிலாடிகள்காடலா
லோரிடங்குறைவிலருடையர்கோவணங்
நீரிடஞ்சடைவிடையூர்திநித்தலும்
பாரிடம்பணிசெயும்பயில்பைஞ்ஞீலியே. க

மருவிலார்திரிபுரமெரியமால்வரை
பருவிலாக்குனித்தபைஞ்ஞீலிமேவலா
னுருவிலான்பெருமையையுளங்கொளாதவத்
திருவிலாரவர்களைத்தெருட்டலாகுமே. உ

அஞ்சுரும்பணிமலரமுதமாந்தித்தேன்
பஞ்சுரம்பயிற்றும்பஞ்ஞீலிமேவலான்
வெஞ்சரந்தனிலுமைவெருவவந்ததோர்
குஞ்சரம்படவுரிபோர்த்தகோள்கையே. ௩

கோடல்கள்புறவணிகொல்லைமுல்லைமேற்
பாடல்வண்டிசைமுரல்பயில்பைஞ்ஞீலியார்
பேடலராணலர்பெண்ணுமல்லதோ
ராடலையுகந்தவெம்மடிகள்வல்லரோ. ௪

விழியிலாநகுதலைவிளங்கிளம்பிறை
சுழியிலார்வருபுனற்சூழருங்கினான்
பழியிலார்பரவுபைஞ்ஞீலிபாடலான்
கிழியிலார்கேண்மையைக்கெடுக்கலாகுமே. ரு

விடையுடைக்கொடிவலனேந்திவெண்மழுப்
படையுடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவலான்
றுடியுடைக்கலையல்குலாளோர்பாகமாச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனல்லனே. ௬

தூயவன்தூயவெண்ணீறுமேனிமேற்
பாயவன்பாயபைஞ்ஞீலிகோயிலா
மேயவன்வேய்புரைதோளிபாகமா
வேயவனெனைச்செயுந்தன்மையென்கொலோ. எ

தொத்தினதோண்முடியுடையவன்றலை
பத்தினைநெரித்தபைஞ்ஞீலிமேவலான்
முத்தினைமுறுவல்செய்தாளோர்பாகமாப்
பொத்தினன்றிருந்தடிபொருந்திவாழ்மினே. ௮

நீருடைப்போதுறைவானுமாலுமாய்ச்
சீருடைக்கழலடிசென்னிகாண்கிலர்
பாருடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவிய
தாருடைக்கொன்றையந்தலைவர்தன்மையே. ௯

பீலியார்பெருமையும்பிடகர்நூன்மையுஞ்
சாலியாதவர்களைச்சாதியாததோர்
கோலியாவருவரைக்கூட்டியெய்தபைஞ்
ஞீலியான்கழலடிநினைந்துவாழ்மினே. ௰

கண்புனல்விளைவயற்காழிக்கற்பகந்
நண்புணரருமறைஞானசம்பந்தன்
பண்பினர்பரவுபைஞ்ஞீலிபாடுவா
ருண்பினவுலகினிலோங்கிவாழ்வரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

———

திருப்பாச்சிலாச்சிராமம் - முயலகன்றீர்த்தது.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடைசுற்றி
முடித்துப், புணிவளர் கொள்கையர் பாரிடம்சூழ வாரி
டமும் பலிதேர்வ, ரணிவளர் கோலமெலாஞ் செய்து
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற, மணிவளர்கண்ட ரோ
மங்கையை வாடமயில் செய்வதோவிவர் மாண்பே. ௧

கலைபுனைமானுரி தோலுடை யாடைகனல் சுடராலிவர்
கண்கள், தலையணிசென்னியர் தாரணிமார்பர்தம்மடிகள்
ளிவரென்ன, அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சிலாச்
சிராமத்துறைகின்ற, விலைபுனைவேலரோவேழையைவாட
விடர்செய்ததோரிவரீடே. ௨

வெஞ்சுடராடுவர் துஞ்சிருண்மாலை வேண்டுவர்பூண்பது
வெண்ணூல், நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர்
நம்மைநயந்து, மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சிலாச்சிராம
த்துறைகின்ற, செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்
சிதைசெய்வதோவிவர்சீரே. ௩

கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக் கனல்தருதூமதி
கண்ணி, புனமலர்மாலை யணிந்தழகாய புனிதர்கொலாமிவ
ரென்ன, வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சிலாச்சிராமத்
துறைகின்ற, மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்
செய்வதோவிவர்மாண்பே. ௪

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடைமேற்பு
னல்வைத்து, மோந்தைமுழாக்குழல் தாளமோர்வீணை மு
திரவோர்வாய்முரிபாடி, யாந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற, சாந்தணிமார்பரோ தையலைவா
டச் சதுர்செய்வதோவிவர்சார்வே. ௫

நீறுமெய்பூசிநிறைசடைதாழநெற்றிக்கண்ணாலுற்றுநோக்கி
யாறதுசூடியாடரவாட்டியைவிரற்கோவணவாடை
பாறருமேனியர்பூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
வேறதுவேறியரேழையைவாடவிடாசெய்வதோவிவரீடே ௬

பொங்கிளநாகமொரேகவடத்தோடாமைவெண்ணூல்பு
னைகொன்றை, கொங்கிளமாலைபுனைந்தழகாய குழகர்கொ
லாமிவரென்ன, வங்கிளமங்கையோர்பங்கினர்பாச்சிலாச்சி
ராமத்துறைகின்ற, சங்கொளிவண்ணரோதாழ்குழல்வாட
ச்சதிர்செய்வதோவிவர்சார்வே. ௭

எவ்வலத்தால்விசயற்கருள்செய்தேயிராவணனையீடழித்து
மூவரிலும்முதலாய்நடுவாய்மூர்த்தியையன்றிமொழியாள்
யாவர்களும்பரவும்மெழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
தேவர்கள்தேவரோசேயிழைவாடச்சிதைசெய்வதோவிவர்
சார்வே. ௮

மேலதுநான்முகனெய்தியதில்லைக்கீழதுசேவடிதன்னை
நீலதுவண்ணனுமெய்தியதில்லையெனவிவர்நின்றதுமல்லா
லாலதுமாமதிதோய்பொழிற்பாச்சி லாச்சிராமத்துறைகின்
ற, பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப் பழிசெய்வதோ
விவர்பண்பே. ௯

நாணொடுகூடியசாயினரேனுநகுவரவரிருபோது
மூணொடுகூடியவுட்குந்தகையாருரைகளவை கொளவேண்
டா, வாணொடுபெண்வடிவாயினபாச்சிலாச்சிராமத்துறைகி
ன்ற, பூணொடுமார்பரோபூங்கொடிவாடப் புனைசெய்வதோ
விவர்பொற்பே. ௰

அகமலியன்பொடு தொண்டர்வணங்கப் பாச்சிராமத்து
றைகின்ற, புகைமலிமாலைபுனைந்தழகாய புனிதர்கொலாமி
வரென்ன, நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞா
னசம்பந்தன், றகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சா
ரகிலாவினைதானே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்கா - திருவிராகம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வானைக்காவல்வெண்மதிமல்குபுல்குவார்சடைத்
தேனைக்காவிலின்மொழித்தேவிபாகமாயினா
னானைக்காவிலண்ணலையபயமாகவாழ்பவ
ரேனைக்காவல்வேண்டுவார்க்கேதுமேதமில்லையே. ௧

சேறுபட்டதண்வயற்சென்றுசென்றுசேணுலா
வாறுபட்டநுண்டுறையானைக்காவிலண்ணலார்
நீறுபட்டமேனியார்நிகரில்பாதமேத்துவார்
வேறுபட்டசிந்தையார்விண்ணிலெண்ணவல்லரே. ௨

தாரமாயமாதராளோர்பாகமாயினா
னீரமாயபுன்சடையேற்றதிங்கள்சூடினா
னாரமாயமார்புடையானைக்காவிலண்ணலை
வாரமாய்வணங்குவார்வல்வினைகண்மாயுமே. ௩

விண்ணினண்ணுபுல்கியவீரமாயமால்விடைச்
சுண்ணவெண்ணீறாடினான்சூலமேந்துகையினா
னண்ணல்கண்ணோர்மூன்றினானானைக்காவுகைதொழ
வெண்ணும்வண்ணம்வல்லவர்க்கேதமொன்றுமில்லையே.

வெய்யபாவங்கைவிடவேண்வீர்களாண்டசீர்
மைகொள்கண்டன்வெய்யதீமாலையாடுகாதலான்
கொய்யுவிண்டநாண்மலர்க்கொன்றைதுன்றுசென்னிஎம்
மையன்மேயபொய்கைசூழானைக்காவுசேர்மினே. ௫

நாணுமோர்வுசார்வுமுன்னகையுமுட்குநன்மையும்
பேணுறாதசெல்வமும்பேசநின்றபெற்றியா
னாணும்பெண்ணுமாகியவானைக்காவிலண்ணலார்
காணுங்கண்ணுமூன்றுடைக்கறைமிடறனல்லனே. ௬

கூறுமாலைநண்பகற்கூடிவல்லதொண்டர்கள்
பேருமூருஞ்செல்வமும்பேசநின்றபெற்றியான்
பாரும்விண்ணுங்கைதொழப்பாயுங்கங்கைசெஞ்சடை
யாரநீரோடேந்தினானானைக்காவுசேர்மினே ௭

பொன்னமல்குதாமரைப்போதுதாதுவண்டினம்
மன்னமல்குதண்டுறையானைக்காவிலண்ணலைப்
பன்னவல்லநான்மறைபாடவல்லதன்மையோர்
முன்னவல்லர்மொய்கழறன்னவல்லர்விண்ணையே. ௮

ஊனொடுண்டனன்றெனவூனொடுண்டறீதென
வானதொண்டரன்பினாற்பேசநின்றதன்மையான்
வானொடொன்றுசூடினான்வாய்மையாகமன்னிநின்
றானொடஞ்சுமாடினானானைக்காவுசேர்மினே. ௯

கையிலுண்ணுங்கையருங்கடுக்கடின்கழுக்களு
மெய்யைப்போர்க்கும்பொய்யரும்வேதநெறியையறிகிலார்
தையல்பாகமாயினான்றழலதுருவத்தானெங்க
ளையன்மேயபொய்கைசூழானைக்காவுசேர்மினே. ௰

ஊழியூழிவையகத்துயிர்கடோற்றும்வானொடும்
ஆழியானுங்காண்கிலாவானைக்காவிலண்ணலைக்
காழிஞானசம்பந்தன்கருதிச்சொன்னபத்திவை
வாழியாகக்கற்பவர்வல்வினைகண்மாயுமே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்கா - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மழையாமிடறாமழுவாளுடையா
யுழையார்கரவாவுமையாள்கணவா
விழவாரும்வெண்ணாவலின்மேவியவெம்
மழகாவெனுமாயிழையாளவனே. ௧

கொலையார்கரியின்னுரிமூடியனே
மலையார்சிலையாவளைவித்தவனே
விலையாலெனையாளும்வெண்ணாவலுளாய்
நிலையாவருளாயெனுநேரிழையே. ௨

காலாலுயிர்காலனைவீடுசெய்தாய்
பாலோடுநெய்யாடியபால்வண்ணனே
வேலாடுகையாயெம்வெண்ணாவலுளா
யாலார்நிழலாயெனுமாரிழையே. ௩

சுறவக்கொடிகொண்டவனீறதுவா
யுறநெற்றிவிழித்தவெமுத்தமனே
விறன்மிக்ககரிக்கருள்செய்தவனே
யறமிக்கதுவென்னுமெனாயிழையே. ௪

செங்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோ
னங்கட்கருணைபெரிதாயவனே
வெங்கண்விடையாயெம்வெண்ணாவலுளா
யங்கத்தயர்வாயினளாயிழையே. ௫

குன்றேயமர்வாய்கொலையார்புலியின்
றன்றோலுடையாய்சடையாய்பிறையாய்
வென்றாய்புரமூன்றைவெண்ணாவலுளே
நின்றாயருளாயெனுநேரிழையே. ௬

மலையன்றெடுத்தவரக்கன்முடிதோ
டொலையவ்விரலூன்றியதூமழுவா
விலையில்லெனையாளும்வெண்ணாவலுளா
யலசாமனல்காயெனுமாயிழையே. ௭

திருவார்தருநாரணனான்முகனு
மருவாவெருவாவழலாய்நிமிர்ந்தாய்
விரையாரும்வெண்ணாவலுண்மேவியவெம்
மரவாவெனுமாயிழையாளவளே. ௮

புத்தர்பலரோடமண்பொய்த்தவர்க
ளொத்தவ்வுரைசொல்லிவையோரகிலார்
மெய்த்தேவர்வணங்கும்வெண்ணாவலுளா
யத்தாவருளாயெனுமாயிழையே. ௯

வெண்ணாவலமர்ந்துறைவேதியனைக்
கண்ணார்கமழ்காழியர்தந்தலைவன்
பண்ணோடிவைபாடியபத்தும்வல்லார்
விண்ணோரவரேத்தவிரும்புவரே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - திருவிராகம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. ௧

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
வொட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. ௨

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. ௩

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீமுழங்கழ
லதிரவீசியாடுவாயழகனீபுயங்கனீ
மதுரநீமணாளநீமதுரையாலவாயிலாய்
சதுரனீசதுமுகன்கபாலமேந்துசம்புவே. ௪

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. ௫

பொன்றயங்கிலங்கொளிநலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதென்னியமமே. ௬

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்சோதியுள்ளோர்சோதியாய்
கீதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலா
லோதிவந்தவாய்மையாலுணர்ந்துரைக்கலாகுமே. ௭

கறையிலங்குகண்டனேகருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத்தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. ௮

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறுங்
கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
தீவணம்மலர்மிசைத்திசைமுகனுமாலுநின்
றூவணமளக்கிலார்துளக்கமெய்துவார்களே. ௯

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும் [னார்
போற்றிசைத்துநின்கழற்புகழ்துபுண்ணியங்கொ
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னநன்மையே.

பேரியநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
லாயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாயதேவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர்ப்பெருமணம் - பண் - அந்தாளிகுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்தில
சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே. ௧

தருமணலோதஞ்சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டுபாவைநல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான்பெண்ணோர்பாகங்கொண்டானே. ௨

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர்ப்பெருமணமேவிநின்
றின்புறுமெந்தையிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லர்தொண்டுசெய்வாரே. ௩

வல்லியந்தோலுடையார்ப்பதுபோர்ப்பது
சொல்லியல்வேழத்துரிவிரிகோவண
நல்லியலார்தொழுநல்லூர்ப்பெருமணம்
புல்கியவாழ்க்கையெம்புண்ணியனார்க்கே. ௪

எறுகந்தீரிடுகாட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்நிரையார்விரிதேன்கொன்றை
நாறுகந்தீர்திருநல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமைகூறுகந்தீரே. ரு

சிட்டப்பட்டார்க்கெளியான்செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னியான்பதியாவது
நட்டக்கொட்டாட்டறாநல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்தீராலெம்பிரானீரே. சு

மேகத்தகண்டனெண்டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய்புலித்தோலொடுபந்தித்த
நாகத்தநல்லூர்ப்பெருமணத்தானல்ல
போகத்தன்யோகத்தையேபுரிந்தானே. எ

தக்கிருந்தீரன்றுதளாலரக்கனை
யுக்கிருந்தொல்கவுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்றுநல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப்போக்கருளீரே. அ

எலுந்தண்டாமரையானுமியல்வுடை
மாலுந்தம்மாண்பறிகின்றிலர்மாமறை
நாலுந்தம்பாட்டென்பர்நல்லூர்ப்பெருமணம்
போலுந்தங்கோயில்புரிசடையார்க்கே. கூ

ஆதரமணொடுசாக்கியர்தாஞ்சொல்லும்
பேதைமைகேட்டுப்பிணக்குறுவீர்வம்மி
னாதனைநல்லூர்ப்பெருமணமேவிய
வேதனதாடொழவீடெளிதாமே. ௰

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்
பெரும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருத்தருமபுரம் - பண் - யாழ்மூரி.

திருச்சிற்றம்பலம்.

மாதர்மடப்பிடியு-மட-வன்னமுமன்னதோர்
நடை யுடைம் மலை மக-டுணையெனமகிழ்வர்
பூதவினப்படைநின்-றிசை-பாடவுமாடுவ
ரவர் படர் சடை நெடு-முடியதோர்புனலர்
வேதமோடேழிசைபா-டுவ-ராழ்கடல்வெண்டிரை
யிறைந் நுரை கரை பொருது-விம்மிநின்றயலே
தாதவிழ்புன்னைதயங் - கும - லர்ச்சிறைவண்டறை
யெழில் பொழில் குயில் பயில்-தருமபுரம்பதியே. க

பொங்குநடைப்புகலில் - விடை - யாமவரூர்திவெண்
பொடி யணி தடங் கொண்மார்பு - பூநூணல்புரள
மங்குலிடைத்தவழு - மதி - சூடுவராடுவர்
வளங் கிளர் புன லரவம் - வைகியசடையர்
சங்குகடற்றிரையா - லுதை - யுண்டுசரிந்திரிந் [மே
தொசிந் தசைந் திசைந்து சேரும் - வெண்மணற்குவை
றங்குகதிர்மணிநித் - தில - மெல்லிருளொல்கநின்
றிலங் கொளிர் நலங் கெழிற்-றருமபுரம்பதியே. உ

விண்ணுறுமால்வரைபோல் - விடை - யேறுவராருசூ
டுவர் விரி சுரி யொளிகொள்-தோடுநின்றிலங்கக்
கண்ணுறநின்றொளிருங் - கதிர்-வெண்மதிக்கண்ணியர்
கழிந் தவ ரழிந்திடு-மூடைதலைகலனுப்
பெண்ணுறநின்றவர்தம் - முரு - வம்மயன்மால்தொழ
வரி-வையைப் பிணைந் திணைந் - தணைந் ததும்பிரியார்
தண்ணிதழ்முல்லையொடெண்-ணிதழ்-மவ்வன்மருங்கலர்
கருங் கழிந் நெருங் குறற் - றருமபுரம்பதியே. ௩

பொன்னெடுநன்மணிமா - ளிகை - சூழவிழவம்மலி
பொருபுனல் திருவமர் - புகலியென்றுலகிற்
றன்னெடுநேர்பிறவில் - பதி - ஞானசம்பந்தனஞ்
துசெந் தமிழ்த் தடங்கடற் - றருமபுரம்பதியைத்
பின்னெடுவார்சடையிற் - பிறை - யும்மரவும்முடை
யவன் பிணை துணை கழல்கள் - பேணுதலுரியா
ரின்னெடுநன்னுலகெய் - துவ - ரெய்தியபோகமு
மூறுவர்களிடர் பிணி - துயரணைவிலரே.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் பதிகம்

முற்றிற்று.

திருநாவுக்கரசுசுவாமி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

சரித்திரம்.

———*———

போற்றுதிருவாமூரில் வேளாண்டொன்மைப்
 பொருவில்குறுக் கையரதிபர்புகழனார்பான்
மாற்றருமன்பினிற்றிலத வதியாமாது
 வந்துதித்தபின்பு மருணீக்கியாருந்
தோற்றியமண்சமயமுறு துயரநீங்கத்
 துணைவரருடரவந்த சூலைநோயாற்
பாற்றருநீளிடரெய்திப் பாடலிபுத்திரத்திற்
 பாழியொழித்தரனதிகைப் பதியில்வந்தார்.

வந்துதமக்கையரரு ளானீறுசாத்தி
 வண்டமிழானோய்தீர்ந்து வாக்கின்மன்னாய்
வெந்தபொடிவிடம்வேழம் வேலைநீந்தி
 வியன்சூலங்கொடியிடபம் விளங்கச்சாத்தி
யந்தமிலப்பூதிமக னரவுமாற்றி
 யருட்காசுபெற்றுமறை யடைப்புநீக்கிப்
புந்திமகிழ்ந்தையாற்றிற் கைலைகண்டு
 பூம்புகலூரரன்பாதம் பொருந்தினாரே.

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரில் வாழும் வேளாளர்மரபு குறுக்கையர்குடியில் புகழனாரும் மாதினியாருஞ் செய்த தவத்தால் திருவவதாரம்செய்து, மருணீக்கியாரென்னும் பிள்ளைத்திருநாமம் பெற்றுச் சகலகலாவல்லவராகி அநேக தருமங்களைச்செய்து பின்னர்துறவியாகிச் சமணசமயத்தில் பிரவேசித்துத் தருமசேனரென்ற நாமத்தோடுந் தலைமை பெற்றிருக்கையில், தமக்கையாரா

இய திலதவதியார் விண்ணப்பத்தின்படி சிவபிரானருளால் சூலைநோய்வர அச்சமய மந்திரத்தால் அச்சூலை நீங்காமல் திருவதிகையைச் சேர்ந்து விபூதிதரித்துச் சிவகடாக்ஷத்தால் தேவாரம் அருளிச்செய்து, சூலைநீங்கப்பெற்றுத் திருநாவுக்கரசு எனச் சிவபெருமானால் திருநாமமளித்தருளப் பெற்றுச் சமணர்கள் வஞ்சனையாலிட்ட நீற்றறைகுளிரவும், பாலோடு கலந்திட்ட விஷந்தணியவும், கொல்லும்படி ஏவிய யானை வணங்கிச் சமணரைக் கொல்லவும், கடலிற்சேர்த்துக் கட்டியிட்ட கற்றூண்மிதக்கவும், தேவாரம் திருவாய்மலர்ந்தருளியும், சமணர்கள் பரிசதோஷம்நீங்கும்படித் திருத்தோளில் சூலமுத்திரையும் இடபமுத்திரையும் திருப்பெண்ணாகடத்தில் தரிக்கப்பெற்றருளியும், திங்களூரில் அப்பூதியடிகள் மூத்தமகனார் பாம்புகடித்து இறக்கத் தேவாரத்தால் உயிர்பெறும்படி செய்தருளியும், திருவீழிமிழலையில் பஞ்சகாலத்தில் மிழலை நாதரிடத்தில் படிக்காசுபெற்று அடியவர்க்கமுதுசெய்வித்தருளியும், வேதாரணித்தில் வேதங்களால் மூடப்பட்டிருந்த திருக்கோயில் கபாடத்தைத் தேவாரத்தால் திறப்பித்தருளியும், திருப்பைஞ்ஞீலியில் சிவபிரானால் கட்டமுது தந்தருளப்பெற்றும், திருக்கயிலாயத்தில் சிவபெருமானது திருவோலக்கம் தரிசிக்கவேண்டிச்சென்று சிவபெருமான் கட்டளைப்படிமீண்டு திருவையாற்றில் அத்திருவோலக்கம் தந்தருளத்தரிசித்தருளியும் (௮௧) வது ஆண்டில் திருப்பூம்புகலூரில் சித்திரை மாதம் சதய நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஆளுடைய திருவருளால் திருவடியிற் கலந்தருளினர். சுபம்.

திருச்சிற்றம்பலம்.

———

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

தேவாரத்திரட்டு.

——()(*)()——

திருவையாறு-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடகிலேனடிநாயேன்வேண்டியக்காலியாதொன்று
மிடைகிலேனமணர்கள்தமரவுரைகேட்டலமந்தேன்
றொடர்கின்றேனுன்னுடையதூமலர்ச்சேவடிகாண்பா
ணடைகின்றேனையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௧

செம்பவளத்திருவுருவர்திகழ்சோதிக்குழைக்காதர்
கொம்பமருங்கொடிமருங்கிற்கோல்வளையாளொருபாகர்
வம்பவிழுமலர்க்கொன்றைவளர்சடைமேல்வைத்துகந்த
அம்பவளவையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௨

நணியானேசேயானேநம்பானேசெம்பொன்னின்
றணியானேதோலானேசுண்ணவெண்ணீற்றானே
மணியானேவானவர்க்குமருந்தாகிப்பிணிதீர்க்கும்
அணியானேயையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௩

ஊழித்தீயாய்நின்றாயுள்குவாருள்ளத்தாய்
வாழித்தீயாய்நின்றாய்வாழ்த்துவார்வாயானே
பாழித்தீயாய்நின்றாய்படர்சடைமேற்பனிமதிய
மாழித்தீயையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௪

சடையானேசடையிடையேதவழுந்தண்மதியானே
விடையானேவிடையேறிப்புரமெரித்தவித்தகனே
யுடையானேயுடைதலைகொண்டூரூரன்பலிக்குழலு
மடையானவையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௫

நீரானேதீயானேநெதியானேகதியானே
யூரானேயுலகானேயுடலானேயுயிரானே
பேரானேபிறைசூடிபிணிதீர்க்கும்பெருமானென்
றோராதவையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௬

கண்ணானாய்மணியானாய்கருத்தானாய்அருத்தானா
யெண்ணானாயெழுத்தானாயெழுத்தினுக்கோரியல்பானாய்
விண்ணானாய்விண்ணிடையேபுரமெரித்தவேதியனே
யண்ணனவையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௭

மின்னானாயுருமானாய்வேதத்தின்பொருளானாய்
பொன்னானாய்மணியானாய்பொருகடல்வாய்முத்தானாய்
நின்னாரிருவர்க்குங்காண்பரியநிமிர்சோதி
யன்னானையையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௮

முத்திசையும்புனற்பொன்னிமொய்பவளங்கொழித்துந்தப்
பத்தர்பலர்நீர்மூழ்கிப்பலகாலும்பணிந்தேத்த
வெத்திசையும்வானவர்களெம்பெருமானென்றிறைஞ்சும்
அத்திசையாமையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௯

கருவரைசூழ்கடலிலங்கைக்கோமானைக்கருத்தழியத்
திருவிரலாலுதகரணஞ்செய்துகந்தசிவமூர்த்தி
பெருவரைசூழ்வையகத்தார்பேர்நந்தியென்றேத்தும்
அருவரைசூழையாறற்காளாய்நானுய்ந்தேனே. ௰

திருச்சிற்றம்பலம்.

———

திருவையாறு - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௧

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவே
னாழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன் ௨

எரிப்பிறைக்கண்ணியினானையேந்திழையாளோடுபாடி
முரித்தவிலயங்களிட்டுமுகமலர்ந்தாடவருவேன்
அரித்தொழுகுவெள்ளருவியையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௩

பிறையிளங்கண்ணியினானைப்பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித்தோளைக்குளிரத்தொழுவேன்
அறையிளம்பூங்குயிலாலுமையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச்சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௪

மதிக்கண்ணியானையேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங்கைதொழுதாடாவருவே
னாடலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப்பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௫

தண்மதிக்கண்ணியினானைத்தையனல்லாளொடும்பாடி
உண்மெலிசிந்தையனாகியுணராவுருகாவருவே
னண்ணலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
வண்ணப்பகின்றிலொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௬

கடிமதிக்கண்ணியினானைக்காரிகையாளொடும்பாடி [வே
வடிவொடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்
னடியிணையார்க்குங்கழலானையாறடைகின்றபோது
இடிகுரலன்னதோரேனமிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௭

விரும்புமதிக்கண்ணியானைமெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்துபெறுமலர்கொய்யாவருவே
னருங்கலம்பொன்மணியுந்துமையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக்கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௮

முற்பிறைக்கண்ணியினானைமொய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கையிறறுக்கில்லேன்பாடியுமாடாவருவேன்
அற்றருள்பெற்றுநின்றாரோடையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடிநாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௯

திங்கண்மதிக்கண்ணியானைத்தேமொழியாளொடும்பாடி
எங்கருணல்குங்கொலெந்தைஎனக்கினியென்னவருவேன்
அங்கிளமங்கையராடுமையாறடைகின்றபோது
பைங்கிளிபேடையொடாடிப்பறந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௰

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றேன்
அளவுபடாததோரன்போடையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். ௰௧

திருச்சிற்றம்பலம்.

———

திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வானே. ௧

கண்டகங்காள்முண்டகங்காள்கைதைகாள்நெய்தல்காள்
பண்டரங்கவேடத்தன்பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலாந்தடமூழ்கிமற்றவனென்றளிர்வண்ணங்
கொண்டநாள்தானறிவான்குறிக்கொள்ளாதொழிவானே.

மனைக்காஞ்சியிளங்குருகேமறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாமுரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள்சொற்றூதாய்ச்சோர்வாளே.

புதியையாயினியையாம்பூந்தென்றால்புறங்காடு
பதியாவதிதுவென்றுபலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனைமதித்திட்டமதிக்கங்கை
விதியாளனென்னுயிர்மேல்விளையாடல்விடுத்தானே. ௪

மண்பொருந்திவாழ்பவர்க்குமாதீர்த்தவேதியர்க்கும்
விண்பொருந்துதேவர்க்கும்வீடுபேறாய்நின்றானைப்
பண்பொருந்தவிசைபாடும்பழனஞ்சேரப்பனையென்
கண்பொருந்தும்போழ்தத்துங்கைவிடநான்கடவேனே.

பொங்கோதமால்கடலிற்புறம்புறம்போயிரைதேருஞ்
செங்கால்வெண்மடநாராய்செயற்படுவதறிவேனே
னங்கோலவளைகவர்ந்தானணிபொழில்சூழ்பழனத்தான்
தங்கோலநறுங்கொன்றைத்தாரருளாதொழிவானே. ௬

துணையாரமுயங்கிப்போய்த்துறைசேருமடநாராய்
பணையாரவாரத்தான்பாட்டோவாப்பழனத்தான்
கணையாரவிருவிசும்பிற்கடியரணம்பொடிசெய்த
இணையாரமார்பனென்னெழினலமுண்டிகழ்வானே. ௭

கூவைவாய்மணிவரன்றிக்கொழித்தோடுங்காவிரிப்பூம்
பாவைவாய்முத்திலங்கப்பாய்ந்தாடும்பழனத்தான் [டை
கோவைவாய்மலைமகள்கோன்கொல்லேற்றின்கொடியா
பூவைகாள்மழலைகாள்போகாதபொழுதுளதே. ௮

புள்ளிமான்பொறியரவப்புள்ளுயர்த்தான்மணிநாகப்
பள்ளியான்றொழுதேத்தவிருக்கின்றபழனத்தா
னுள்குவார்வினைதீர்க்குமென்றுரைப்பருலகெல்லாங்
கள்ளியேனுனிவற்கென்கனவளையுங்கடவேனே. ௯

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பறந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்பும்மப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. ௰

திருச்சிற்றம்பலம்.

———

விடந்தீர்த்ததிருப்பதிகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர்சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுயரும்மதிசூடுவ
ரொன்றுகொலாமிடுவெண்டலைகையது
வொன்றுகொலாமவரூர்வதுதானே. ௧

இரண்டுகொலாமிமையோர்தொழுபாத
மிரண்டுகொலாமிலங்குங்குழைபெண்ணாண்
இரண்டுகொலாமுருவஞ்சிறுமான்மழு
விரண்டுகொலாமவரெய்தினதாமே. ௨

மூன்றுகொலாமவர்கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர்சூலத்தின்மொய்யிலை
மூன்றுகொலாங்கணைகையதுவின்னாண்
மூன்றுகொலாம்புரமெய்தனர்தாமே. ௩

நாலுகொலாமவர்தம்முகமாவன
நாலுகொலாஞ்சனனம்முதற்றோற்றமு
நாலுகொலாமவரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறைபாடினதாமே ௪

அஞ்சுகொலாமவராடரவின்படம்
அஞ்சுகொலாமவர்வெல்புலனாவன
வஞ்சுகொலாமவர்காயப்பட்டான்கணை
யஞ்சுகொலாமவராடினதாமே. ௫

ஆறுகொலாமவரங்கம்படைத்தன
வாறுகொலாமவர்தம்மகனார்முக
மாறுகொலாமவர்தார்மிசைவண்டின்கா
லாறுகொலாஞ்சுவையாக்கினதாமே. ௬

எழுகொலாமவரூழிபடைத்தன
எழுகொலாமவர்கண்டவிருங்கடல்
எழுகொலாமவராளுமுலகங்கள்
எழுகொலாமிசையாக்கினதாமே. ௭

எட்டுக்கொலாமவரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர்சூடுமினமல
ரெட்டுக்கொலாமவர்தோளிணையாவன
எட்டுக்கொலாந்திசையாக்கினதாமே. ௮

ஒன்பதுபோலவர்வாசல்வகுத்தன
ஒன்பதுபோலவர்மார்பினினூலிழை
யொன்பதுபோலவர்கோலக்குழற்சடை
யொன்பதுபோலவர்பாரிடந்தானே. ௯

பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுங்நெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே. ௰

திருச்சிற்றம்பலம்.

———

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. ௧

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
ஆண்டுகொண்டநீரேயருள்செய்திடும்
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே. ௨

அட்டமூர்த்தியதாகியவப்பரோ
துட்டர்வான்புரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந்திறப்பிம்மினே. ௩

அரியநான்மறையோதியநாவரோ
பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவணவாடைவிருத்தரோ
பெரியவான்கதவப்பிரிவிக்கவே. ௪

மலையில்நீடிருக்கும்மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ்சுங்கழலேத்தரோ
விலையின்மாமணிவண்ணவுருவரோ
தொலைவிலாக்கதவந்துணைநீக்குமே. ௫

பூக்குந்தாழைபுறணியருகெலாம்
ஆக்குந்தண்பொழில்சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியீரடிகேளுமை
நோக்கிக்காணக்கதவைத்திறவுமே. ௬

வெந்தவெண்பொடிபூசும்விகிர்தரோ
அந்தமில்லியணிமறைக்காடரோ
எந்தைநீயடியார்வந்திறைஞ்சிட
இந்தமாக்கதவம்பிணிநீக்குமே. ௭

ஆறுசூடுமணிமறைக்காடரோ
கூறுமாதுமைக்கீந்தகுழகரோ
ஏறதேறியவெம்பெருமானிந்த
மாறிலாக்கதவம்வலிநீக்குமே. ௮

சுண்ணவெண்பொடிபூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந்தேறும்பரமரோ
அண்ணலாதியணிமறைக்காடரோ
திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே. ௯

அரக்கனைவிரலாலடர்த்திட்டநீர்
இரக்கமொன்றிலீரெம்பெருமானீரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி
மென்னாவிகாற்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல(செய்யு
மின்னாறுமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே.

ஆவாசிறுத்தொண்டனென்னினைந்தாயென்றரும்பிணி
நோய், காவாதொழியிற் கலக்குமுன்மேற்பழி காதல்செய்
வார், தேவாதிருவடிநீறென்னைப்பூசுசெந்தாமறையின்
பூவார்கடந்தையுட்டூங்கானைமாடத்தெம்புண்ணியனே.

கடவுந்திகிரிக்கடவாதொழியக்கயிலையுற்றான்
படவுந்திருவிரலொன்றுவைத்தாய்பனிமால்வரைபோ[ங்க
லிட்டபம்பொறித்தென்னைஎன்றுகொள்ளாயிருஞ் சோலைதி
ட்டவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந்தத்துவனே. ௩

திருச்சிற்றம்பலம்.

கோயில் - திருவிருத்தம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருநட்டகண்டனை யண்டத்தலைவனைக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைச்சிற்றம்பலத்துப்
பெருநட்டமாடியைவானவர்கோனென்றுவாழ்த்துவனே.

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடந்தானடியவர்க்காச்
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
என்றுவந்தாயெனுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே. ௨

கன்மனவீர்கழியுங்கருத்தேசொல்லிக்காண்பதென்னே
நன்மனவர்நவிறில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
பொன்மலையில்வெள்ளிக்குன்றதுபோலப்பொலிந்திலங்கி
யென்மனமேயொன்றிப்புக்கனன்போந்தசுவடில்லையே.

சாடவெடுத்ததுதக்கன்றன்வேள்வியிற்சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனுன்முகனுந்
தேடவெடுத்ததுதில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
ஆடவெடுத்திட்டபாதமன்றோநம்மையாட்கொண்டதே. ௩

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியனசிந்திப்பவர்க்குச்சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவனமுத்திகொடுப்பனமொய்த்திருண்டு
பந்தித்துநின்றபழவினைதீர்ப்பனபாம்புசுற்றி
யந்திப்பிறையணிந்தாடுமையாறனடித்தலமே. ௧

இழித்தனவேழேழ்பிறப்புமறுத்தனவென்மனத்தே
பொழித்தனபோறெழிற்கூற்றையுதைத்தனபோற்றவர்க்கா
யிழித்தனதக்கன்கிளரொளிவேள்வியைக்கீழ்முன்சென்று
அழித்தனவாறங்கமானவையாறனடித்தலமே. ௨

நின்போலமரர்கணீண்முடிசாய்த்துநிமிர்த்துகுத்த
பைம்போதுழக்கிப்பவளந்தழைப்பனபாங்கறியா
வென்போலிகள்பறித்திட்டவிலையுமுகையுமெல்லா
மம்போதெனக்கொள்ளுமையனையாறனடித்தலமே. ௫

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளா வுள்ளத்தோர்கொடுமைவைத்துக், காம்பிலா மூழைபோலக் கருதிற்றேன்முகக்கமாட்டேன், பாம்பின்வாய்த்தேரைபோலப் பலபலநினைக்கின்றேனை, யோம்பிநீயுய்யக்கொள்ளா யொற்றியூ ருடைய கோவே. ௧

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணு
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே. ௨

திருச்சிற்றம்பலம்.

——*——

திருவையாறு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச்சடையுள்வைத்தார் கதிர்ப்பொறியரவும்வைத்தார், திங்களைத்திகழவைத்தார் திசைதிசைதொழவும்வைத்தார், மங்கையைப்பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தார், அங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே. ௧

பொடிதனைப்பூசவைத்தார் பொங்கும்வெண்ணூலும்வைத்
கடியதோர்நாகம்வைத்தார்காலனைக்காலில்வைத்தார் [தார்
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகம்வைத்தார்
அடியிணைதொழவும்வைத்தாரையனையாறனாரே. ௨

இரப்பவர்க்கீயவைத்தாரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங்கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக்கருளும்வைத்தாரையனையாறனாரே. ௩

திருச்சிற்றம்பலம்.

———

கோயில் - பெரியதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை யருமறையினக த்தானையணுவையார்க்கும், தெரியாததத்துவனைத் தேனை ப்பாலைத் திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக்,கரி யானைநான்முகனைக்கனலைக்காற்றைக் கனைகடலைக்குலவ ரையைக்கலந்துநின்ற, பெரியானைப்பெரும்பற்றப்புலியூரா னைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. ௧

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக் காவிரிசூழ் வலஞ்சுழியுங்கருதினானை, அற்றானையலர்ந்தார்க்கு மருள் செய்வானை யாரூரும்புகுவானையறிந்தோமன்றே, மற்றாரு ந்தன்னொப்பாரில்லாதானை வானவர்களெப்பொழுதும் வ ணங்கியேத்தப், பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. ௨

கருமானினுரியதளேயுடையாவீக்கிக் கனைகழல்கள் கலந்தொலிப்பவனல்கையேந்தி, வருமானத்திரடோள்கள் மட்டித்தாட வளர்மதிபஞ்சடைக்கணிந்துமானேர்நோக்கி அருமானவாண்முகத்தாளமர்ந்துகாண வமரர்கணமுடிவ ணங்கவாடுகின்ற, பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. ௩

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னையமரர்கடம் பெருமானையரனைமூவா, மருந்தமரர்க்கருள்புரிந்தமைந்தன் றன்னை மறிகடலுங்குலவரையும்மண்ணும்விண்ணும்,திருந் தொளியதாரகையுந்திசைகளெட்டுந் திரிசுடர்களோரிரண்

டும்பிறவுமாய, பெருந்தகையைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. ௪

அருந்துணையை யடியார்தமல்லறீர்க்கு மருமருந்தையக ன்ஞாலத்தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற் றும்விட்டு வான்புலன்களகத்தடக்கிமடவாரோடும், பொரு ந்துணைமேல்வரும்பயனைப்போகமாற்றிப்பொதுநீக்கித்தனை நினையவல்லோர்க்கென்றும்,பெருந்துணையைப்பெரும்பற்ற ப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. ௫

கரும்பமருமொழிமடவாள் பங்கன்றன்னைக் கனவயிரக் குன்றதனைக்காட்சியானை, அரும்பமரும்பூங்கொன்றைத்தா ரான்றன்னை யருமறையோடாறங்கமாயினானைச், சுரும்பம ருங்கடிபொழில்கள்சூழ்தென்னாரூர்ச் சுடர்க்கொழுந்தைத் துளக்கிலாவிளக்கைமிக்க, பெரும்பயனைப்பெரும்பற்றப்பு லியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. ௬

வரும்பயனையெழுநரம்பினோசையானைவரைசிலையாவா னவர்கள்முயன்றவாளி, அரும்பயஞ்சேயவுணர்புரமெரியக் கோத்தவம்மானையலைகடனஞ்சயின்றான்றன்னைச், சுரும்ப விழுங்குழன்மடவார்கடைக்கணோக்கிற், றுளங்காதசிந்தை யராய்த்துறந்தோருள்ளப், பெரும்பயனைப்பெரும்பற்றப்பு லியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. ௭

காரானையீருரிவைப் போர்வையானைக் காமருபூங்கச்சி யேகம்பன்றன்னை, யாரேனுமடியவர்கட்கணியான்றன்னை யமரர்களுக்கறிவரியவளவிலானைப், பரோரும்விண்ணோ ரும்பணியநட்டம் பயில்கின்றபரஞ்சுடரைப் பரனையெண் ணில், பேரானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநா ளெல்லாம்பிறவாநாளே. ௮

முற்றாதபான்மதியஞ்சூடினானை மூவுலகுந்தானாயமுத ல்வன்றன்னைச், செற்றார்கள்புரமூன்றுஞ்செற்றான்றன்னை த் திகழொளியமரகதத்தைத்தேனைப்பாலைக், குற்றாலத்தம ர்ந்துறையுங்குழகன்றன்னைக் கூத்தாடவல்லானைக்கோனை

ஞானம்,பெற்றார்கள் பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநா ளெல்லாம் பிறவாநாளே. ௯

காரொளியதிருமேனிச் செங்கண்மாலுங் கடிக்கமலத்திருந்தயனுங்காணாவண்ணம், சீரொளியதழற்பிழம்பாய் நின்றதொல்லைத் திகழொளியைச்சிந்தைதனைமயக்கந்தீர்க்கும், ஏரொளியையிருநிலனும் விசும்பும்விண்ணு மேழுலகுங்கடந்தண்டத்தப்பால்நின்ற, பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. ௰

திருச்சிற்றம்பலம்.

———

திருக்கருகாவூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

குருகாம்வயிரமாங்கூறுநாளாங் கொள்ளுங்கிழமையாங்கோளே தானும், பருகாவமிர்தமாம்பாலினெய்யாம் பழத்தினிரதமாம்பாட்டிற்பண்ணாம், ஒருகாலுமையாளோர்பாகனுமா மூண்ணின்றநாவிற்குரையாடியாம், கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங் கண்ணாங்கருகாவூரெந்தைதானே.

வித்தாமுளையாகும்வேரேதானும் வேண்டுமுருவமாம் விரும்பிநின்ற, பத்தாமடியார்க்கோர்பாங்கனுமாம் பானிறமாம்பரஞ்சோதிதானேயாகும், தொத்தாமமரர்கணஞ்சூழ்ந்துபோற்றத் தோன்றாதென்னுள்ளத்தி னுள்ளேநின்ற, கத்தாமடியேற்குக் காணாகாட்டுங் கண்ணாங்கருகாவூ ரெந்தைதானே. ௨

ஒருத்தாணமொன்னார் புரங்கள்மூன்று மொள்ளழலைமாட்டிபுடனேவைத்து, இருத்தானுமென்னான் முடிகள்பத்துமிசைந்தானுமின்னிசைகள்கேட்டானுகும், அறுத்தானுமஞ்சுமடக்கியங்கையாகாயமந்திரமுமானானுகும், கறுத்தானுங்காலனைக் காலால்வீழக் கண்ணாங்கருகாவூ ரெந்தைதானே. ௩

திருச்சிற்றம்பலம்.

திருஆவடுதுறை - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேயென்செல்வமே தேனேவானோர் செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற் சோதிமிக்க, உருவேயென்னுறவேயென் னூனேயூனினுள்ளமே யுள்ளத்தினுள்ளேநின்ற,கருவேயென்கற்பகமே கண்ணேகண்ணிற் கருமணியே மணியாடுபாவாய்காவாய், அருவாயவல்வினைநோயடையாவண்ணமாவடுதண்டுறையுறையுமமரரேறே. ௧

சிலைத்தார்திரிபுரங்கடீயில்வேவச் சிலைவளைவித்துமையவளை யஞ்சநோக்கிக், கலித்தாங்கிரும்பிடிமேற் கைவைத்தோடுங் களிறுரித்தகங்காளாவெங்கள்கோவே,நிலத்தாரவர்தமக்கேபொறையாய்நாளுநில்லாவுயிரோம்புநீதனேநான், அலுத்தேனடியேனையஞ்சலென்னா யாவடுதண்டுறையுறையுமமரரேறே. ௨

துறந்தார்தந் தூநெறிக்கட் சென்றேனல்லேன் றுணைமாலைசூட்டநான் றூயேனல்லேன், பிறந்தேனின்றிருவருளேபேசினல்லாற்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே, செறிந்தார்மதிலிலங்கைக் கோமான்றன்னைச் செறுவரைக்கீழடர்த்தருளிச் செய்கையெல்லாம், அறிந்தேனடியேனை யஞ்சலென்னா யாவடுதண்டுறையுறையுமமரரேறே. ௩

திருச்சிற்றம்பலம்.

——*——

திருவானைக்கா - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தாரெம்மாடுசும்மாடாமேவர்நல்லார், செத்தால்வந்துதவுவாரொருவரில்லைச் சிறுவிறகாற்றீமூட்டிச்செல்லாநிற்பர், சித்தாயவேடத்தாய்நீடுபொன்னித் திருவானைக்காவுடையசெல்வாவென்றன், அத்தாவுன்பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. ௧

ஊனாகியுயிராகியதனுணின்றவுணர்வாகிப்பிறவனைத்துநீயாய்நின்றாய், நானேதுமறியாமேயென்னுள்வந்து நல்லனவுந்தீயனவுங்காட்டாநின்றாய், தேனாருங்கொன்றையனேநின்றியூராய்திருவானைக்காவிலுறைசிவனேஞானம், ஆனாயுன்பொற்பாதமடையப்பெற்றாலலலகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. ௨

ஒப்பாயிவ்வுலகத்தோடொட்டிவாழ்வா னொன்றலாத் தவத்தாரோடுடனேநின்று, துப்பாருங்குறையடிசிறுத்தினத்துன்றிமறந்துதிரிவேனைக்காத்துநீவந்து, எப்பாலுநுண்ணுணர்வேயாக்கியென்னை யாண்டவனேயெழிலானைக்காவவானோர், அப்பாவுன்பொற்பாதமடையப்பெற்றா லலலகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. ௩

நினைத்தவர்கணெஞ்சுளாய்வஞ்சக்கள்வா நிறைமதியஞ்சடைவைத்தாயடையாதுன்பால், முனைத்தவர்கள்புரமூன்றுமெரியச்செற்றாய் முன்னானைத்தோல்போர்த்தமுதல்வாவென்றுங், கனைத்துவருமெருதேறுங்காளகண்டா, கயிலாயமலையாநின்கழலேசேர்ந்தேன், அனைத்துலகும்ஆள்வானேயானைக்காவா லலலகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. ௪

இம்மாயப்பிறப்பென்னுங்கடலாந்துன்பத் திடைச்சுழிப்பட்டிளைப்பேனையிளையாவண்ணங், கைம்மானமனத்துதவிக்கருணைசெய்து காதலருளவைவைத்தாய்காணநில்லாய், வெம்மானமதகரியினுரிவைபோர்த்த வேதியனேதென்னானைக்காவுன்மேய, அம்மானின்பொற்பாதமடையப்பெற்றாலலலலகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. ௫

உரையாரும்புகழானேயொற்றியூரா கச்சியேகம்பனே காரோணத்தாய், விரையாருமலர்தூவிவணங்குவார்பான் மிக்கானேயக்கரவமாரம்பூண்டாய், திரையாரும்புனற்பொன்னித்தீர்த்தமல்குதிருவானைக்காவிலுறைதேனேவானோர் அரையாவுன் பொற்பாதமடையப்பெற்றா லலலகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. ௬

மையாருமணிமிடற்றாய்மாதோர்கூறாய் மான்மறியுமாமழுவுமனலுமேந்துங், கையானேகாலனுடல்மாளச்செற்ற கங்காளாமுன்கோளும்விளைவுமானாய், செய்யானேதிருமேனியரியாய்தேவர் குலக்கொழுந்தே தென்னானைக்காவுண்மேய, ஐயாவுன்பொற்பாதமடையப்பெற்றா லலலகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. ௭

இலையாருஞ்சூலத்தாயெண்டோளானே யெவ்விடத்துநீயலாதில்லையென்று, தலையாரக்கும்பிடுவார்தன்மையானே தழன்மடுத்தமர்மேருக்கையில்வைத்த, சிலையானேதிருவானைக்காவுண்மேய தீயாடீசிறுநோயால்நலிவுண்டுள்ளம், அலையாதே நின்னடியே யடையப்பெற்றா லலலகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. ௮

விண்ணாரும்புனல்பொதிசெஞ் சடையாய்வேத நெறியானேயெறிகடலினஞ்சமுண்டாய், எண்ணாரும்புகழானேயுன்னையெம்மா னென்றென்றேநாவினிலெப் பொழுதுமுன்னிக், கண்ணாரக்கண்டிருக்கக்களித்தெப்போதுங்கடிபொழில்சூழ்தென்னானைக்காவுண்மேய, அண்ணாநின்பொற்பாதமடையப்பெற்றா லலலகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. ௯

கொடியேயும்வெள்ளேற்றாய் கூளிபாடக் குறட்பூதங் கூத்தாடநீயுமாடி, வடிவேயுமங்கைதனை வைத்தமைந்தா மதிலானைக்காவுளாய்மாகாளத்தாய், படியேயுங்கடலிலங்கைக்கோமான்றன்னைப் பருமுடியுந்திரடோளுமடர்த்துகந்த, அடியேவந்தடைந்தடிமையாகப்பெற்றா லலலகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. ௰

திருச்சிற்றம்பலம்.

முந்தியிருந்தாயு நீயேயென்று முன்கயிலைமேவினாய் நீயேயென்றும், நந்திக்கருள்செய்தாய்நீயேயென்று நடமாடிநள்ளாறநீயேயென்றும், பந்திப்பரியாயுநீயே யென்றும் பைஞ்ஞீலிமேவினாய்நீயே யென்றுஞ் சிந்திப்பரியாயுநீயே யென்று நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. ௩

தந்தைதாயில்லாதாய்நீயேயென்றுந் தலையார்கயிலாய நீயேயென்றும், எந்தாயெம்பிரானானாய்நீயேயென்றுமேகம்பத்தென்னீசனீயேயென்றும்; முந்தியமுக்கணாய்நீயேயென்றுமூவலூர்மேவினாய்நீயேயென்றும், சிந்தையாய்தேனாராய்நீயேயென்று நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்துருத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை நினையாவென்னெஞ்சைநினைவித்தானைக், கல்லாதனவெல்லாங் கற்பித்தானைக் காணாதனவெல்லாங்காட்டினானைச், சொல்லாதனவெல்லாஞ்சொல்லியென்னைத் தொடர்ந்திங்கடியேனையாளாக்கொண்டு, பொல்லாவென்னோய்தீர்த்தபுநிதன்றன்னைப் புண்ணியனைப்பூந்துருத்திகண்டேனானே. ௧

குற்றாலங்கோகரணமேவினானைக்கொடுங்கைக்கடுங்கூற்றைப்பாய்ந்தான்றன்னை, உற்றாலநஞ்சுண்டொடுக்கினானையணராவென்னெஞ்சையுணர்வித்தானைப், பற்றாலின்கீழங்கிருந்தான்றன்னைப் பண்ணார்ந்தவீணைபயின்றான்றன்னைப், புற்றாடரவார்த்தபுநிதன்றன்னைப் புண்ணியனைப்பூந்துருத்திக்கண்டேனானே. ௨

எனக்கென்றுமினியானையெம்மான்றன்னை யெழிலாருமேகம்பமேயான்றன்னை, மனக்கென்றும் வருவானைவஞ்சர்நெஞ்சி னில்லானைநின்றியூர்மேயான்றன்னைத், தனக்கென்றுமடியேனையாளாக்கொண்டசங்கரனைச்சங்கவார்குழையான்றன்னைப், புனக்கொன்றைத்தாரணிந்த புநிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. ௩

மறுத்தானை மலைகோத்தங் கெடுத்தான்றன்னை மணிமுடியோடிருபதுதோணெரியக்காலா, லிறுத்தானையெழுநரம்பினிசைகேட்டானையெண்டிசைக்குங்கண்ணானான்சிரமேலொன்றை; யறுத்தானையமரர்களுக்கமுதீந்தானையாவர்க்குந்தாங்கொணாநஞ்சமுண்டு, பொறுத்தானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருமழபாடி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நீறேறுதிருமேனி யுடையான்கண்டாய் நெற்றிமேலொற்றைக்க ணிறைந்தான்கண்டாய், கூறாக உமைபாகங் கொண்டான்கண்டாய் கொடியவிடமுண்டிருண்டகண்டன்கண்டாய், யேறேறியெங்கெங்குந்திரிவான்கண்டா யேழுலகுமேழ்மலையுமானான்கண்டாய், மாறானார்தம்மரணமட்டான்கண்டாய் மழபாடிமன்னுமணாளன்றானே. ௧

தாமரையான்றன்றலையைச் சாய்த்தான்கண்டாய் தகவுடையார்நெஞ்சிருக்கை கொண்டான்கண்டாய், பூமலரானேத்தும்புநிதன்கண்டாய் புணர்ச்சிப்பொருளாகிநின்றான்கண்டாய், எமருவுவெஞ்சிலையொன்றேந்திகண்டா யிருளார்ந்தகண்டத்திறைவன்கண்டாய், மாமருவுங்கலைகையிலேந்திகண்டாய் மழபாடிமன்னுமணாளன்றானே. ௨

ஒருசுடராயுலகேழுமானான்கண்டா யோங்காரத்துட்பொருளாய்நின்றான்கண்டாய் விரிசுடராய் விளங்கொளியாய்நின்றான்கண்டாய் விழவொலியும்வேள்வொலியுமானான்கண்டா, யிருசுடர்மீதோடாவிலங்கைக்கோனை யீடழியவிருபதுதோளிறுத்தான்கண்டாய், மருசுடரின்மாணிக்கக்குன்றுகண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. ௩

திருவீழிமிழலை - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப்போர்வையானைப் புலியதளேயு
டையாடைபோற்றினானைப், பாரானைமதியானைப்பகலானா
னைப் பல்லுயிராய்நெடுவெளியாய்ப்பரந்துநின்ற, நீரானைக்
காற்றானைத்தீயானானை நினையாதார்புரமெரிய நினைந்ததெ
ய்வத், தேரானைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெ
றிக்கேசேர்கின்றாரே. க

சவந்தாங்குமயானத்துச்சாம்பலென்பு தலையோடுமயிர்
க்கயிறுதரித்தான்றன்னைப், பவந்தாங்குபாசுபதவேடத்தா
னைப்பண்டமரர்கொண்டுகந்த வேள்வியெல்லாங், கவர்ந்
தானைக்கச்சியேகம்பன்றன்னைக் கழலடைந்தான்மேற்கறுத்
தகாலன்வீழச், சிவந்தானைத் திருவீழிமிழலையானைச்சேரா
தார்தீநெறிக்கேசேர்கின்றாரே. உ

அறுத்தானையயன்றலைக ளஞ்சிலொன்றை யஞ்சாதே
மலையெடுத்தவரக்கன்றோள்க,ளிறுத்தானையெழுநரம்பினி
சைகேட்டானை யிந்துவினைத் தேய்த்தானையிரவிதன்பற்,
பறித்தானைப் பகீரதற்காவானோர்வேண்டப் பரந்திழியும்
புனற்கங்கை பனிபோலாகச்,செறுத்தானைத்திருவீழிமிழலை
யானைச் சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. ங

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருமணியைத்தித்திக்குந்தேனைப்பாலைத் தீங்கரும்பி
னின்சுவையைத் தெளிந்ததேறல், குருமணியைக் குழன
மொந்தைதாளம்வீணை கொக்கரையின்சச்சரியின்பாணியா
னைப், பருமணியைப்பவளத்தைப்பசும்பொன்முத்தைப்பரு
ப்பதத்திலருங்கலத்தைப் பாவந்தீர்க்கும், அருமணியையா
ரூரிலம்மான்றன்னையறியாதடிநாயேனயர்த்தவாறே. க

பொன்னேபோற்றிருமேனியுடையான்றன்னைப் பொ
ங்குவெண்ணூலானைப்புனிதன்றன்னை, மின்னானமின்னி
டையாள்பாகன்றன்னை வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தா
ன்றன்னைத், தன்னானைத்தன்னொப்பாரில்லாதானைத்தத்து
வனையுத்தமனைத்தழல்போல்மேனி, யன்னானையாரூரிலம்
மான்றன்னையறியாதடிநாயேனயர்த்தவாறே. உ

ஏற்றானையேழுலகுமானான்றன்னை யேழ்கடலுமேழ்ம
லையுமானான்றன்னைக், கூற்றானைக்கூற்றமுதைத்தான்றன்
னைக்கொடுமழுவாள்கொண்டதோர்கையான்றன்னைக், கா
ற்றானைத்தீயானைநீருமாகிக் கடிகமழும்புன்சடைமேற் கங்
கைவெள்ள, ஆற்றானையாரூரிலம்மான்றன்னையறியாதடிநா
யேனயர்த்தவாறே. ங

முத்தினைமணிதன்னைமாணிக்கத்தை மூவாதகற்பகத்
தின்கொழுந்துதன்னைக்,கொத்தினைவயிரத்தைக்கொல்லே
றூர்ந்துகோளரவொன்றாட்டுங்குழகன்றன்னைப், பத்தனைப்
பத்தர்மனத்துளானைப் பருதிபோற்றிருமேனியுடையான்ற
ன்னை, அத்தனையாரூரி லம்மான்றன்னை யறியாதடி நாயே
னயர்த்தவாறே. ச

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இடர்கெடுமாறெண்ணுதியேனெஞ்சேநீவாவிண்டோ
ளிசேர் கங்கைச்சடையாயென்றுஞ்சுடர்மாளியாயுள்விளங்
குசோதியென்றுந் தூநீறுசேர்ந்திலங்கு தோளாயென்றுங்,
கடல்விடமதுண்டிருண்டகண்டாவென்றுங் கலைமான்மறி
யேந் துகையாவென்றும், அடல்விடையாயாரமுதேயாதி
யென்றுமாரூராவென்றென்றேயலறாநில்லே. க

நிலைபெறுமாறெண்ணுதியே னெஞ்சேநீவா நித்தலு
மெம்பிரானுடையகோயில்புக்குப், புலர்வதன்முன்னலகிட்

டுமெழுக்குமிட்டுப்பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித்,த
லைபாரக்கும் பிட்டுக்கூத்துமாடிச்சங்கராசய போற்றிபோற்
றியென்றும், அலைபுனல்சேர்செஞ்சடை யெம்மாதீயென்று
மாரூராவென்றென்றேயலறுநில்லே. உ

பற்றிநின்றபாவங்கள்பாற்றவேண்டிற் பரகதிக்குச்செ
லவதொருபரிசுவேண்டிற்,சுற்றிநின்றசூழ்வினைகள் வீழ்க்க
வேண்டிற்சொல்லுகேன் கேணெஞ்சேதுஞ்சாவண்ணம், உ
ற்றவருமுறுதுணையுயேயென்று முன்னையலாலொருதெய்
வமுள்கேனென்றும், புற்றரவக்கச்சார்த்தபுனிதாவென்றும்
பொழிலாரூராவென்றேபோற்றுநில்லே. ங

புலன்களைந்தாலாட்டுண்டுபோது போக்கிப்புறம்புற
மேதிரியாதேபோதுநெஞ்சே, சலங்கொள்சடைமுடியுடை
யதலைவாவென்றுந்தக்கன்செய்பெருவேள்வி தகர்த்தாயெ
ன்றும்இலங்கையர்கோன் சிரநெரித்தவிறைவாவென்றுமெ
ழிலாரூரிடங்கொண்டவெந்தாயென்றுநலங்கொளடியென்
றலைமேல் வைத்தாயென்றுநாடோறுநவின்றேத்தாய் நன்
மையாமே. ச

திருச்சிற்றம்பலம்.

———

திருவாரூர் - திருத்தாண்டகம்,

திருச்சிற்றம்பலம்.

ஒருவனையுலகேத்தநின்றநாளோ வோருருவேமூவுருவ
மானநாளோ, கருவனாய்க்காலனை முன்காய்ந்தநாளோகாம
னையுங்கண்ணழலால்விழித்தநாளோ, மருவனாய்மண்ணுவி
ண்ணுந்தெரித்தநாளோமான்மறிக்கையேந்தியோர்மாதோ
ர்பாகர், திருவினள்சேர்வதற்குமுன்னேபின்னேதிருவாரு
ர்கோயிலாக்கொண்டநாளே. க

மலையார்பொற்பாவையொடுமகிழ்ந்தநாளோ வானவ
ர்வலியமுதமூட்டியந்நாள் நிலைபேறுபெறுவித்துநின்றநா
ளோநினைப்பரிய தழற்பிழம்பாய்நிமிர்ந்தநாளோ, அலைச

மேயலைகடனஞ்சுண்டநாளோவமரர்கணம்புடைசூழவிருந்
தநாளோ, சிலையான்முப்புரமெரித்தமுன்னேபின்னேதிரு
வாரூர்கோயிலாக்கொண்டநாளே. உ

பாடகஞ்சேர் மெல்லடிநற்பாவையாளு நீயும்போய்ப்
பார்தனதுபலத்தைக்காண்பான், வேடனாய்வில்வாங்கியெ
ய்தநாளோ விண்ணவர்க்குங்கண்ணவனாய் நின்றநாளோ,
மாடாமாடுமாளிகைகண் மல்குதில்லை மணிதிகழுமம்பலத்
தேமன்னிக்கூத்தை, ஆடுவான்புகுவதற்கு முன்னேபின்
னே வணியாரூர்கோயிலாக் கொண்டநாளே. ங

ஓங்கியுயர்ந்தெழுந்துநின்றநாளோவோருகம்போலே
ழுகமாய்நின்றநாளோ, தாங்கியசீர்த்தலையானவானோர்செ
ய்த தக்கன்றன்பெருவேள்விதகர்த்தநாளோ, நீங்கியநீர்த்
தாமரையானெடுமாலோடு நில்லாயெம்பெருமானேயென்
றங்கேத்தி, வாங்கிமதிவைப்பதற்குமுன்னேபின்னே வள
ராரூர்கோயிலாக் கொண்டநாளே. ச

பாலனாய்வளர்ந்திலாப்பான்மையானே பணிவார்கட்
கங்கங்கேபற்றானனே, நீலமாமணிகண்டத்தெண்டோளா
னே நெருநலாயின்றாகிநாளையாகுஞ், சீலமேசிவலோகநெ
றியேயாகுஞ் சீர்மையேகூர்மையேகுணமேநல்ல, கோலநீ
கொள்வதற்கு முன்னேபின்னே குளிராரூர் கோயிலாக்
கொண்டநாளே. ரு

திறம்பலவும்வழிகாட்டிச்செய்கைகாட்டிச் சிறியையா
ய்ப்பெரியையாய்நின்றநாளோ, மறம்பலவுமுடையாரைம
யக்கந்தீர்த்து மாமுனிவர்க்கருள்செய்தங் கிருந்தநாளோ,
பிறங்கியசீர்ப்பிரமன்றன்றலைகையேந்திப் பிச்சையேற்று
ண்டுழன்றுநின்றநாளோ, அறம்பலவுமுரைப்பதற்கு முன்
னேபின்னே-வணியாரூர்கோயிலாக்கொண்டநாளே. சு

நிலந்தரத்துநீண்டுருவ மானநாளோ நிற்பனவுநடப்ப
னவுநீயேயாகிக், கலந்துரைக்கக் கற்பகமாய்நின்றநாளோ
காரணத்தநாரணனைக்கற்பித்தன்று, வலஞ்சுருக்கிவல்லசு

ரர்மாண்டுவீழ வாசுகியைவாய்மடுத்துவானோருய்யச், சலந்தரனைக்கொல்வதற்குமுன்னோபின்னோ தண்ணாரூர்கோயிலாக் கொண்டநாளே. எ

பாதத்தான்முயலகனைப்பாதுகாத்துப் பாரகத்தேபரஞ்சுடராய்நின்றநாளோ, கீதத்தைமிகப்பாடு மடியார்க்கென்றுங் கேடிலாவானுலகங் கொடுத்தநாளோ, பூதத்தான் பொருநீலிபுனிதன்மேவிப் பொய்யுரையாமறைநால்வர் விண்ணோர்க்கென்றும், வேதத்தைவிரிப்பதற்கு முன்னோபின்னோ விழவாரூர்கோயிலாக்கொண்டநாளே. அ

புகையெட்டும்போக்கெட்டும் புலன்களெட்டும் பூதலங்களவையெட்டும்பொழில்களெட்டும், கலையெட்டுங்காப்பெட்டும்காட்சியெட்டுங் கழற்சேவடியடைந்தார் களைகணெட்டும், நகையெட்டுநாளெட்டுநன்மையெட்டு நலஞ்சிறந்தார்மனத்தகத்துமலர்களெட்டும், திகையெட்டுந்தெரிப்பதற்குமுன்னோபின்னோ திருவாரூர்கோயிலாக் கொண்டநாளே. கூ

ஈசனாயுலகேழுமலையுமாகி யிராவணனை யீடழித்திட்டிருந்தநாளோ, வாசமலர்மகிழ்தென்றலானநாளோ மதயானையுரிபோர்த்து மகிழ்ந்தநாளோ, தாதுமலர்தண்டிக்குக்கொடுத்தநாளோ சகரர்களைமறித்திட்டாட் கொண்டநாளோ, தேசமுமையறிவதற்குமுன்னோபின்னோ திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. ய

திருச்சிற்றம்பலம்.

———

திருவாலவாய் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி முதிருஞ்சடைமுடிமேன் முகிழ்வெண்டிங்கள், வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்வரைசிலையாவாசுகிமாநாணாக்கொத்துத், துளைத்தானைச்சுடுசரத்தாற் றுவளநீறாத் தூமுத்தவெண்முறுவலுமையோடாடித், திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. க

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை யொற்றைவெண்பிறையானையுமையோடென்றும், பேரானைப்பிறர்க்கென்றுமரியான்றன்னைப் பிணக்காட்டில்நடமாடல் பேயோடென்றும், ஆரானையமரர்களுக்கமுதீந்தானை யருமறையானான்முகனுமாலும்போற்றுஞ், சீரானைத்தென்கூடற் றிருவாலவாய் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. உ

தூர்த்தனைத்தோண் முடிபத்திறுத்தான் றன்னைத் தொன்னரம்பினின்னிசைகேட் டருள்செய்தானைப், பார்த்தனைப்பணிகண்டு பரிந்தான்றன்னைப் பரிந்தவர்க்குப் பாசுபதமீந்தான்றன்னை, யார்த்தனையடியேனுக் கன்பான்றன்னை யளவிலாப்பல்லூழிகண்டுநின்ற, தீர்த்தனைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. ௩

திருச்சிற்றம்பலம்.

———

திருச்சிவபுரம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வானவன்காண் வானவர்க்கு மேலானான்காண் வடமொழியுந்தென்றமிழுமறைகணான்கு, மானவன்காணானந்துமாடினான்காணையன்காண்கையிலன லேந்தியாடுங், கானவன்காண்கானவனுக்கருள்செய்தான்காண் கருதுவாரிதயத்துக்கமலத்தூருந், தேனவன்காண்சென்றடையாச்செல்வன்றான்காண் சிவனவன்காண் சிவபுரத்தெஞ்செல்வன்றானே. க

வெய்யவன்காண்வெய்யகனலேந்தினான்காண்வியன்கெடிலவீரட்டமேவினான்காண், மெய்யவன்காண்பொய்யர்மனம்விரவாதான்காண்வீணையோடிசைந்துமிகுபாடன்மிக்க, கையவன்காண்கையின்மழுவேந்தினான்காண் காமரங்கம்பொடிவீழ்த்தகண்ணினான்காண், செய்யவன்காண் செய்யவளைமாலுக்கீந்த சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. உ

திருச்சிற்றம்பலம்.

திருவாலம்பொழில் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கருவாகிக்கண்ணுதலாய் நின்றான்றன்னைக் கமலத்
தோன்றலையரிந்தகாபாலியை, யுருவார்ந்த மலைமகளோர்
பாகத்தானை யுணர்வெலாமானானையோசையாகி, வருவா
னைவலஞ்சுழியெம்பெருமான்றன்னை மறைக்காடுமாவடுதெ
ண்டுறைபுமேய, திருவானைத்தென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. ௧

உரித்தானைக்களிறதன்றோல்போர்வையாக வுடையா
னையுடைப்புலியினிதளேயாகத்,தரித்தானைச்சடையதன்மே
ற்கங்கையங்கைத் தழலுருவைவிடமமுதா வுண்டிதெல்லா
ம், பரித்தானைப்பவளமால்வரையானைப்பாம்பணையான்
றனக்கன்றங்காழிநல்கிச், சிரித்தானைத்தென்பரம்பைக்கு
டியின்மேய திருவாலம்பொழிலானைச்சித்திநெஞ்சே. ௨

திருச்சிற்றம்பலம்.

தனித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பனீயம்மைநீ யையனுநீ யன்புடையமாமனுமாமி
யுநீ, ஒப்புடையமாதரு மொண்பொருளுநீ யொருகுலமுஞ்
சுற்றமுமோரூருநீ,துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ, இப்பொன்னீ
யிம்மணிநீயிம்முத்துநீ யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே.

வெம்பவருகிற்பதன்றுகூற்றம்நம்மேல் வெய்யவினைப்
பகையும்பையவையும், எம்பரிவுதீர்ந்தோ மிடுக்கணில்லோ
மெங்கெழிலென்ஞாயி றெளியோமல்லோம், அம்பவளச்
செஞ்சடைமேலாறுசூடியனலாடியானஞ்சுமாட்டுகந்த, செ
ம்பவளவண்ணர்செங் குன்றவண்ணர் செவ்வானவண்ண
ரென்சிந்தையாரே. ௨

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரோ யடக்குவித்தா
லாரொருவரடங்காதாரோ,ஒட்டுவித்தாலாரொருவரோடா

தாரோயுருகுவித்தாலாரொருவருருகாதாரே, பாட்டுவித்தா
லாரொருவர் பாடாதாரோ பணிவித்தாலாரொருவர் பணி
யாதாரே, காட்டுவித்தாலாரொருவர்காணாதாரே காண்பா
ரார் கண்ணுதலாய்க்காட்டாக்காலே. ௩

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தி நலஞ்சுடரோநால்
வேதத்தப்பாலின்ற, சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்து
நின்ற சொலற்கரியசூழலாயிதுவுன்றன்மை, நிற்பதொத்து
நிலையிலாநெஞ்சந்தன்னு ணிலாவாதபுலாலுடம்பே புகுந்துநி
ன்ற, கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன்கனகமாமணி
நிறத்தெங்கடவுளானே. ௪

திருக்கோயிலில்லாததிருவிலூருந்திருவெண்ணீறணி
யாததிருவிலூரும், பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்
பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடுவெண்சங்
கமூதாவூரும் விதானமும்வெண்கொடியுமில்லாவூரும், அ
ருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூருமவையெல்லாமூரல்ல
வடவிகாடே. ௫

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற் றீவண்ணர்தி
றமொருகாற்பேசாராகில், ஒருகாலுந்திருக்கோயில் சூழா
ராகி லுண்பதன்முன்மலர்பறித்திட் டுண்ணாராகில், அரு
நோய்கள்கெடவெண்ணீ றணியாராகி லளியற்றார்பிறந்த
வாறேதோவென்னிற், பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்
துஞ்செத்துப் பிறப்பதற்கேதொழிலாகி யிறக்கின்றாரே.

நின்னாவார்பிறரன்றிநீயேயானாய் நினைப்பார்கண்மன
த்துக்கோர்வித்துமானாய், மன்னானாய்மன்னவர்க்கோரமு
தமானாய் மறைநான்குமானாயாறங்கமானாய், பொன்னானாய்
மணியானாய்போகமானாய் பூமிமேற்புகழ்தக்கபொருளேயு
ன்னை, என்னானாயென்னானாயென்னினல்லா லேழையே
னென்சொல்லியேத்துகேனே. ௭

அத்தாவுன்னடியேனையன்பாலார்த்தா யருளேனோக்கிற்
றீர்த்தநீராட்டிக்கொண்டாய், எத்தனையுமரியநீயெளியை

யானு யெனையாண்டுகொண்டிரங்கியேன்றுகொண்டாய்,
பித்தனேன்பேதையேன்பேயேனுயேன்பிழைத்தனகளை
த்தனையும்பொறுத்தாயன்றே, இத்தனையுமெம்பரமோவை
யவையோ வெம்பெருமான்றிருக்கருணையிருந்தவாறே. அ

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்
லேன் குற்றமேபெரிதுடையோன்கோலமாய நலம்பொல்
லேன்நான்பொல்லேன்ஞானியல்லே னல்லாரோடிசைந்
திலேனடுவேநின்ற விலங்கலேன்விலங்கலா தொழிந்தே
னல்லேன் வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லேன், இ
லம்பொல்லே னிரப்பதே யீயமாட்டே னென்செய்வான்
றோன்றினே னேழையேனே. கூ

சங்கநிதிபதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடுவானு
ளத்தருவரேனும், மங்குவாரவர்செல்வ மதிப்போமல்லோ
மாதேவர்க்கேகாந்தரல்லாராகில், அங்கமெலாங்குறைந்த
ழுகுதொழுநோயரா யாவுரித்துத்தின்றுழலும்புலையரேனு
ங், கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி லவர்கண்டீர்யா
ம்வணங்குங்கடவுளாரே. ய

திருச்சிற்றம்பலம்.

நின்ற - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகி வயிரமுமாமாணிக்கந்
தானேயாகிக், கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்கலை
யாகிக்கலைஞானந்தானேயாகிப், பெண்ணாகிப் பெண்ணுக்
கோராணுமாகிப்பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி, எண்
ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகி யெழுஞ்சுடராயெம்ம
டிகணின்றவாறே. க

நீராகிநீளகலந்தானேயாகி நிழலாகிநீள்விசும்பினுச்சி
யாகிப், பேராகிப்பேருக்கோர்பெருமையாகிப் பெருமதில்
கண்மூன்றினையுமெய்தானாகி, ஆரேனுந்தன்னடைந்தார்த

ம்மையெல்லா மாட்கொள்ளவல்லவெம்மீசனார்தாம், பாரா
கிப்பண்ணாகிப்பாடலாகிப் பரஞ்சுடராய்ச்சென்றடிக ணி
ன்றவாறே. உ

மாலாகிநான்முகனாய்மாபூதமாய் மருக்கமாயருக்கமா
ய்மகிழ்வுமாகிப், பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்பர
ப்பாகிப்பரலோகந்தானேயாகிப், பூலோகபுவலோக சுவ
லோகமாய்ப் பூதங்களாய்ப்புராணன்றானேயாகி, ஏலாதன
வெலாமேல்விப்பானா யெழுஞ்சுடரா யெம்மடிகணின்ற
வாறே. ௩

திருச்சிற்றம்பலம்.

திருமறுமாற்றத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோ நரகத்திலிட
ர்ப்படோநடலையில்லோம், ஏமாப்போம்பிணியறியோம்ப
ணிவோமல்லோ மின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, தா
மார்க்குங்குடியல்லாத்தன்மையான சங்கரனற்சங்கவெண்
குழையோர்காதிற், கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே. க

அகலிடமேயிடமாகவூர்கடோறு மட்டுண்பாரிட்டு
ண்பார்விலக்காரையம், புகலிடமாமம்பலங்கள்பூமிதேவி யு
டன்கிடந்தாற்புரட்டாள்பொய்யன்றுமெய்யே, இகலுடை
யவிடையுடையானேன்றுகொண்டா னினியேதுங்குறை
விலோமிடர்கடந்தோந், துகிலுடுத்துப்பொன்பூண்டு திரி
வார்சொல்லுஞ்சொற்கேட்கக்கடவோமோ துரிசற்றோமே

வாராண்டகொங்கையர்சேர் மனையிற்சேரோ மாதே
வாமாதேவாவென்றுவாழ்த்தி. நீராண்டபுரோதாயமாடப்
பெற்றோ நீறணியுங்கோலமேநிகழப்பெற்றோங், காராண்
டமழைபோலக்கண்ணீர்சோரக் கன்மனமே நன்மனமாக்
கரையப்பெற்றோம், பாராண்டுபகடேறிவருவார்சொல்லும்
பணிகேட்கக்கடவோமற்றற்றோமே. ௩

ஈசனையெவ்வுலகினுக்குமிறைவன்றன்னை யிமையவர் தம்பெருமானையெரியாய்மிக்க, தேசனைச்செம் மேனிவெண்ணீற்றானைச் சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய்கின்ற, நேசனைநித்தலு நினையப்பெற்றோ நின்றுண்பாரெம்மைநினையச்சொன்ன, வாசகமெல்லாமறந்தோ மன்றேவந்தீரார்மன்னவனாவான்றானாரே. ௪

சடையுடையான்சங்கக்குழையோர்காதன் சாம்பலும் பாம்புமணிந்தமேனி,விடையுடையான்வேங்கையதண்மேலாடைவெள்ளிபோற்புள்ளியுழைமான்றோல்சார்ந்த,உடையுடையானம்மையுடையான்கண்டீ ரும்மோடுமற்றுமுளராய்நின்ற,படையுடையான்பணிகேட்கும்பணியோமல்லோம்பாசமறவீசும்படியோநாமே. ௫

நாவாரநம்பனையேபாடப்பெற்றோ நாணற்றார்நள்ளாமெவிள்ளப்பெற்றோ, மாவாவென்றெமையாள்வா னமரர்நாதனயனொடுமாற்கறிவரியவனலாய்நீண்ட, தேவாதிதேவன்சிவனென்சிந்தை சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன்றானேவந்து, கோவாடிக்குற்றேவல்செய்கென்றாலுங் குணமாகக்கொள்ளோமெண்குணத்தினோமே. ௬

திருச்சிற்றம்பலம்.

———

திருப்புகலூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோவெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லாற், கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன் கழலடியேகைதொழுதுகாணினல்லால், ஒண்ணுளேயொன்பது வாசல்வைத்தா யொக்கவடைக்கும்போதுணரமாட்டேன், புண்ணியனேயுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ௧

அங்கமேபூண்டாயனலாடினா யாதிரையாயானிழலாயானேறூர்ந்தாய், பங்கமொன்றில்லாத படர்சடையினாய்

பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய், சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச் சமுத்திரத்தினஞ்சுண்டுசாவாமூவாச், சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்றிருப்புகலூர்மேவியதேவதேவே. ௨

பையரவக்கச்சையாய் பால்வெண்ணீற்றாய் பளிக்குக்குழையினாய்பண்ணாரின்சொல், மைவிரவுகண்ணாளைப்பாகங்கொண்டாய் மான்மறிக்கையேந்தினாய் வஞ்சக்கள்வ, ரைவரையுமென்மேற்றர வறுத்தாயவர்வேண்டுங் காரியமிங்காவதில்லைப், பொய்யுரையா துன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ௩

தெருளாதார்மூவெயிலுந்தீயில்வேவச் சிலைவளைத்துச் செங்கணையாற்செற்றதேவே, மருளாதார்தம்மனத்தில் வாட்டந்தீர்ப்பாய் மருந்தாய்ப்பிணிதீர்ப்பாய்வானோர்க்கென்றும், அருளாகியாதியாய்வேதமாகி யலர்மேலா னீர்மேலானய்ந்துங்காணாப், பொருளாவாயுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ௪

நீரேறுசெஞ்சடைமே னிலாவெண்டிங்க ணீங்காமைவைத்துகந்தநீதியானே, பாரேறுபடுதலையிற்பலிகொள்வானே பண்டனங்கைப்பார்த்தானேபாவநாசா, காரேறுமூகிலனையகண்டத்தானே கருங்கைக்களிற்றுரிவைகதறப்போர்த்த, போரேறேயுன்னடிக்கேபோதுகின்றேன பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ௫

விரிசடையாய்வேதியனே வேதகீதா விரிபொழில்சூழ்வெண்காட்டாய்மீயச்சூராய், திருபுரங்களெரிசெய்ததேவதேவே திருவாரூர்த்திருமூலத் தானமேயாய், மருவினியார்மனத்துளாய்மாகாளத்தாய் வலஞ்சுழியாய் மாமறைக்காட்டெந்தாயென்றும், புரிசடையாயுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ௬

தேவார்ந்ததேவனைத் தேவரெல்லாந் திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று, நாவார்ந்தமறைபாடிநட்டமாடி நான்முகனுமிந்திரனுமாலும்போற்றக், காவார்ந்தபொழிற்சோ

லைக்காணப்பேற்றாய்க் கழுக்குன்றத்துச்சியாய் கடவுளேநி
ன், பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்
மேவிய புண்ணியனே. ௭

நெய்யாடிநின்மலனே நீலகண்டா நிறைவுடையாய்ம
றைவல்லாய்நீதியானே, மையாடுகண்மடவாள் பாகத்தா
னே மான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய், கொய்யாடுகூ
விளங்கொன்றைமாலை கொண்டடியேனுனிட்டுக்கூறிநின்
று, பொய்யாலசேவடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மே
வியபுண்ணியனே. ௮

துன்னஞ்சேர் கோவணத்தாய்தூயநீற்றாய் துதைந்தி
லங்குவெண்மழுவாள்கையிலேந்தித்,தன்னனையுந்தண்மதி
யும்பாம்புநீருஞ்சடைமுடிமேல்வைத்துகந்ததன்மையானே
அன்னநடைமடவாள்பாகத்தானே யக்காரம்பூண்டானே
யாதியானே, பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன் பூம்
புகலூர்மேவிய புண்ணியனே. ௯

ஒருவனையுமல்லாதுணராதுள்ள முணர்ச்சித்தடுமாற்
றத்துள்ளேநின்ற, விருவரையுமூவரையுமென்மேலேவியி
ல்லாததரவறுத்தாய்க் கில்லேனேலக், கருவரைசூழ்கான
லிலங்கைவேந்தன் கடுந்தேர்மீதோடாமை காலாற்செற்ற,
பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்
மேவிய புண்ணியனே. ௰

திருச்சிற்றம்பலம்.

———

கோயிற்றிருநேரிசை - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கே னென்னைநீயிகழவேண்டாம்
முத்தனேமுதல்வாதில்லை யம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பா னடியனேன்வந்தவாறே. ௧

கருத்தனாய்ப்பாடமாட்டேன் காப்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணாத் திருவுருவுடையசோதீ
திருத்தமாந்தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டி நேர்படவந்தவாறே, ௨

கேட்டிலேன்கிளைபிரியேன் கேட்குமாகேட்டியாகில்
நாட்டினேனின்றன்பாதம் நடுப்படநெஞ்சினுள்ளே
மாட்டில்நீர்வாளைபாயு மல்குசிற்றம்பலத்தே
கூட்டமாங்குவிமுலையாள் கூடநீயாடுமாறே. ௩

சிந்தையைத்திகைப்பியாதே செறிவுடையடிமைசெய்ய
எந்தைநீயருளிச்செய்ய யாதுநான்செய்வதென்னே
செந்தீயார்வேள்வியோவாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யந்தியும்பகலுமாட வடியிணையலசுங்கொல்லோ. ௪

கண்டவாதிரிந்துநாளுங் கருத்தினால்நின்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக் கூடுவேன்குறிப்பினாலே
வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே
யெண்டிசையோருமேத்த விறைவநீயாடுமாறே. ௫

பார்த்திருந்தடியனேனுன் பரவுவன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னை மூவரில்முதல்வனென்பன்
எத்துவாரிடர்கடீர்ப்பாய் தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே. ௬

பொய்யினைத்தவிரவிட்டுப் புறமலாவடிமை சய்ய
ஐய்யநீயருளிச்செய்யா யாதியேயாதிமூர்த்தி
வையகந்தன்னின்மிக்க மல்குசிற்றம்பலத்தே
பைய்யநுன்னாடல்காண்பான் பரமநான்வந்தவாறே. ௭

மனத்தினால்திகைத்துநாலு மாண்பலாநெறிகண்மேலே
கனைப்பராலென்செய்கேனோ கறையணிகண்டத்தானே
தினைத்தனைவேதங்குன்றாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யனைத்துநின்னிலயங்காண்பா னடியனேன்வந்தவாறே.

நெஞ்சினைத்தூய்மைசெய்து நினைக்குமாநினைப்பியாதே
வஞ்சமேசெய்தியாலோ வானவர்தலைவனேநீ
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
யஞ்சொலாள்காணநின்று வழகநீயாடுமாறே. ௯

மண்ணுண்டமாலவனு மலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவம் விரும்பினார்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்க தில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டமாடலோடும் பரமநீயாடுமாறே. ௰

திருச்சிற்றம்பலம்.

———

திரு அங்கமாலை - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய்- தலை
மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத்
தலையேநீவணங்காய். ௧

கண்காள்காண்மின்களோ-கடல்
நஞ்சுண்டகண்டன்றன்னை
யெண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக்
கண்காள்காண்மின்களோ. ௨

செவிகாள்கேண்மின்களோ-சிவ
னெம்மிறைசெம்பவள
எரிபோல்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ்
செவிகாள்கேண்மின்களோ. ௩

மூக்கேநீமுரலாய்-முது
காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை
மூக்கேநீமுரலாய். ௪

வாயேவாழ்த்துகண்டாய்-மத
யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை
வாயேவாழ்த்துகண்டாய். ௫

நெஞ்சேநீநினையாய்-நிமிர்
புன்சடைநின்மலனை
மஞ்சாடுமலைமங்கைமணாளனை
நெஞ்சேநீநினையாய். ௬

கைகாள்கூப்பித்தொழீர்-கடி
மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித்தொழீர். ௭

ஆக்கையாற்பயனென்-அரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்
வாக்கையாற்பயனென். ௮

கால்களாற்பயனென்-கறைக்
கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென். ௯

உற்றாருளரோ-வுயிர்
கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக்
குற்றாருளரோ. ௰

இறுமாந்திருப்பன்கொலோ-வீசன்
பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங்
கிறுமாந்திருப்பன்கொலோ. ௰௧

தேடிக்கண்டுகொண்டேன்-திரு
மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே
தேடிக்கண்டுகொண்டேன். ௰௨

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டுவார்குழலாளொடுமால்விடை
இட்டமாவுகந்தேறுமிறைவனார்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயும்
சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே. ௧

அரியயன்றலைவெட்டிவட்டாடினார்
அரியயன்றொழுதேத்துமரும்பொருள்

பெரியவன்சிராப்பள்ளியைப்பேணுவார்
அரியயன்றொழவாங்கிருப்பார்களே. ௨

அரிச்சிராப்பகலைவராலாட்டுண்டு
சுரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை
நரிச்சிராதுநடக்குடக்குமே. ௩

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாரெனநம்வினைநாசமே, ௪

திருச்சிற்றம்பலம்.

திருக்கற்குடி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூத்தவனைவானவர்க்குமூவாமேனி முதலவனைத்திருவரையின்மூக்கப்பாம்பொன், றார்த்தவனையக்கரவமாரமாவணிந்தவனைப்பணிந்தடியாரடைந்தவன்போ, டேத்தவனையிறுவரையிற்றேனையேனோர்க் கின்னமுதமளித்தவனையிடரையெல்லாங், காத்தவனைக்கற்குடியில்விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. ௧

செய்யானைவெளியானைக் கரியான்றன்னைத் திசைமுகனைத்திசையெட்டுஞ் செறிந்தான்றன்னை, ஐயானைநெய்யானைச்சீரியானை யணியானைச்சேயானையானஞ்சாடு, மெய்யானைப்பொய்யாது மிலாதான்றன்னை விடையானைச்சடையானைவெறித்தமான்கொள், கையானைக்கற்குடியில்விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. ௨

மண்ணதனிலைந்தைமாநீரினான்கைவயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை, விண்ணதனிலொன்றை விரிகதிரைத்தண்மதியைத்தாரகைகடம்மின்மிக்க, எண்ணதனிலெழுத்தையேழிசையைக் காமனெழில்ழியவெரியுமிழ்ந்தவிமையாநெற்றிக்,கண்ணவனைக்கற்குடியில்விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. ௩

நற்றவனைப்புற்றரவநாணினானை நாணாதுநகுதலையூணயந்தான்றன்னை, முற்றவனைமூவாதமேனியானை முந்நீரினஞ்சமுகந்துண்டான்றன்னைப், பற்றவனைப்பற்றார்தம்பதிகள்செற்ற படையாளையடைவார்தம்பாவம்போக்கக்,கற்றவனைக்கற்குடியில்விழுமியானைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. ௪

சங்கைதனைத்தவிர்த்தாண்டதலைவன்றன்னைச் சங்கரனைத்தழலுறுதாண் மழுவாடாங்கும், அங்கையனையங்கமணியாகத்தானை யாகத்தோர்பாகத்தேயமரவைத்த,மங்கையனைமதியொடுமா சுணமுந்தம்மின் மருவவிரிசடைமுடிமேல்வைத்தவானீர்க், கங்கையனைக்கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. ௫

பெண்ணவனையாணவனைப் பேடானானைப் பிறப்பிலியையிறப்பிலியைப்பேராவாணி, விண்ணவனைவிண்ணவர்க்குமேலானானை வேதியனைவேதத்தின்கீதம்பாடும், பண்ணவனைப்பண்ணில்வருபயனானானைப்பாரவனைப்பாரில்வாழுயிர்கட்கெல்லாங், கண்ணவனைக் கற்குடியில்விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. ௬

பண்டானைப்பரந்தானைக் குவிந்தான்றன்னைப் பாரானைவிண்ணாயிவ்வுலகமெல்லாம், உண்டானையுமிழ்ந்தானையுடையான்றன்னை யொருவருந்தன்பெருமைதனை யறியவொண்ணா, விண்டானைவிண்டார்தம் புரங்கண்மூன்றும் வெவ்வழலில்வெந்துபொடியாகிவீழக், கண்டானைக்கற்குடியில்விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனே. ௭

வானவனைவானவர்க்குமேலானானை வணங்குமடியார்மனத்துண்மருவிப்புக்க, தேனவனைத்தேவர்தொழுகழலான்றன்னைச் செய்குணங்கள்பலவாகிநின்றவென்றிக், கோனவனைக்கொல்லைவிடையேற்றினானைக் குழன்முழவமியம்பக்கூத்தாடவல்ல,கானவனைக்கற்குடியில்விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே. ௮

கொலையானையுரிபோர்த்தகொள்கையானைக்கோளரி
யைக்கூரம்பாவரைமேற்கோத்த, சிலையானைச்செம்மைதரு
பொருளான்றன்னைத் திரிபுரத்தோர்மூவர்க்குச் செம்மை
செய்த, தலையானைத்தத்துவங்க ளானான்றன்னைத் தைய
லோர்பங்கினனைத்தன்கையேந்து, கலையானைக்கற்குடியில்
விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே.

பொழிலானைப்பொழிலாரும் புன்கூரானைப் புறம்பய
னையறம்புரிந்தபுகலூரானை, எழிலானையிடைமருதினிடங்
கொண்டானை யீங்கோய்நீங்காதுறையு மிறைவன்றன்னை,
அழலாடுமேனியனை யன்றுசென்று குன்றெடுத்தவரக்கன்
றோணெரியவூன்றுங், கழலானைக்கற்குடியில்விழுமியானை
க்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருப்பைஞ்ஞீலி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மத்தமாமலர்சூடியமைந்தனார்
சித்தராய்த்திரிவார்வினைதீர்ப்பரால்
பத்தர்தாந்தொழுதேத்துபைஞ்ஞீலியெம்
அத்தனைத்தொழவல்லவர்நல்லரே. ௧

உடையர்கோவணமொன்றுங்குறைவிலர்
படைகொள்பாரிடஞ்சூழ்ந்தபைஞ்ஞீலியார்
சடையிற்கங்கைதரித்தசதுரரை
அடையவல்லவர்க்கில்லையவலமே. ௨

விழுதுசூலத்தன்வெண்மழுவாட்படை
கழுதுதுஞ்சிருள்காட்டகத்தாடலான்
பழுதொன்றின்றிப்பைஞ்ஞீலிப்பரமனை
தொழுதுசெல்பவர்தம்வினைதூளியே. ௩

ஒன்றிமாலும்பிரமனுந்தம்மிலே
நின்றுசூழலறிவரியானிடம்

சென்றுபாரிடமேத்துபைஞ்ஞீலியுள்
என்றுமேவியிருந்தவடிகளே. ௪

வேழத்தின்னுரிபோர்த்தவிகிர்தனார்
தாழச்செஞ்சடைமேற்பிறைவைத்தவர்
தாழைத்தண்பொழில்சூழ்ந்தபைஞ்ஞீலியார்
யாழின்பாட்டையுகந்தவடிகளே. ௫

குண்டுபட்டுக்குறியறியாச்சமண்
மிண்டரோடுபடுத்துய்யப்போந்துநான்
கண்டங்கார்வயல்சூழ்ந்தபைஞ்ஞீலியெம்
அண்டவாணனடியடைந்துய்ந்தனே. ௬

வரிப்பையாடரவாட்டிமதகரி
உரிப்பைமூடியவுத்தமனுறை
திருப்பைஞ்ஞீலிதிசைதொழுவார்கள்போய்
இருப்பர்வானவரோடினிதாகவே. ௭

கோடல்கோங்கம்புறவணிமுல்லைமேல்
பாடல்வண்டிசைகேட்கும்பைஞ்ஞீலியார்
பேடுமாணும்பிறரறியாததோர்
ஆடுநாகமசைத்தவடிகளே. ௮

காருலாமலர்க்கொன்றையந்தாரினான்
வாருலாமுலைமங்கையோர்பங்கினன்
தேருலாம்பொழில்சூழ்ந்தபைஞ்ஞீலியெம்
ஆரிலாவமுதையடைந்துய்மினே. ௯

தருக்கிச்சென்றுதடவரைபற்றலும்
நெருக்கியூன்றநினைந்துசிவனையே
யரக்கன்பாடவருளுமெம்மானிடம்
இருக்கைஞீலியென்பார்க்கிடரில்லையே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்கா - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கோணைக்காவிக்குளிர்ந்தமனத்தராய்
தேனைக்காவியுண்ணாச்சிலதெண்ணர்கள்
ஆனைக்காவிலெம்மானையணைகிலார்
ஊனைக்காவியுழிதர்வருமரே. ௧

திருகுசிந்தையைத்தீர்த்துச்செம்மைச்செய்து
பருகியூறலைப்பற்றிப்பதமறிந்
துருகிநைபவர்க்கூனமொன்றின்றியே
அருகுநின்றிடுமானைக்காவண்ணலே. ௨

துன்பமின்றித்துயரின்றியென்றுநீர்
இன்பம்வேண்டிலிராப்பகலேத்துமின்
என்பொனீசனிறையனென்றுள்குவார்க்
கன்பனாயிடுமானைக்காவண்ணலே. ௩

நாவானன்றுநறுமலர்ச்சேவடி
ஓவாதேத்தியுளத்தடைத்தார்வினை
காவாயென்றுதங்கைதொழுவார்க்கெலாம்
ஆவாவென்றிடுமானைக்காவண்ணலே. ௪

வஞ்சமின்றிவணங்குமின்வைகலும்
வெஞ்சொலின்றிவிலகுமின்வீடற
நைஞ்சுநஞ்சுநின்றுள்குளிர்வார்க்கெலாம்
அடையநின்றிடுமானைக்காவண்ணலே. ௫

ஒழுகுமாடத்துளொன்பதுவாய்தலுங்
கழுகரிப்பதன்முன்னங்கழலடி
தொழுதுகைகளாற்றூமலர்தூவிநின்
றழுமவர்க்கன்பனானைக்காவண்ணலே. ௭

உருளும்போதறிவுண்ணாவுலகத்தீர்
தெருளுஞ்சிக்கெனத்தீவினைசேராதே
இருளறுத்துநின்றீசனென்பார்க்கெலாம்
அருள்கொடுத்திடுமானைக்காவண்ணலே. ௮

நேசமாகிநினைமடநெஞ்சமே
நாசமாயகுலநலஞ்சுற்றங்கள்
பாசமற்றுப்பராபரவானந்த
ஆசையுற்றிடுமானைக்காவண்ணலே. ௯

ஓதமாகடல்சூழிலங்கைக்கிறை
கீதகின்னரம்பாடக்கெழுவினான்
பாதம்வாங்கிப்பரிந்தருள்செய்தங்கோர்
ஆதியாயிடுமானைக்காவண்ணலே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்கா - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னானைத்தோல்போர்த்த மூர்த்திதன்னை மூவாச்
சிந்தையேமனமேவாக்கே, தன்னானையாப்பண்ணியேறிநா
னைச் சார்தற்கரியானைத்தாதைதன்னை, என்னானைக்கன்றி
னையென் ஈசன்றன்னை யெறிநீர்த்திரையுகளுங்காவிரிசூழ்
தென்னானைக்காவானைத்தேனைப்பாலைச் செழுநீர்த்திரளைச்
சென்றாடினேனே. ௧

மருந்தானைமந்திரிப்பார்மனத்துளானை வளர்மதியஞ்
சடையானைமகிழ்ந்தேனுள்ளத், திருந்தானையிறப்பிலியை
ப்பிறப்பிலானை யிமையவர்தம்பெருமானையுமையாளஞ்சக்
கருந்தாணமதகளிற்றினுரிபோர்த்தானைக் கனமழுவாட்ப
டையானைப்பலிகொண்டூரூர், திரிந்தானைத்திருவானைக்கா
வுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௨

முற்றாதவெண்டிங்கட்கண்ணியானை முந்நீர்நஞ்சுண்
டிமையோர்க்கமுதநல்கும், உற்றானைப்பல்லுயிர்க்குந்துணை
யானானை யோங்காரத்துட்பொருளையுலகமெல்லாம், பெற்
றானைப்பின்னிரக்கஞ்செய்வான்றன்னைப் பிரானென்றுபோ
ற்றாதார்புரங்கண்மூன்றுஞ், செற்றானைத்திருவானைக்காவு
ளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௩

காராருமணிமிடற்றெம் பெருமான்றன்னைக் காதில் வெண்குழையானைக்கமழ்பூங்கொன்றைத், தாரானைப்புலியதளினுடையானைத் தானன்றிவேறொன்று மில்லாஞானப், பேரானைமணியாரமார்பினானைப் பிஞ்ஞகனைத்தெய்வநான்மறைகள்பூண்ட, தேரானைத்திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௪

பொய்யேதுமில்லாதமெய்யன்றன்னைப்புண்ணியனை நண்ணாதார்புரநீறாக, எய்தானைச்செய்தவத்தின்மிக்கான்றன்னை யேறமரும்பெருமானையிடமானேந்துங், கையானைக் கங்காளவேடத்தானைக் கட்டங்கக்கொடியானைக் கனல்போன்மேனி, செய்யானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௫

கலையானைப்பரசுபதபாணியானைக் கனவயிரத்திரளானைமணிமாணிக்க, மலையானையென்றலையினுச்சியானை வார்தருபுன்சடையானைமயானமன்னு, நிலையானைவரியரவுநாணாக்கோத்து நினையாதார்புரமெரிய வளைத்தமேருச், சிலையானைத்திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௬

ஆதியனையெறிமணியினோசையானை யண்டத்தார்கறிவொண்ணாதப்பான்மிக்க, சோதியனைத்தூமறையின்பொருளான்றன்னைச்சுரும்பமருமலர்க்கொன்றைத் தொன்னூல்பூண்ட, வேதியனையறமுரைத்தபட்டன்றன்னை விளங்குமலரயன்சிரங்களைந்திலொன்றைச், சேதியனைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௭

பகிழ்ந்தானைக்கச்சியேகம்பன்றன்னைமறவாதுகழனினைந்துவாழ்த்தியேத்திப், புகழ்ந்தாரைம்பொன்னுலகம் ஆள்விப்பானைப்பூதகணப்படையானைபுறங்காட்டாடல், உகந்தானைப்பிச்சையேயிச்சிப்பானையொண்பவளத்திரளையென்னுள்ளத்துள்ளே, திகழ்ந்தானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௮

நசையானைநால்வேதத் தப்பாலானை நல்குரவுந்தீப்பிணிநோய்காப்பான்றன்னை, யிசையானை யெண்ணிறந்தகுணத்தான்றன்னை யிடைமருதுமீங்கோயு நீங்காதேற்றின், மிசையானைவிரிகடலுமண்ணும்விண்ணு மிகுதியும்புனலெறிகாற்றாகியெட்டுத், திசையானைத்திருவானைக்காவுளானை செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௯

பார்த்தானைக்காமனுடல்பொடியாய்வீழப்பண்டயன்மாலிருவர்க்குமறியாவண்ணஞ், சீர்த்தானைச்செந்தழல்போலுருவினானைத்தேவர்கடம்பெருமானைத்திறமுணாதே, யார்த்தோடிமலையெடுத்த விலங்கைவேந்த னாண்மையெலாங்கெடுத்தவன்றனிடரப்போதே, தீர்த்தானைத்திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காலபாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையாரெனார்
ஆலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமார்ந்தவர்செம்மைமறப்பரே. ௧

விடுத்துத்தூதுவர்வந்துவினைக்குழிப்
படுத்தபோதுபயனிலைபாவிகாள்
அடுத்தகின்னரங்கேட்கும்வாட்போக்கியை
எடுத்துமேத்தியுமின்புறுமின்களே. ௨

வந்திவ்மாறுவளைத்தெழுதூதுவர்
உந்தியோடிநரகத்திடாமுனம்
அந்தியின்னொளிதாங்கும்வாட்போக்கியார்
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரே. ௩

கூற்றம்வந்துகுமைத்திடும்போதினால்
தேற்றம்வந்துதெளிவுறலாகுமே

ஆற்றவும்மருள்செய்யும்வாட்போக்கியால்
ஏற்றுமின்விளக்கையிருணீங்கவே. ௩

மாறுகொண்டுவளைத்தெழுதூதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
ஆறுசெஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியுருகுமென்னுள்ளமே. ௪

கானமோடிக்கடிதெழுதூதுவர்
தானமோடுதலைபிடியாமுன்னம்
ஆனஞ்சாடியுகந்தவாட்போக்கியார்
ஊனமில்லவர்க்குண்மையினிற்பரே. ௫

பார்த்துப்பாசம்பிடித்தெழுதூதுவர்
கூர்த்தவேலாற்குமைப்பதன்முன்னமே
ஆர்த்தகங்கையடக்கும்வாட்போக்கியார்
கீர்த்திமைகள்கிளர்ந்துரைமின்களே. ௬

நாடிவந்துநமன்றமர்நல்லிருள்
கூடிவந்துகுமைப்பதன்முன்னமே
ஆடல்பாடலுகந்தவாட்போக்கியை
வாடியேத்தநம்வாட்டந்தவிருமே. ௭

கட்டறுத்துக்கடிதெழுதூதுவர்
யொட்டநூக்கிப்புறப்படாமுன்னமே
அட்டமாமலர்சூடும்வாட்போக்கியார்க்
கிட்டமாகவிணையடியேத்துமே. ௮

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பரக்கழித்தவர்பற்றுதன்முன்னமே
அரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. ௯

திருச்சிற்றம்பலம்.

திருக்கடம்பந்துறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முற்றிலாமுலையாளிவளாகிலும்
அற்றந்தீர்க்குமறிவிலளாகிலும்
கற்றைச்செஞ்சடையான்கடம்பந்துறைப்
பெற்றமூர்தியென்றாளெங்கள்பேதையே. ௧

தனகிருந்ததோர்தன்மையராகிலும்
உனகுதீரத்தொழுதெழுமின்களோ
கனகப்புன்சடையான்கடம்பந்துறை
நினையவல்லவர்நீள்விசும்பாள்வரே. ௨

ஆரியந்தமிழோடிசையானவன்
கூரியகுணத்தார்குறிநின்றவன்
காரிகையுடையான்கடம்பந்துறைச்
சீரியல்பத்தர்சென்றடைமின்களே. ௩

பண்ணினின்மொழிகேட்கும்பரமனை
வண்ணநன்மலரான்பலதேவரும்
கண்ணனும்மறியான்கடம்பந்துறை
நண்ணநம்வினையாயினநாசமே. ௪

மறைகொண்டமனத்தானைமனத்துளே
நிறைகொண்டநெஞ்சினுள்ளூறவைம்மினோ
கறைகண்டனுறையுங்கடம்பந்துறை
சிறைகொண்டவினைதீரத்தொழுமினே. ௫

நங்கைபாகம்வைத்தநறுஞ்சோதியைப்
பங்கமின்றிப்பணிந்தெழுமின்களோ
கங்கைச்செஞ்சடையான்கடம்பந்துறை
அங்கமோதியரனுறைகின்றதே. ௬

அரியநான்மறையாறங்கமாயைந்து
புரியன்றேவர்களேத்தநஞ்சுண்டவன்
கரியகண்டத்தினன்கடம்பந்துறை
உரியவாறுநினைமடநெஞ்சமே. ௭

பூமென்கோதையுமையொருபாகனை
ஓமஞ்செய்துமுணர்மின்களுள்ளத்தால்
காமற்காய்ந்தபிரான்கடம்பந்துறை
நாமமேத்தநந்தீவினைநாசமே. ௮

பாரணங்கிவணங்கிப்பணிசெய
நாரணன்பிரமன்னறியாததோர்
காரணன்கடம்பந்துறைமேவிய
ஆரணங்கொருபாலுடைமைந்தனே. ௯

நூலால்நன்றுநினைமின்கள்நோய்கெடப்
பாலனைந்துடனாடும்பரமனார்
காலானூன்றுகந்தான்கடம்பந்துறை
மேலால்நாஞ்செய்தவல்வினைவீடுமே. ௰

திருச்சிற்றம்பலம்.

——

திருப்பராய்த்துறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கரப்பர்காலமடைந்தவர்தம்வினை
சுருக்குமாறுவல்லார்கங்கைசெஞ்சடைப்
பரப்புநீர்வருகாவிரித்தென்கரைத்
திருப்பராய்த்துறைமேவியசெல்வரே. ௧

மூடினார்களியானையினீருரி
பாடினார்மறைநான்கினோடாறங்கம்
சேடனார்தென்பராய்த்துறைச்செல்வரைத்
தேடிக்கொண்டடியேன்சென்றுகாண்பனே. ௨

பட்டநெற்றியர்பான்மதிக்கீற்றினர்
நட்டமாடுவர்நள்ளிருளேமமும்
சிட்டனார்தென்பராய்த்துறைச்செல்வனார்
இட்டமாயிருப்பாரையறிவரே. ௩

மூன்பெலாஞ்சிலமோழைமைபேசுவர்
என்பெலாம்பலபூண்டங்குழிதர்வர்
தென்பராய்த்துறைமேவியசெல்வனார்
அன்பராயிருப்பாரையறிவரே. ௪

போதுதாதொடுகொண்டுபுனைந்துடன்
தாதவிழ்சடைச்சங்கரன்பாதத்துள்
வாதைதீர்க்கவென்றேத்திப்பராய்த்துறைச்
சோதியானைத்தொழுதெழுந்துய்ம்மினே. ௫

நல்லநான்மறையோதியநம்பனைப்
பல்லில்வெண்டலையிற்பலிகொள்வனைத்
தில்லையான்றென்பராய்த்துறைச்செல்வனை
வல்லையாய்வணங்கித்தொழுவாய்மையே. ௬

நெருப்பினாற்குவித்தாலொக்குநீள்சடைப்
பருப்பதமதயானையுரித்தவன்
திருப்பராய்த்துறையார்திருமார்பினூல்
பொருப்பராவியிழிபுனல்போன்றதே. ௭

எட்டவிட்டவிடுமெணலெக்கர்மேற்
பட்டநுண்டுளிபாயும்பராய்த்துறைச்
சிட்டன்சேவடிசென்றடைகிற்றிரேல்
விட்டுநம்வினையுள்ளனவீடுமே. ௮

நெருப்பராணிமிர்ந்தாலொக்குநீள்சடை
மருப்பராவளைத்தாலொக்கும்வான்மதி
திருப்பராய்த்துறைமேவியசெல்வனார்
விருப்பராயிருப்பாரையறிவரே. ௯

தொண்டுபாடியுந்தூமலர்தூவியும்
இண்டைகட்டியிணையடியேத்தியும்
பண்டரங்கர்பராய்த்துறைப்பாங்கரைக்
கண்டுகொண்டடியேனுய்ந்துபோவனே. ௰

அரக்கனாற்றலழித்தவழகனைப்
பரக்குநீர்ப்பொன்னிமன்னுபராய்த்துறை
இருக்கைமேவியவீசனையேத்துமின்
பொருக்கநம்வினைபோயறுங்காண்மினே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

———

திருவெறும்பியூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னியசெந்தமிழறியேன் கவியேலமாட்டேனெண்ணோடுபெண்ணிறைந்த கலைகளாய, தன்னையுந்தன்றிறத்தறியாப்பொறியிலேனைத் தன்றிறமுமறிவித்து நெறியுங்காட்டி, யன்னையையுமத்தனையும்போலவன்பாயடைந்தேனைத்தொடர்ந்தென்னை யாளாக்கொண்டு, தன்னெறும்பியூர்மலைமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனானே. ௧

பளிங்கினிழலுட்பதித்தசோதியானைப் பசுபதியைப்பாசுபதவேடத்தானை, விளிந்தெழுந்தசலந்தரனைவீட்டினானை வேதியனைவிண்ணவனைமேவிவையம், அளந்தவனைநான்முகனையல்லதீர்க்கு மருமருந்தையாமாற நின்றென்னுள்ளந், தெளிந்தெறும்பியூர்மலைமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. ௨

கருவையென்றன் மனத்திருந்த கருத்தைஞானக் கடுஞ்சுடரைப்படிந்துகிடந் தமரரேத்து, முருவையண்டத்தொருமுதலையோதவேலி யுலகினிறைதொழிலிறுதிநடுவாய்நின்ற, மருவைவென்றகுழன்மடவாள்பாகம்வைத்தமயானத்துமாசிலாமணியைவாசத், திருவெறும்பியூர்மலைமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனானே. ௩

பகழிபொழிந்தடலரக்கர் புரங்கண்மூன்றும் பாழ்படுத்தபரஞ்சுடரைப் பரிந்துதன்னைப், புகழுமன்பர்க்கின்பமருமமுதைத்தேனைப் புண்ணியனைப்புவனியது முழுதும்போக, உமிழுமம்பொற்குன்றத்தை முத்தின்றாணை யுமையவடம்பெருமானையிமையோரேத்துந், திகழெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனானே. ௪

பாரிடங்களுடன்பாடப்பயின்றுநட்டம் பயில்வானைப்பயில்வாயசூலமேந்தி, நேரிடும்போர்மிகவல்ல நிமலன்றன்னை நின்மலனையம்மலர்கொண் டயனுமாலும், பாரிடந்துமேலுயர்ந்துங்காணாவண்ணம் பரந்தானைநிமிர்ந்துமுனிக்கணங்களேத்துஞ், சீரெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. ௫

கார்முகிலாய்ப்பொழிவானைப் பொழிந்தமுந்நீர் கரப்பானைக்கடியநடைவிடையொன்றேறி, ஊர்பலவுந்திரிவானை யூரதாகவொற்றியூருடையனாய்முற்றுமாண்டு, பேரெழுத்தொன்றுடையானைப்பிரமனோடு மாலவனுமிந்திரனுமந்திரத்தாலேத்துஞ், சீரெறும்பியூர்மலைமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனானே. ௬

நீணிலவுமந்தீயுநீருமற்றை நெறியிலங்குமிருகாலுமாகாசமும், வாணிலவுதாரகையுமண்ணும்விண்ணு மன்னுயிருமென்னுயிருந் தானாஞ்செம்பொன், ஆணியென்றுமஞ்சனமாமலையேயென்று மம்பவளத்திரளென்று மறிந்தோரேத்துஞ், சேணெறும்பியூர்மலைமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. ௭

அறந்தெரியாவூத்தைவாயறிவில்சிந்தை யாரம்பக்குண்டரோடயர்த்ததுநாளும், மறந்துமரன்றிருவடிகணினையமாட்டா மதியிலியென் வாழ்வெலாம் வாளாமண்மேற், பிறந்தநானாளல்லவாளாவீசன் பேர்பிதற்றிச்சீரடிமைத்திறத்துளன்பு,செறிந்தெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்றடையப் பெற்றேனானே. ௮

அறிவிலங்குமனத்தானை யறிவார்க்கன்றி யறியாதார் தந்திறத்தொன்றறியாதானைப், பொறியிலங்குவாளரவம் புனைந்துபூண்டபுண்ணியனைப் பொருந்திராவாய்நஞ்சமுண்ட, குறியிலங்குமிடற்றானை மடற்றேன்கொன்றைச் சடையானை மடைதோறுங்கமலமென்பூச், செறியெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. ௯

அருந்தவத்தின்பெருவலியாலறிவதன்றி யடலரக்கன்றடவரையையெடுத்தான்றிண்டோள், முரிந்துநெரிந்தழிந்துபாதாளமுற்று முன்கைநரம்பினையெடுத்துக்கீதம்பாட இருந்தவனையேழுலகுமாக்கினானை யெம்மானைக்கைம்மாவீனுரிவைபோர்த்த, திருந்தெறும்பியூர்மலைமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேனானே.

திருச்சிற்றம்பலம்.



சுந்தரமூர்த்திசுவர்மிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
சரித்திரம்.

——()*()——

தண்கயிலையதுநீங்கி நாவலூர்வாழ் சைவனார்சடையனார் தநயனாராய், மண்புகழுவருட்டுறையா னோலைகாட்டி மணம்விலக்கவன்றொண்டா யதிகைசேர்ந்து, நண்பினுடனருள்புரியவாரூர்மேவி நலங்கிளரும்பரவைதோ ணயந்துவைகித், திண்குலவும்விறன்மிண்டர்திறல்கண்டேத்துந் திருத்தொண்டத்தொகையருளாற்செப்பினாரே.

செப்பலருங்குண்டையூர்நெல்லழைத்துத் திருப்புகலூர்ச் செங்கல்செழும்பொன்னாச்செய்து, தப்பின்முதுகுன்றர்தரும்பொருளாற்றிட்டுத் தடத்தெடுத்துச்சங்கிலிதோள் சார்ந்துநாத, னைப்பிறனித்தூதுவந்தாறாடுகீறியுறுமுதலைசிறுமதலையுமிழநல்கி, மெய்ப்பெரியகளிறேறியருளாற்சேரவேந்தருடன் வடகயிலைமேவினாரே.

ஸ்ரீகயிலாயத்தினின்றும் சிவபிரான் கட்டளையின்படி இங்கு எழுந்தருளித் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில்வாழும் ஆதிசைவராகியசடையனாருக்கும் இசைஞானியாருக்கும் முன்றவப்பயனால் திருக்குமாரராக அவதரித்துத் திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறைவள்ளலார் ஓலைகாட்டித்திருக்கல்யாணத்தைத்தடுத்தருளி வன்றொண்டரென்னுந் திருநாமந்தரப்பெற்றுச் சித்தவடமடத்தில் கருணாலயர்பிராமணக் கோலங்கொண்டு திருவடிதீக்ஷைசெய்தருளத் திருவாரூரையடைந்துவீதிவிடங்கப்பெ

ரூமான் பரவைநாச்சியாரை விவாகஞ்செய்வித்தருள அங்
கிருந்து விறன்மிண்டதேவர்வியப்புறும்படி தியாகப்பெரு
மான் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"
என்று அடியெடுத்துக் கொடுத்தருளத் திருத்தொண்டத்
தொகை திருவாய்மலர்ந்தும், குண்டையூரிற்கிடைத்த நெ
ன்மலைகளைப் பூதகணங்களைக்கொண்டு திருவாரூருக்குவரு
வித்தருளியும், சேரமான்பெருமாளோடு நண்புகொண்டரு
ளியும், திருப்புகலூரில் தலைக்குயரமாகவைத்த செங்கற்க
ளை மாற்றுயர்ந்தபொன்னாகச்செய்தருளியும், விருத்தாசல
நாதர் தந்தருளிய பன்னீராயிரம் பொன்னையும் மணிமுத்
தாநதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தில் எடுத்தருளி
யும், திருவொற்றியூரில் சங்கிலிநாச்சியாரை படம் பக்கநா
தப்பெருமான் திருவருளால் திருமணம்புரிந்தும், திருவா
ரூரில் பரவைநாச்சியார் திருமாளிகைக்கு ஆளுடையபெரு
மானைத் தூதுகொண்டருளியும், காவிரியாற்றுப் பெருவெ
ள்ளம் விலகிநிற்கத் திருவையாறடைந்து உடையவரைத்த
ரிசித்தருளியும், திருப்புக்கொளியூரில் முன்முதலையுண்டபி
ராமணப்பிள்ளையைத் தேவாரத்தால் சென்றவயதுடன்
அம்முதலைதரும்படி செய்தருளியும், மலைநாட்டுத்திருவஞ்
சைக்களத்திலிருக்கையில் கைலைநாயகன்கருணைசெய்தவெ
ள்ளையானையின்மீது பிரமாதிதேவர்கள்சூழ ஆரோகணித்
துச்சென்று சேரமான்பெருமாள் குதிரையேறிப்பின்னே
வர, பதினெட்டாம் ஆண்டில் ஆடிமீ சுவாதி நக்ஷத்திரங்
கூடிய சுபதினத்தில் திருக்கயிலாயமடைந்து நாயகன்கட்
டளையின்வழி முன்னைத்திருத்தொண்டில் வீற்றிருந்தருளி
னர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

தேவாரத்திரட்டு.

—o—

திருவெண்ணெய் நல்லூர்ப்பதிகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை [றையு
வைத்தாய்பெண்ணைதென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
ளத்தாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. ௧

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
றையு, ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. ௨

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
றையு, ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. ௩

முடியேனினிபிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையு, ளடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. ௪

பாதம்பணிவார்கள்பெரும்பண்டமதுபணியா
பாதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
றையு, ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. ௫

தண்ணார்மதிசூடிதழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தோய்
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
றையு, ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. சு

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
றையு, ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே. எ

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
றையு, ளாத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. அ

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையு, ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. கூ

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைகையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
யு, ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே, ω

திருச்சிற்றம்பலம்.

திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்திருப்பாதமேமனம்பாவித்தேன், பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந்தெய்தினேன், கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி, நற்றவாவுனைநான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாயவே. க

இட்டனும்மடியேத்துவா ரிகழ்ந்திட்டநாள்மறந்திட்டநாள், கெட்டநாளிவையென்றலாற்கரு தேன்கிளர்புனற்காவிரி, வட்டவாசிகைகொண்டடிதொழு தேத்துபாண்டிக்கொடுமுடி, நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. உ

ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேற், காவுநாளிவையென்றலாற்கரு தேன்கிளர்புனற்காவிரிப், பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி,நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே

எல்லையில்புகழெம்பிரானெந்தை தம்பிரானென்பொன்மாமணி, கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை, நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கரை யூரிற்பாண்டிக்கொடுமுடி, வல்லவாவுனைநான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாயவே. ச

அஞ்சினார்க்கர ணாதியென்றடி யேனுநான்மிக வஞ்சினேன், அஞ்சலென்றடித் தொண்டனேற்கருணல்கினாய்க்கழிகின்றதென், பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி, நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. ரு

எடுவானிளந் திங்கள்சூடினை யென்பின்கொல்புலித்தோலின்மேல், ஆடும்பாம்பதரைக்கசைத்த வழகனேயந்தண்காவிரிப், பாடுதண்புனல்வந்திழிபரஞ் சோதிபாண்டிக்கொடுமுடிச், சேடனேயுனைநான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாயவே. சு

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந் தேன்வினைகளும்விண்டன, நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டிடைக், குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடிமுடி, விரும்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. எ

செம்பொன்னேர் சடையாய் திரிபுரந்தீயெழச் சிலை கோலினாய், வம்புலாங்குழலாளைப் பாகமமர்ந்து காவிரிக் கோட்டிடைக், கொம்பின்மேற்குயில் கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி, நம்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாயவே. ௮

சாரணன்றந்தை யெம்பிரானெந்தை தம்பிரானென் பொன்மாமணியென்று, பேரொணுயிரகோடி தேவர்பிதற்றிநின்றுபிரிகிலார், நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடிக், காரணவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. ௯

சோணியபிறைசூடியைக்கறையூரிற் பாண்டிக்கொடுமுடி, பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப் பிறப்பிலியைப், பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை, நாணனைத்தொண்டனூரன்சொல்லிவை சொல்லுவார்க்கில்லை துன்பமே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்மயானம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடி மாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதோடு மகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந் தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப் பெரியபெருமானடிகளே.

விண்ணோர்தலைவர் வெண்புரிநூல்மார்பர் வேதகீதத்தர்
கண்ணார்நுதலர் நகுதலையர் காலகாலர்கடவூரர் [கம்
எண்ணார்புரமூன்றெரிசெய்த விறைவருமையோரொருபா
பெண்ணாணவர்மயானத்துப் பெரியபெருமானடிகளே.

காயும்புலியினதளுடையர் கண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந் தாமேயாயதலைவனார் [ட்டி
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பரமே
பேய்கள்வாழுமயானத்துப் பெரியபெருமானடிகளே. ௩

நறைசேர்மலரைங்கணையானை நயனத்தீயாற்பொடிசெய்த
இறையாராவரெல்லார்க்கு மில்லையென்றாதருள்செய்வார்
பறையார்முழுவம்பாட்டோடு பயிலுந்தொண்டர்பயில்கட
வூர்ப், பிறையார்சடையார்மயானத்துப் பெரியபெருமானடிகளே. ௪

கொத்தார்கொன்றைமதிசூடிக் கோள்நாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்து மருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள் பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. ௫

துணிவார்கீளுங்கோவணமுந் துதைந்துசுடலைப் பொடியணிந்து, பணிமேலிட்டபாசுபதர் * பஞ்சவடிமார்பினர்கடவூர்த், திணிவார்குழையார்புரமூன்றுந் தீவாய்ப்படுத்தசேவகனார், பிணிவார்சடையர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. ௬

காரார்கடலி னஞ்சுண்டகண்டர் கடவூருறைவாணர்
தேராராக்கன் போய்வீழ்ந்து சிதையவிரலாலூன்றினார்
ஊர்தானாவதுலகேழு முடையார்க் கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. ௭

வாடாமுலையாள்தன்னோடு மகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்று குறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்து யாவநாழிநிலையருள்செய்
பீடார்சடையர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. ௮

வேழமுரிப்பர்மழுவாளர் வேள்வியழிப்பர்சிரமறுப்பர்
ஆழியளிப்பரரிதனக்கன் றானைந்துகப்பரமுரைப்பர்

---

* பஞ்சவடியாவது-மயிர்ப்பூணூல். இதுமாவிரதியரென்னும் உட்சமயத்தாரணிவது. மேலும்அவர்களணியுமணி எலும்பினாலாகிய மணிகள், இவற்றை மானக்கஞ்சாறநாயனார் புராணத்து உ௩-வது திருவிருத்தத்தானுணர்க.

ஏழைத்தலைவர்கடவூரி லிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. ௯

மாடமல்குக—ஊரில் மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக் கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூர னம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற் பாவமானபறையுமே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டத்தொகை-பண்-கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்த மடியார்க்குமடியேன் திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன், இல்லையேயென்னாதஇயற்பகைக்குமடியேன் இளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன், வெல்லுமாமிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன் விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கடியே, னல்லிமென்முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. ௧

இலைமலிந்தவேல்நம்பி யெறிபத்தர்க்கடியேன் ஏனாதிநாதன்ற னடியார்க்குமடியேன், கலைமலிந்தசீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன் கடவூரிற்கலயன்றனடியார்க்கு மடியேன், மலைமலிந்ததோள்வள்ளல்மானக்கஞ்சாறனெஞ்சாதவாள்தாய னடியார்க்குமடியேன், அலைமலிந்தபுனல்மங்கையானயர்க்கடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. ௨

மும்மையாலுலகாண்ட மூர்த்திக்குமடியேன் முருகனுக்கும் உருத்திரபசுபதிக்குமடியேன், செம்மையேதிருநாளைப் போவார்க்குமடியேன் திருக்குறிப்புத்தொண்டர்தமடியார்க்குமடியேன், மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்கவெகுண்டெழுந்ததாதைதாள்மழுவினாலெறிந்த, அம்மையானடித்தண்டிப் பெருமானுக்கடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. ௩

திருநின்றசெம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன், பெருநம்பிகுலச்சிறைதன் னடியார்க்குமடியேன் பெருமிழலைக்குறும்பர்க்கும் பேயார்க்குமடியே, னொருநம்பியப்பூதி யடியார்க்குமடியே னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கடியே, னருநம்பிநமிநந்தி யடியார்க்குமடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. ௪

வம்பறாவரிவண்டு மணநாறமலரு மதுமலர்நற்கொன்றையா னடியலாற்பேணா, எம்பிரான்சம்பந்த னடியார்க்குமடியேன் ஏயர்கோன்கலிக்காம னடியார்க்குமடியே, னம்பிரான் திருமூல னடியார்க்குமடியே னாட்டமிகுதண்டிக்கு மூர்க்கர்க்குமடியேன், அம்பரான்சோமாசி மாறனுக்குமடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. ௫

வார்கொண்டவனமுலையா ளுமைபங்கன்கழலே மறவாதுகல்லெறிந்த சாக்கியர்க்குமடியேன், சீர்கொண்டபுகழ்வள்ளல் சிறப்புலிக்குமடியேன் செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டர்க்கடியேன், கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன் கடற்காழிக்கணநாத னடியார்க்குமடியே, னார்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. ௬

பொய்யடிமையில்லாத புலவர்க்குமடியேன் பொழிற்கருவூர்த்துஞ்சிய புகழ்ச்சோழர்க்கடியேன், மெய்யடியானரசிங்கமுனையரையர்க்கடியேன்விரிதிரைசூழ்கடனாகையதிபத்தர்க்கடியேன், கைதடிந்தவரிசிலையான் கலிக்கம்பன் கலியன் கழற்சத்திவரிஞ்சையர்கோ னடியார்க்குமடியேன், ஐயடிகள்காடவர்கோ னடியார்க்குமடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. ௭

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த கணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியே, னிறைக்கொண்டசிந்தையா னெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாற னடி

யார்க்குமடியேன், துறைக்கொண்டசெம்பவள மிருளகற் றுஞ்சோதித் தொன்மயிலைவாயிலா னடியார்க்குமடியே, னறைக்கொண்டவேல்நம்பி முனையடுவார்க்கடியேன் ஆரூ ரன் ஆரூரிலம்மானுக்காளே. அ

கடல்சூழ்ந்தவுலகெலாங் காக்கின்றபெருமான் காட வர்கோன்கழற்சிங்க னடியார்க்குமடியேன், மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந்தஞ்சை மன்னவனுஞ்செருத்து ணைத னடியார்க்குமடியேன், புடைசூழ்ந்தபுலியதண்மே லரவாடவாடி பொன்னடிக்கேமனம்வைத்த புகழ்த்துணை க்குமடியேன், அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்குமடி யேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. கூ

பத்தராய்ப்பணிவார்க ளெல்லார்க்குமடியேன் பரம னையேபாடுவாரடியார்க்கு மடியேன், சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்குமடியேன் திருவாரூர்ப்பிறந்தார்க ளெ ல்லார்க்குமடியேன் முப்போதுந்திருமேனி தீண்டுவார்க் கடியேன் முழுநீறு பூசிய முனிவர்க்குமடியேன், அப்பாலு மடிச்சார்ந்தா ரடியார்க்குமடியேன் ஆரூரன் ஆரூரிலம்மா னுக்காளே. ௰

மன்னியசீர் மறைநாவனின்றவூர்ப்பூசல் வரிவளையா ள்மானிக்கும் நேசனுக்குமடியேன், தென்னவனுயுலகாண் டசெங்கணார்க்கடியேன் திருநீலகண்டத்துப்பாணனார்க்க டியே, னன்னவனுமரவடியே யடைந்திட்டசடைய னிசை ஞானிகாதலன் திருநாவலூர்க்கோ, னன்னவனு மாரூர் னடிமைகேட்டுகப்பா ராரூரிலம்மானுக்கன்பராவாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருப்பாச்சிலாச்சிராமம் பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன்றனக்கேதலையுமென்னாவும் நெஞ்சமும்வஞ் சமொன்றின்றி, யுய்த்தனன்றனக்கே திருவடிக்கடிமை யு ரைத்தக்காலும்வமனேயொக்கும், பைத்தபாம்பார்த்தோர் கோவணத்தோடு பாச்சிலாச்சிராமத் தெம்பரமர், பித்தரே யொத்தோர் நச்சிலராகி லிவரலாதில்லையோ பிரானார். க

அன்னையேயென்னே னத்தனேயென்னேனடிகளேய மையுமென்றிருந்தேன், என்னையுமொருவ னுளனென்றுக ருதியிறையிறைதிருவருள்காட்டாய்,அன்னமாம்பொய்கை சூழ்தருபாச்சிலாச் சிராமத்துறையடிகள், பின்னையேயடி யார்க்கருள்செய்வதாகி லிவரலாதில்லையோ பிரானார். உ

உற்றபோதல்லா லுறுதியையுணரே னுள்ளமேயமையு மென்றிருந்தேன், செற்றவர்புரமூன்றெரியெழச்செற்றசெ ஞ்சடை நஞ்சடைகண்டர், அற்றவர்க்கருள்செய்பாச்சிலாச் சிராமத் தடிகடாமியாது சொன்னாலும், பெற்றபோதுவந் துபெருவிடிலிகழி லிவரலாதில்லையோ பிரானார். ங

நாச்சிலபேசிநவர்பிறரென்றுநன்றுதீதென்கிலர்மற்றோர் பூச்சிலைநெஞ்சே பொன்விளைகழனி புள்ளினஞ்சிலம்புமாம் பொய்கைப், பாச்சிலாச்சிராமத்தடிகளென்றிவர்தாம் பல ரையுமாட்கொள்வர்பரிந்தோர், பேச்சிலரொன்றைத்தரவி லராகிலிவரலாதில்லையோ பிரானார். ச

வரிந்தவெஞ்சிலையா லந்தரத்தெயிலை வாட்கணங்கன் ரேனும், புரிந்தவனுளேபுகழ்தக்கவடிமை போகுநாள்வீண் நாளாகிப், பரிந்தவர்க்கருள்செய் பாச்சிலாச்சிராமத் தடிக டாமியாது சொன்னாலும், பிரிந்திறைப்போதிற்போவதே யாகிலிவரலாதில்லையோ பிரானார். ரு

செடித்தவஞ்செய்வார்சென்றுழிச்செல்லேன் றீவினைசெ ற்றிடுமென்று,அடித்தவமல்லாலாரையமறியேனுவதுமறிவ ரெம்மடிகள், படைத்தலைச்சூலம்பற்றியகையர்பாச்சிலாச்சி

ராமத்தெம்பரமர், பிடித்தவெண்ணீறே பூசுதலானு லிவர லாதில்லையோபிரானர். ௬

கையதுகபாலங்காடுறைவாழ்க்கை கட்டங்கமேந்தியகையர், மெய்யதுபுரிநூன் மிளிரும்புன்சடைமேல் வெண்டிங்கள் சூடியவிகிர்தர், பையரவல்குற் பாவையராடும் பாச்சிலாச்சிராமத்தெம்பரமர், மெய்யரேயொத்தோர்பொய்செய்வதாகி லிவரலாதில்லையோபிரானர். ௭

நிணம்படுமுடலைநிலைமையென்றோரேநெஞ்சமே தஞ்சமென்றிருந்தேன், கணம்படிந்தேத்திக் கங்குலும்பகலும் கருத்தினாற் கைதொழுதெழுவேன், பணம்படுமரவம்பற்றியகையார் பாச்சிலாச்சிராமத்தெம்பரமர், பிணம்படுகாட்டிலாடுவதாகி லிவரலாதில்லையோ பிரானர். ௮

குழைத்துவந்தோடிக்கூடுதிநெஞ்சே குற்றேவல்நாடொறுஞ் செய்வான், இழைத்தநாள் கடவா ரன்பிலரேனுமெம்பெருமானென் றெப்போதும், அழைத்தவர்க்கருள்செய்பாச்சிலாச்சிராமத்தடிகடாமியாது சொன்னாலும், பிழைத்தது பொறுத்தொான் றீகிலராகி லிவரலாதில்லையோ பிரானர்.

துணிப்படுமுடையுஞ்சுண்ணவெண்ணீறுந்தோற்றமுஞ் சிந்தித்துக்காணின், மணிப்படுகண்டனை வாயினார்கூறிமனத்தினாற்றொண்டனேனினைவேன், பணிப்படுமரவம்பற்றியகையர்பாச்சிலாச்சிராமத் தெம்பரமர், பிணிப்படவாண்டு பணிப்பிலராகி லிவரலாதில்லையோ பிரானர். ௰

ஒருமையேயல்லேனெழுமையுமடியேமடியவர்க்கடியனுமானேன், உரிமையாலுரியேனுள்ளமுமுருகுமொண்மலர்ச்சேவடிகாட்டாய், அருமையாம்புகழார்க்கருள்செயும்பாச்சிலாச்சிராமத்தெம்மடிகள், பெருமைகள்பேசிச்சிறுமைகள் செய்யிலிவரலாதில்லையோ பிரானர். ௧௧

ஏசினவல்ல விகழ்ந்தனவல்ல வெம்பெருமானென்றெப்போதும், பாயினபுகழான் பாச்சிலாச்சிராமத் தடிகளையடிதொழப்பன்னாள், வாயினாற்கூறிமனத்தினானினைவான்வளவயனாவலாரூரன், பேசினபேச்சைப்பொறுத்திலராகி லிவரலாதில்லையோ பிரானர். ௧௨

திருச்சிற்றம்பலம்.

திருக்கற்குடி பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாய் பரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அடிகேளெம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே. ௧

மறையோர்வானவருந் தொழுதேத்தி வணங்கநின்ற
விறைவாவெம்பெருமா னெனக்கின் னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அறவாவங்கணனே யடியேனையு மஞ்சலென்னே. ௨

சிலையால்முப்புரங்கள் பொடியாகச்சிதைத்தவனே
மலைமேல்மாமருந்தே மடமாதிடங் கொண்டவனே
கலைசேர்கையினனே திருக்கற்குடி மன்னிநின்ற
அலைசேர்செஞ்சடையா யடியேனையுமஞ்சலென்னே. ௩

செய்யார்மேனியனே திருநீல மிடற்றினனே
மையார்கண்ணிபங்கா மதயானை யுரித்தவனே
கையார்சூலத்தினாய் திருக்கற்குடி மன்னிநின்ற
ஐயாவெம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே. ௪

சந்தார்வெண்குழையாய் சரிகோவண வாடையனே
பந்தாடும்விரலா ளொருபாக மமர்ந்தவனே
கந்தார்சோலைகள்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
எந்தாயெம்பெருமா னடியேனையு மேன்றுகொள்ளே. ௫

அரையார்கீளொடு கோவணமு மரைக்கசைத்து
விரையார்கொன்றையுடன்விளங்கும் பிறைமேலுடையாய்
கரையாரும்வயல்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அரையாவெம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே. ௬

பாரோர்விண்ணவரும் பரவிப்பணிந் தேத்தநின்ற
சீரார்மேனியனே திகழ்நீல மிடற்றினனே
காரார்பூம்பொழில்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
ஆராவின்னமுதே யடியேனையு மஞ்சலென்னே. ௭

நிலனேநீர்வளிதீ நெடுவானக மாகிநின்ற
புலனேபுண்டரிகத் தயன்மாலவன் போற்றிசெய்யுங்
கனலேகற்பகமே திருக்கற்குடி மன்னிநின்ற
அனல்சேர்கையினனே யடியேனையு மஞ்சலென்னே. அ

வருங்காலன் னுயிரை மடியத்திரு மெல்விரலாற்
பெரும்பாலன் றனக்காய்ப் பிரிவித்த பெருந்தகையே
கரும்பாரும்வயல்சூழ் திருக்கற்குடிமன்னிநின்ற
விரும்பாவெம்பெருமா னடியேனையும் வேண்டுதியே. கூ

அலையார்தண்புனல்சூழ்ந் தழகாகி விழவமருங்
கலையார்மாதவர்சேர் திருக்கற்குடிக் கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாள் நல்லசிங்கடி யப்பனுரை
விலையார்மாலைவல்லார் வியன்மூவுலகாள்பவரே. ய

திருச்சிற்றம்பலம்.

திருப்பைஞ்ஞிலி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காருலாவியநஞ்சையுண்டிருள் கண்டர்வெண்டலையோ
டுகொண், டூரெலாந்திரிந்தென்செய்வீர் பலியோரிடத்தி
லேகொள்ளுநீர், பாரெலாம்பணிந்தும்மையேபரவிப்பணி
யும் பைஞ்ஞீலியீர், ஆரமாவது நாகமோசொலு மாரணீய
விடங்கரே. க

சிலைத்துநோக்கும்வெள்ளேறு செந்தழல்வாயபாம்பது
மூசெனும், பலிக்குநீர்வரும்போது நுங்கையிற்பாம்புவேண்
டாபிரானிரே,மலைத்தசந்தொடுவேங்கைகோங்கமுமன்னு
காரகில்சண்பகம். அலைக்கும்பைம்புனல் சூழ்பைஞ்ஞீலியி
லாரணீயவிடங்கரே. உ

தூயவர்கண்ணும்வாயு மேனியுந்துன்ன வாடைசுடலை
யிற், பேயோடாடலைத்தவிரு நீரொருபித்தரோ வெம்பி
ரானிரே, பாயுநீர்க்கிடங்கார்கமலமும்பைந்தண்மாதவிபுன்
னையும், ஆயபைம்பொழில் சூழ்பைஞ்ஞீலியி லாரணீய
விடங்கரே. ங

செந்தமிழ்த்திறம்வல்லிரோ செங்கணரவமுன் கையிலா
டவே வந்துநிற்குமிதென்கொலோ பலிமாற்றமாட்டோ
மிடுகிலோம், பைந்தண்மாமலருந்து சோலைகள் கந்தநாறு
பைஞ்ஞீலியீர், அத்திவானமுமேனியோ சொல்லுமாரணீ
யவிடங்கரே. ச

நீறுநுந்திருமேனிநித்தில நீணெடுங்கண்ணி னளொடுங்,
கூறராய்வந்து நிற்றிராற் கொணர்ந்திடுகிலோம் பலிநட
மினேபாறுவெண்டலைகையிலேந்திப்பைஞ்ஞீலியெனென்
றீரடிகணீர், ஆறுதாங்கியசடையரோ சொல்லுமாரணீய
விடங்கரே ரு

குரவநாறியகுழலினர் வளைகொள்வதே தொழிலாகிநீர்,
இரவுமிம்மனையறிதிரே யிங்கேநடந்துபோகவும் வல்லிரே,
பரவிநாடொறும்பாடுவார்வினை பற்றறுக்கும்பைஞ்ஞீலியீர்
அரவமாட்டவும்வல்லிரோசொல்லு மாரணீயவிடங்கரே.

எடுலாமலர்க் கொன்றைசூடுதி ரென்பெலாமணிந்தென்
செய்வீர், காடுநும்பதியோடுகையது காதல்செய்பவர்பெறு
வதென், பாடல்வண்டிசையாலும் சோலைப்பைஞ்ஞிலியே
னென்றுநிற்றிரால், ஆடல்பாடலும் வல்லிரோசொல்லுமா
ரணீயவிடங்கரே. எ

மத்தமாமலர்க்கொன்றை வன்னியுங்கங்கையா ளொடுதி
ங்களு, மொய்த்தவெண்டலை கொக்கிறகொடு வெள்ளெரு
க்கமுஞ்சடையதாம், பத்தர்சித்தர்கள் பாடியாடும்பைஞ்ஞீ
லியேனென்றுநிற்றிரால், அத்தியீருரிபோர்த்திரோசொல்
லுமாரணீய விடங்கரே. அ

தக்கைதண்ணுமை தாளம்வீணை தகுணிச்சங்கிணைசல்ல
ரி, கொக்கரைகுடமுழவினோடிசைகூடிப்பாடிநின்றுடுவீர்,
பக்கமேகுயில்பாடுஞ் சோலைப்பஞ்ஞீலியே னென்றுநிற்றி
ரால், அக்குமாமையும் பூண்டிரோ சொல்லுமாரணீய
விடங்கரே. கூ

கையோர்பாம்பரையார்த் தோர்பாம்புகழுத்தோர் பாம்
பவைபின்புதாழ், மெய்யெலாம் பொடிக்கொண்டு பூசுதிர்
வேத மோதுதிர்கீதமும், பையவேவிடங்காகநின் றுபைஞ்
ஞீலியே னென்றீரடிகணீர், ஐயமேற்குமி தென்கொலோ
சொல்லு மாரணீயவிடங்கரே. ௰

அன்னஞ்சேர்வயல்சூழ் பைஞ்ஞீலியிலாரணீயவிடாங்க
ரை, மின்னும்நுண்ணிடை மங்கைமார்பலர்வேண்டிக்காத
ல்மொழிந்தசொல், மன்னுதொல்புகழ் நாவலூரன்வன்றொ
ண்டன்வாய்மொழிபாடல்பத்,துன்னியின்னிசைபாடுவாரு
மைகேள்வன்சேவடிசேர்வரே. ௧௧

திச்சிற்றம்பலம்.

திருவானைக்கா - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயின நான்குமற்றுள பொருள்களுமெல்லாந்
துறையுந்தோத்திரத் திறையுந்தொன்மையு நன்மையுமாய
வறையும்பூம்புன லானைக்காவுடை யாதியைநாளு
மிறைவனென்றடி சேர்வாரெம்மையு மாளுடையாரே. ௧

வங்கமேவிய வேலைநஞ்செழ வஞ்சர்கள்கூடித்
தங்கண்மேலடராமை யுண்ணென வுண்டிருள்கண்ட
னங்கமோதிய வானைக்காவுடை யாதியைநாளு
மெங்களீசனென் பார்களெம்மையு மாளுடையாரே. ௨

நீலவண்டறை கொன்றைநேரிழை மங்கையோர்திங்கள்
சாலவாளர வங்கடங்கிய செஞ்சடையெந்தை
யாலநீழலுலானைக் காவுடையாதியை நாளும்
எலுவாறு வல்லார்களெம்மையு மாளுடையாரே. ௩

தந்தையாயுலகுக் கோர்தத்துவன் மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயின பெருமான்பரி சுடையவர்திருவடிக

ளந்தண்பூம் புனலானைக்காவுடை யாதியைநாளு
மெந்தையென்றடி சேர்வாரெம்மையு மாளுடையாரே ௪

கணைசெந்தீ யரவந்நாண் கல்வளையுஞ் சிலையாகத்
துணைசெய்மும்மதின் மூன்றுஞ்சுட்டவனே குயுலய்ய
வணையும்பூம் புனலானைக்காவுடை யாதியைநாளு
மிணைகொள் சேவடிசேர்வாரெம்மையு மாளுடையாரே. ௫

விண்ணின்மாமதி சூடிவிலையிலி கலனணிவிமலன்
பண்ணினேர்மொழி மங்கைபங்கினன் பசுவுகந்தேறி
யண்ணலாகிய வானைக்காவுடை யாதியைநாளு
மெண்ணுமாறு வல்லார்களெம்மையு மாளுடையாரே. ௬

தாரமாகிய பொன்னித்தண்டுறை யாடிவிழுத்து
நீரினின்றடி போற்றிநின்மல கொள்ளெனவாங்கே
யாரங்கொண்ட வெம்மானைக்காவுடை யாதியைநாளு
மீரமுள்ளவர் நாளுமெம்மையு மாளுடையாரே. ௭

உரவமுள்ளதோ ருழையின்னுரிபுலி யதளுடையானை [னை
விரைகொள்கொன்றையினானை விரிசடைமேற் பிறையா
யரவம்வீக்கிய வானைக்காவுடை யாதியைநாளு
மிரவுமெல்லியும்பகலுமேத்துவாரெம்மையுமாளுடைாரே.

வலங்கொள்வாரவர் தங்கள்வல்வினை தீர்க்குமருந்து
கலக்கங்காலனைக் காலாற்காமனைக் கண்சிவப்பானை
யலங்கனீர் பெருமானைக்காவுடை யாதியைநாளு
மிலங்குசேவடி சேர்வாரெம்மையு மாளுடையாரே. ௯

ஆழியாற் கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாக நின்றருள்கூர நினைந்து
வாழவல்லவன் றொண்டன்வண்டமிழ் மாலைவல்லார்போ
யேழுமாபிறப் பற்றுவெம்மையு மாளுடையாரே. ௰

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம்.

——()*()——

புராணசாரம்.

செய்யதிருவாதவூர் வந்தருளியமைச்சரெனச்சிறந்து
நீடு, வையமிசைவழுதிநிதி கொண்டரனைக்குருந்தடியில்
வணங்கிஞால, முய்யவருட்பணியாற்றிநரிபரியாச்செய்து
நதியுடைப்பிலெங்க, ளையன்முடிமிசையுவந்து மண்சுமக்க
வன்பினுருவாயினரே.

எங்குமாகியவழகன்மேனிபிரம்படிதாங்க வேங்கிப்புத்தர்
மங்கவாருள்செய்து மூகைபேசிட வழங்கி மணிமன்று
மெங்கணாயகன்கரத்தாலேடுமெழுத்தாணியுங்கொண்டெ
ழுதப்பாடி, யங்கண்மேவியசோதி தன்னிலிரண்டறக்கூடி
யமர்ந்திட்டாரே.

திருச்சிற்றம்பலம்.

இம்மாணிக்கவாசக சுவாமிகள் சைவசமயாசாரியர்கள் நால்வர்களி லொருவராவர். இவர் பாண்டிவளநாட்டிலே திருவாதவூரென்னுந் திவ்வியதிருப்பதியிலே ஆமாத்தியப் பிராமண குலத்திலே அவதரித்து வாதவூரரென்னும் பிள்ளைத்திருநாமமிடப்பெற்று ஐந்துவயதிலே வேதாகமபுராணாதிசாஸ்திரங்களையுணர்ந்து, சுக்கிலபட்சத்துச்சுதாகரன் போல்வளர்ந்து, எவ்வனப்பருவமடைந்து, பாண்டியராஜன் வேண்டியவாறே அப்பாண்டியனிடத்து முதலமைச்சராய் அமர்ந்து, ஞானாசாரியரை எப்பொழுது கிடைக்கப்பெறுவோமென்கிறபெருநாட்டத்துடன், கீழைக்கடற்றுறைக்கு

ச்சென்று குதிரைவாங்கிவருவதாய்ப் பாண்டியனிடத்தும
ளவிறந்ததிரவியங்களைப்பெற்றுக்கொண்டுசென்று, வழியி
லுள்ள திருப்பெருந்துறையிலே எல்லாம் வல்லபரமேசுவர
ன்தமது கணங்கள் மாணாக்கர்களாகச்சூழத் தாம்நடுவே கு
ருமூர்த்தமா யெழுந்தருளியிருப்பக்கண்டு பேரானந்தமுற்
றானந்தமுதமுப்ப உரோமஞ்சிலிர்ப்ப அஞ்சலியஸ்தராய்ச்
சமீபித்து, வேதங்களின் முடிவாகிய சிவஞானபோதத்தை
க்காட்டி இதன்பொருளிதுதானெனச் சின்முத்திரையாட்
டியுபதேசிக்கப்பெற்று, குருநாதனுக்கு இனியபாமாலையிய
ற்றிச்சாத்தி, அப்பாமாலைகள் மாணிக்கமாலை போலிருப்பக்
கண்டு சிவபெருமானால் மாணிக்கவாசகரெனத் தீட்சா
நாமமிடப்பெற்று, குதிரைவாங்குவதற்குக் கொண்டுவந்த
பொருள்களைக்கொண்டு சிவாலயத்திருப்பணிசெய்து கொ
ண்டிருந்தனர். பாண்டியராஜன் குதிரைவராததற்குக்கார
ணமென்னவென ஒற்றரைவிடுப்ப, வாதவூரர் சிவபெருமா
ன்சந்நிதியில் விண்ணப்பித்து உத்தரவுகிடைத்தவாறே பா
ண்டியனிடஞ்சென்று சின்னாளிற் குதிரைவருமெனக்கூறி
னர். அங்ஙனமேசின்னாட்சென்றுங் குதிரைவராமைகண்டு
பாண்மான் காட்டிலேதிரிகின்ற நரித்திரள்களைநாட்டிலே
திரிகின்றபெரியபரித்திரள்களாக்கி அரசனிடஞ்செலுத்தி
ச் சந்தோஷிக்கச்செய்துமணிவாசகரை வருத்தத்தினின்று
ம்விடுவித்தனர். அன்றிரவு பெருமான்றிருவுள்ளப்படி அப்
பரித்திரள்களனைத்தும் நரித்திரள்களாய்முன்னுள்ளகுதி
ரைகளுக்குங் கெடுதிசெய்துபட்டணமெங்கும்பெரியதோ
ர்கூக்குரலுண்டாக்கித் தம்பழையவிடங்களைச் சார்ந்தன,
மறுநாள் பாண்டியன் இச்செய்திகேட்டுக் கோபாவேசத்த
னாய் மணிவாசகராய்மந்திரிதன்னை ஏமாற்றியதாயெண்ணி
அவரைமுன்னை நாளிலுமதிகமாகவருத்தும்படிசெய்தனன்
அவ்வேதனைபொறுக்கமாட்டாத அன்பர்க்கிரங்கிச்சிவபெ
ருமான்வைகையாற்றைப் பட்டணத்தின்மீதுபெருகிவரச்
செய்தனர் பின்புஅரசன்கட்டளைப்படி சிவபெருமான்பிட்
டுவாணிச்சிக்கு ஓராளாகித்தமதுதிருமுடிமீது மண்சுமந்து
ம்பாண்டியன் பிரம்பாலடிக்கப்பட்டும் மணிவாசகரதுமகி
மையை யாவருக்கும் அறிவித்தனர்.

அதன்பின்னர்மாணிக்கவாசகர் தமதுமந்திரித்தொழி
லைக் கைவிட்டுத் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளிச் சில
திருப்பாடல்கள் செய்துமற்றுஞ் சிவத்தலங்கட்குச்சென்று
வணங்கிக்கொண்டு சிதம்பரமென்னுந் தலத்துக்கு வந்து
நடராஜப்பெருமானைத் தொழுது பலவகைப்பட்ட திருப்
பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளிப்பின்பு வேதசிவாகம
மார்க்கத்துக்கு மாறுபட்ட புத்தரை வாதில்வென்று ஒரு
மைப்பெண்ணைபேசும்படிசெய்துபின்புசிலநாள் அப்பாண்
டியன் மணிவாசகரைவருத்தினன். அப்பொழுதுசிவபெரு
தலத்தில் எழுந்தருளி யிருந்தனர். அப்போது சிவபெரு
மான் ஓரந்தணராகி அவரிடத்திலேசென்றுஅவர் அத்தல
த்திலும் மற்றும் பற்பல தலங்களிலுஞ் செய்தருளிய
திருப்பாடல்களை யெல்லாந் தொகுத்துக் கூறவும், திருக்
கோவையார் பாடவும்கேட்டு அவர்திருவாய் மலர்ந்தவண்
ணம் தமது அருமைத்திருக்கரத்தால் எழுதி அப்புத்தகங்
களில் அழகிய திருச்சிற்றம்பல முடையானெனக்கையெழு
த்தும் வைத்து மறைந்தருளினர் அதன்பின்பு மாணிக்
கவாசக சுவாமிகள் ஆனிமாதமகநட்சத்திரத்திலே சோதி
மயமாகவிளங்கிய சிதாகாசத்தில் இரண்டறக் கலந்தருளி
னர். சுபம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசகசுவாமிகள்

திருவாசகம்.

———(௦)———

திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமுமில்லாவரும் பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோ நின்செவிதான் [ய்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த் தொலிபோ
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும் புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். (க)

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ [வோ
முன்னடியார்தாள்பணிவோ மாங்கவர்க்கேபாங்கா
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய். (உ)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்

பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய்

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறாமிணையடிகள்
போற்றிமாலான்முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய். (ச)

திருச்சிற்றம்பலம்.

திருவம்மானை

திருச்சிற்றம்பலம்.

செங்கணெடுமாலுஞ்சென்றிடந்துங்காண்பரிய
பொங்குமலர்ப்பாதம்பூதலத்தேபோந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத்தென்னன்பெருந்துறையா
னங்கணனந்தணனாயறைகூவிவீடருளு
மங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானாய். (க)

சந்திரனைத்தேய்த்தருளித்தக்கன்றன்வேள்வியினி
லிந்திரனைத்தோணெரித்திட்டெச்சன்றலையரிந்
தந்தரமேசெல்லுமலர்கதிரோன்பற்றகர்த்துச்
சிந்தித்திசைதிசையேதேவர்களையோட்டுகந்த
செந்தார்ப்பொழில்புடைசூழ்தென்னன்பெருந்துறையான்
மந்தாரமாலையேபாடுதுங்காணம்மானாய். (உ)

ஊனாயுயிராயுணர்வாயென்னுட்கலந்து
தேனாயமுதமுமாய்த்தீங்கரும்பின்கட்டியுமாய்

வானோரறியாவழியெமக்குத்தந்தருளுந்
தேனார்மலர்க்கொன்றைச்சேவகனார்சீரொளிசே
ரானவறிவாயளவிறந்தபல்லுயிர்க்குங்
கோனாகிநின்றவாகூறுதுங்காணம்மானாய். (௫)

பெற்றிபிறர்க்கரியபெம்மான்பெருந்துறையான்
கொற்றக்குதிரையின்மேல்வந்தருளித்தன்னடியார்
குற்றங்களீக்கிக்குணங்கொண்டுகோதாட்டிச்
சுற்றியசுற்றத்தொடர்வறுப்பான்றொல்புகழே
பற்றிப்பாசத்தைப்பற்றறநாம்பற்றுவான்
பற்றியபேரானந்தம்பாடுதுங்காணம்மானாய். (௬)

திருச்சிற்றம்பலம்.

வாழாப்பத்து

திருச்சிற்றம்பலம்.

பாரொடுவிண்ணாய்ப்பரந்தவெம்பரனே
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாரொடுநோகேனார்க்கெடுத்துரைக்கே
னாண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௧)

வம்பனேன்றன்னையாண்டமாமணியே
மற்றுநான்பற்றிலேன்கண்டா
யும்பருமறியாவொருவனேயிருவர்க்
குணர்விறந்துலகமூடுருவுஞ்
செம்பெருமானேசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெம்பெருமானேயென்னையாள்வானே
யென்னைநீகூவிக்கொண்டருளே. (௨)

பண்ணினேர்மொழியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திண்ணமேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெண்ணமேயுடல்வாய்மூக்கொடுசெவிகண்
ணென்றிவைநின்கணேவைத்து
மண்ணின்மேலடியேவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௩)

பந்தணைவிரலாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யந்தமிலமுதேயரும்பெரும்பொருளே
யாரமுதேயடியேனை
வந்துய்வாண்டாய்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே (௪)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாழல்.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்குமியல்பானான்சாழலோ. (௧)

என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பொய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சாடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ. (௨)

கோயில்சுடுகாடுகொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலிதான்றனியன்காணேடீ

தாயுமிலிதந்தையிலிதான் றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங்கற்பொடிகாண்சாழலோ. (௩)

அயனை யனங்கனையந்தகனைச்சந்திரனை
வயனங்கண்மாயாவடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன்றுடையநாயகனே தண்டித்தார்
சயமன்றோவானவர்க்குத்தாழ்குழலாய்சாழலோ. (௪)

அருந்தவருக்காலின்கீழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமதுவெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான் கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கைதெரியாகாண்சாழலோ (௫)

திருச்சிற்றம்பலம்.

அருட்பத்து.

திருச்சிற்றம்பலம்.

சோதியேசுடரேசூழொளிவிளக்கே
சுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையி
னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௧)

நிருத்தனேநிமலாநீற்றனேநெற்றிக்
கண்ணனேவிண்ணுளோர்பிரானே
யொருத்தனேயுன்னையோலமிட்டலறி
யுலகெலாந்தேடியுங்காணேன்
றிருத்தமாம்பொய்கைத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரறுத்தனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௨)

எங்க[illegible]யகனேயென்னுயிர்த்தலைவா
வேலவார்குழலிமாரிருவர்
தங்கணாயகனேதக்கநற்காமன்
றனதுடறழலெழவிழித்த
செங்கணாயகனேதிருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரங்கணாவடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௩)

முத்தனேமுதல்வாமுக்கணாமுனிவா
மொட்டறாமலர்பறித்திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்
பரகதிகொடுத்தருள்செய்யுஞ்
சித்தனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரத்தனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே (௪)

மருளனேன்மனத்தைமயக்கறநோக்கி
மறுமையோடிம்மையுங்கெடுத்த
பொருளனேபுனிதாபொங்குவாளரவங்
கங்கைநீர்தங்குசெஞ்சடையாய்
தெருளுநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருளனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௫)

திருந்துவார்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரிருந்தவாறெண்ணியேசாநினைந்திட்
டென்னுடையெம்பிரானென்றென்
றருந்தவாநினைந்தேயாதரித்தழைத்தா
லலைகடலதனுளேநின்று
பொருந்தவாகயிலைபுகுநெறியீதுகாண்
போதராயென்றருளாயே. (௬)

திருச்சிற்றம்பலம்.

பிடித்தபத்து

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்கரசேயொழிவறநிறைந்த
யோகமேயூற்றையேன்றனக்கு
வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டு
வாழ்வறவாழ்வித்தம்மருந்தே
செம்பொருட்டுணிவேசீருடைக்கழலே
செல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௧)

அம்மையேயப்பாவொப்பிலாமணியே
யன்பினில்விளைந்தவாரமுதே
பொம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப்புலையனென்றனக்குச்
செம்மையேயாயசிவபதமளித்த
செல்வமேசிவபெருமானே
யிம்மையேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௨)

அத்தனேயண்டரண்டமாய்நின்ற
வாதியேயாதுமீறில்லாச்
சித்தனேபத்தர்சிக்கெனப்பிடித்த
செல்வமேசிவபெருமானே
பித்தனேயெல்லாவுயிருமாய்த்தழைத்துப்
பிழைத்தவையல்லையாய்நிற்கு
மெத்தனேயுன்னைச்சிக்கெனக்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௩)

பாவினைத்தாட்டுந்தாயினுஞ்சாலப்
பரிந்துநீபாவியேனுடைய
வூனினையுருக்கியுள்ளொளிபெருக்கி
யுலப்பிலாவானந்தமாய

தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்த
செல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௪)

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப்
பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுருக்கியெளியையாயாண்ட
வீசனேமாசிலாமணியே
துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்
தொடக்கெலாமறுத்தநற்சோதீ
யின்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௫)

திருச்சிற்றம்பலம்.

திருப்புலம்பல்.

திருச்சிற்றம்பலம்

பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறாவெண்ணீறாடீ
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே. (௧)

சடையானேதழலாடீதயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதீமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனு
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே. (௨)

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே. (௩)

திருச்சிற்றம்பலம்.

அச்சோப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௧)

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே. (௨)

பொய்யெல்லாமெய்யென்றுபுணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனைமாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான்றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௩)

மண்ணதனிற்பிறந்தெய்த்துமாண்டுவிழக்கடவேனை [ன்
யெண்ணமிலாவன்பருளியெனையாண்டிட்டென்னையுந்த
சுண்ணவெண்ணீறணிவித்துத்தூய்நெறியேசேரும்வண்
மண்ணலெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௪) [ண

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயத்துயர்கூரநிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனுடையானேயடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவாறார்பெறுவாரச்சோவே. (௫)

வெந்துவிழுமுடற்பிறவிமெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார்குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டுபரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௬)

தையலார்மையலிலேதாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்துபாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட்டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௭)

சாதல்பிறப்பென்னுந்தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார்கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான்றன்கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௮)

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்றா
னம்மையுமோர்பொருளாக்கிநாய்ச்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பொறுவாரச்சோவே (௯)

திருச்சிற்றம்பலம்

நால்வர் துதி.

திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் துதி.

புனலிலேடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத்தத்துமே
கனலிலேடிடப்பச்சென்றிருக்குமே
கதவுமாமறைக்காட்டிலடைக்குமே
பனையலாண்பனை பெண்பனையாகுமே
பழையவென்புபொற் பாவையதாகுமே
சினவராவிடந் தீரெனத்தீருமே
சிறந்தசம்பந்தர் செந்தமிழ்ப்பாடலே.

திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.

தலைகொனஞ்சமு தாகவிளையுமே
தழலினீறு தடாகமதாகுமே
கொலைசெயானை குனிந்துபணியுமே
கூரராவிடந் தீரெனத்தீருமே
கலைகொள்வேத வனப்பதிதன்னுளே
கதவுமீண்டு கடுகத்திறக்குமே
அலைகொள்வாரியிற் கல்லுமிதக்குமே
அப்பர்போற்று மருந்தமிழ்ப்பாடலே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

வெங்கராவுண்டபிள்ளையைநல்குமே
வெள்ளைவாரண மீதிலிருத்துமே
மங்கைபாகனைத் தூதுநடத்துமே
மருவியாருவழிவிட்டுநிற்குமே

செங்கலானது தங்கமதாகுமே
    திகழுமாற்றிட்ட செம்பொனளிக்குமே
துங்கவாம்பரி சேரற்குநல்குமே
    துலங்குநாவலூர்ச் சுந்தரர்பாடலே.

மாணிக்கவாசக சுவாமிகள் துதி,

பெருகும்வைய தனையழைப்பிக்குமே
    பிரம்படிக்குப் பிரான்மேனிகன்றுமே
நரியெலாம்பரியாகநடத்துமே
    நாடிமூகைதனைப் பேசுவிக்குமே
பரிவிற்பிட்டுக்கு மண்சுமப்பிக்குமே
    பரமனேடெழு தக்கோவைபாடுமே
வருகும்புத்தரை வாதினில்வெல்லுமே
    வாதவூரர் வழங்கியபாடலே.

நால்வர் துதி.

அப்பருக்கெண்பத்தொன் றருள்வாதவூரருக்குச்
செப்பரிய நாலெட்டிற்றெய்வீக-மிப்புவியிற்
சுந்தரர்க்குமூவாறு தொண்ஞானசம்பந்தர்க்
கந்தம்பதினா றறி.

நால்வர் முத்தியடைந்த நாள்.

சித்திரைச்சதையத்தப்பர் சிறைந்தவைகாசிமூலத்
தத்தரைப்பணிசம்பந்த ரானிமாதத்திலந்த
முத்தமிழ்வாதவூரர் முதியகல்லாடிதன்னிற்
சுத்தமாஞ்சோதிநாளிற் சுந்தரர்கயிலைசேர்ந்தார்.

நால்வர் துதி.

அம்மாமடந்தையாக வாழியிற்கருங்கலோர்
வாங்கமாகமுன்னர்செக்கன் மாழையாகமூகையா
மங்கைவாய்மலர்ந்துபேச வந்துதித்தநால்வர்தம்
பங்கயப்பதம்பணிந்து பாடியாடுவாமரோ.

திருத்தொண்டர்கள் சேக்கிழார் சுவாமிகள் துதி.

தில்லைவாழந்தணரே முதலாகச்சீர்படைத்த [போற்றி
தொல்லையதாந்திருத்தொண்டத் தொகையடியார்பதம்
ஒல்லையவர்புராணகதை யுலகறியவிரித்துரைத்த
செல்வமலிகுன்றத்தூர்ச் சேக்கிழாரடிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

———

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

———

தாயுமானசுவாமிபாடல்.

——()*()——

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா யானந்தபூர்த்தியாகி, யருளொடுநிறைந்தெது தன்னருள்வெளிக்குளே யகிலாண்டகோடியெல்லாந், தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராத்தழைத்தெது மனவாக்கினிற், றட்டாமனின்றெதுசமயகோடிகளெலாந் தந்தெய்வமெந்தெய்வமென் றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது வெங்கணும்பெருவழக்கா, யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாயென்றைக்கு முள்ளதெதுமேற், கங்குல்பகலற நின்ற வெல்லையுளதெதுவதுகருத்திற் கிசைந்ததது வே, கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங் கருதியஞ்சலிசெய்குவாம். (௧)

வாசாகயிங்கரியமன்றியொருசாதன மனோவாயுநிற்கும்வண்ணம், வாலாயமாகவும் பழகியறியேன்றுறவுமார்க்கத்தினிச்சைபோல, நேசானுசாரியாய்விவகரிப்பேனந்தநினைவையுமறந்தபோது நித்திரைகொள்வென்றேக நீங்குமெனவெண்ணிலோநெஞ்சந்துடித்தயருவேன், பேசாதவானந்தநிட்டைக்குமறிவிலாப்பேதைக்கும்வெகுதூரமே, பேய்க்குணமறிந்திந்த நாய்க்குமொருவழிபெரிய பேரின்பநிட்டையருள்வாய், பாசாடவிக்குளேசெல்லாதவர்க்கருள் பழுத்தொழுகுதேவதருவே, பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. (௨)

ஆழாழிகரையின்றி நிற்கவிலையோகொடிய வாலமமுதாகவிலையோ, வக்கடலின்மீதுவட வன்னிற்கவில்லையோ வந்தரத்தகிலகோடி, தாழாமனிலைநிற்கவில்லையோ மேருவுந்தனுவாகவளையவிலையோ, சப்தமேகங்களும்வச்ரதாரை

ணையிற்சஞ்சரித்திடவில்லையோ, வாழாதுவாழவேயிராமணடியாற்சிலையுமடமங்கையாகவில்லையோ, மணிமந்த்ரமாதியால்வேண்டுசித்திகளுலக மார்க்கத்தில்வைக்கவில்லையோ, பாழானவென்மனங்குவிய வொருதந்திரம் பண்ணுவதுனக்கருமையோ, பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. (௩)

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டியாளினுங்கடன்மீதிலே, யாணைசெலவேநினைவரளகேசனிகராகவம்பொன்மிகவைத்தபேரு, நேசித்துரசவாதவித்தைக்கலைந்திடுவர்நெடுநாளிருந்தபேரு, நிலையாகவேயினுங்காயகற்பந்தேடிநெஞ்சுபுண்ணாவரெல்லாம், யோசிக்கும்வேளையிற்பசிதீரவுண்பது முறங்குவதுமாகமுடியு, முள்ளதேபோதுநானானெனக்குளறியே யொன்றைவிட் டொன்றுபற்றிப், பாசக்கடற்குளேவீழாமன்மனதற்றபரிசுத்தநிலையையருள்வாய் பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்றபரிபூரணானந்தமே. (௪)

மின்னனையபொய்யடலை நிலையென்றுமையிலகுவிழிகொண்டுமையல்பூட்டு, மின்னார்களின்பமேமெய்யென்றும் வளர்மாட மேல்வீடுசொர்க்கமென்றும், பொன்னையழியாதுவளர்பொருளென்றுபோற்றியிப் பொய்வேஷமிகுதிகாட்டிப்பொறையறிவுதுறவீதலாதிநற்குணமெலாம் போக்கிலேபோகவிட்டுத், தன்னிகரிலோபாதி பாழ்ம்பேய்பிடித்திடத்தரணிமிசைலோகாயதன் சமயநடைசாராமல்வேதாந்தசித்தாந்தசமரசசிவானுபூதி, மன்னவொளிசொற்கொண்டெனைத்தடுத்தாண்டன்பின்வாழ்வித்தஞானகுருவே, மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன் மரபில்வருமௌனகுருவே. (௫)

பண்ணேனுனக்கானபூசை யொருவடிவிலே பாவித்திறைஞ்சவாங்கே, பார்க்கின்றமலரூடு நீயேயிருத்தியப்பனிமலரெடுக்கமனமும் நண்ணேனலாமலிரு கைதான்குவிக்கவெனினாணுமென்னுளநிற்றிநீ, நாம்கும்பிடும்போ தரைக்

கும்பிடாதலா னன்பூசைசெய்யென் முறையோ, விண்ணே விணாதியாம்பூதமேநாதமேவேதமேவேதாந்தமே, மேதக்கவேள்வியேகேள்வியாம் பூமிக்குள்வித்தேயவித்தின்முளையே, கண்ணே கருத்தேயெனெண்ணே யெழுத்தேகதிக்கானமோனவடிவே, கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடுகருணாகரக்கடவுளே. (௬)

எண்ணரியபிறவிதனின்மானிடப்பிறவிதானியாதினுமரிதரிதுகா, ணிப்பிறவிதப்பினாலெப்பிறவிவாய்க்குமோவேதுவருமோவறிகிலேன், கண்ணகனிலத்துநா னுள்ளபொழுதேயருட்ககனவட்டத்தினின்று, காலூன்றிநின்றுபொழியானந்தமுகிலொடு கலந்துமதியவசமுறவே, பண்ணுவதுநன்மையிந்நிலைபதியுமட்டுமேபதியாயிருந்ததேகப், பவுரிகுலையாமலேகௌரிகுண்டலியாயி பண்ணவிதனருளினாலே, விண்ணிலவுமதியமுத மொழியாதுபொழியவேவேண்டுவேனுமதடிமைநான், வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்றவித்தகச்சித்தர்கணமே. (௭)

ஆணிலேபெண்ணிலே யென்போல வொருபேதையகிலத்தின்மிசையுள்ளதோ, ஆடியகறங்குபோ லோடியுழல்சிந்தையையடக்கியொரு கணமேனும்யான், காணிலேன்றிருவருளை யல்லாதுமௌனியாய்க் கண்மூடியோடுமூச்சைக், கட்டிக்கலாமதியை மூட்டவேமூலவெங்கனலினையெழுப்பநினைவும், பூணிலேனிற்றைநாட் கற்றதுங்கேட்டதும்போக்கிலேபோகவிட்டுப் பொய்யுலகனாயினேனாயினுங்கடையானபுன்மையேனின்னமின்னம் வீணிலேயலையாமன்மலையிலக்காகநீர் வெளிப்படத்தோற்றல் வேண்டும், வேதாந்த சித்தாந்தசமரசநன்னிலைபெற்றவித்தகச்சித்தர்கணமே. (௮)

கல்லாதபேர்களே நல்லவர்கணல்லவர்கள்கற்றுமறிவில்லாதவென், கன்மத்தையென்சொல்வேன் மதியையென்சொல்லுவேன்கைவல்யஞானநீதி, நல்லோருரைக்கிலோகர்மமுக்கியமென்றுநாட்டுவேன்கர்மமொருவ, னாட்டினாலோ

பழயஞானமுக்கியமென்று நவிலுவேன்வடமொழியிலே, வல்லானொருத்தன்வர வந்த்ராவிடத்திலேவந்ததா விவகரிப்பேன்; வல்லதமிழறிஞர்வரி னங்ஙனேவடமொழியின்வசனங்கள் சிறிதுபுகல்வேன், வெல்லாமலெவரையு மருட்டிவிடவகைவந்தவித்தையென் முத்திதருமோ, வேதாந்த சித்தாந்தசமரசநன்னிலைபெற்றவித்தகச்சித்தர்கணமே (௯)

சொல்லாமையெத்தனை குணக்கேட்டை நீக்குமக்குணமொன்றுமொன்றிலேன்பாற், கோரமெத்தனைபக்ஷபாதமெத்தனைவன்குணங்களெத்தனை கொடியபாழ்ங், கல்லாமையெத்தனை யகந்தையெத்தனைமனக்கள்ளமெத்தனையுள்ளசற், காரியஞ்சொல்லிடினும்றியர்மையெத்தனைகதிக்கென்றமைத்தவருளிற், சொல்லாமையெத்தனைவிர்தாகோஷ்டியென்னிலே செல்வதெத்தனை முயற்சி, சிந்தையெத்தனைசலன மிந்த்ரசாலம்போன்ற தேகத்தில்வாஞ்சைமுதலா, யல்லாமையெத்தனை யமைத்தனையுனக்கடிமையானேனிவைக்குமாளோ, வண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகியானந்தமானபரமே. (௰)

கல்லேனுமையவொருகாலத்திலுருகுமென் கன்னெஞ்சமுருகவிலையே, கருணைக்கிணங்காத வன்மையையுநான்முகன்கற்பிக்கவொருக டவுளோ, வல்லான்வகுத்ததேவாய்க்காலெனும்பெரு வழக்குக்கிழுக்குமுண்டோ, வானமாய்நின்றின்பமழையாயிரங்கியெனை வாழ்விப்பதுன்பாரங்காண் பொல்லாதசேயெனிற்றாய்தள்ளனீதமோ புகலிடம்பிறிதுமுண்டோ, பொய்வார்த்தைசொல்லிலோர் திருவருட்கயலுமாய்ப் புன்மையே ஞவனந்தேர், சொல்லான் முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச் சும்மாவிருக்கவருளாய், சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ் சோதியே சுகவாரியே. (௰௧)

அரும்பொனேமணியே முத்தேயென்னன்பேயென்னன்பானவறிவேயெனறிவிலூற, மானந்தவெள்ளமே யென்றென்னுபாடினேனாடினேனாடிநாடி, விரும்பியேகூவினே

னுலறினேனலறினேன் மெய்சிலிர்த்திருகைகூப்பி, விண்மாரியெனவெனிருகண்மாரிபெய்யவேவேசற்றயர்ந்தேனியா, னிரும்புநேர்நெஞ்சகக்கள்வனானுமுனை யிடைவிட்டு நின்றதுண்டோ, வென்றுநீயன்றுநா னுன்னடிமையல்லவோயாதேனு மறியாவெறுந், துரும்பனேவென்னினுங் கைவிடுதனீதியோதொண்டரொடு கூட்டுகண்டாய், சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்சோதியேசுகவாரியே.

அவனன்றியோரணுவு மசையாதெனும்பெரிய வாய்த்தர்மொழி யொன்றுகண்டா, லறிவாவதேதுசில வறியாமையேதிவை யறிந்தார்களறியார்களார், மௌனமொடிருந்ததாரென்போலுடம்பெலாம் வாயாய்ப்பிதற்றுமவரார், மனதெனவுமொருமாயையெங்கே யிருந்துவரும் வன்மையோடிரக்க மெங்கே, புவனம்படைப்பதென் கர்த்தவியமெவ்விடம் பூதபேதங்களெவிடம், பொய்மெயிதமகிதமேல் வருநன்மை தீமையொடு பொறை பொறுமையுமெவ்விட மெவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவரெவர் பகைஞர் யாதுமுனை யன்றியுண்டோ, விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி யெங்குநிறைகின்றபொருளே. (௰௩)

காகமானதுகோடிகூடுகின்றாலுமொருகல்லின்முன்னெதிர்நிற்குமோ, கர்மமானதுகோடிமுன்னேசெய்தாலுநின் கருணைப்ரவாகவருளைத், தாகமாய் நாடினரை வாதிக்கவல்லதோ தமியனேற் கருட்டாகமோ, சற்றுமிலை யென்பதும் வெளியாச்சுவினையெலாஞ் சங்கேதமாய்க் கூடியே, தேகமானதைமிகவும் வாட்டுதேதுன்பங்கள்சேராமல்யோகமார்க்க, சித்தியோவரவில்லை சகசநிஷ்டைக்குமென்சிந்தைக்கும்வெகுதூரநானேகமாய்நின்றேடிருக்குநாளெந்தநாளிந்நாளின்முற்றுறுதோ, விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி யெங்குநிறைகின்றபொருளே. (௧௪)

பாகத்தினற்கவிதை பாடிப்படிக்கவோ பத்திநெறியிலைவேத பாராயணப்பனுவன் மூவர்செய்பனுவலது பகரவோவிசையுமில்லை, யோகத்திலேசிறிது முயலவென்றாற்

றேகமொவ்வாதிவ்வூன்வெறுத்தா, லுயிர்வெறுத்திடலொ க்குமல்லாதுகிரியைகளுபாயத்தினற்செய்யவோ, மோகத் திலேசிறிதுமொழியவிலைமெஞ்ஞான மோனத்தி நிற்கவெ ன்றால், முற்றுதுபரிபாக சத்திகளனேகநின் மூதறிவிலே யெழுந்த, தாகத்திலேவாய்க்கு மமிர்தப்ரவாகமே தன்னந் தனிப் பெருமையே, சர்வபரிபூரண வகண்டதத்துவமான சச்சிதானந்தசிவமே. (கரு)

இனியேனுமெமக்குனருள் வருமோவெனக்கருதி யேங்கு மேநெஞ்சமையோ, வின்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்ப ரென்றெண்ணவோதிடமில்லையே, யனியாயமாயிந்த வுட லைநானெனன்றுவருமந்தகற்காளாகவோ,வாடித்திரிந்துநான் கற்றதுங்கேட்டதுமவலமாய்ப்போதனன்றோ, கனியேனு ம்வறியசெங்காயேனுமுதிர்சருகுகந்தமூலங்களேனுங்,கன ல்வாதைவந்தெய்தினள்ளிப்புசித்துநான் கண்மூடிமௌனி யாகித், தனியேயிருப்பதற்கெண்ணினேனெண்ணமிது சா மிநீயறியாததோ சர்வபரிபூரணவகண்டதத்துவமான சச்சி தானந்தசிவமே. (கசு)

வேதாவையிவ்வண்ணம் விதித்ததேதென்னினுன் வி னைப்பகுதியென்பனந்த, வினையேசவறியாதுநிற்கவிவைம னதால் விளைந்ததான்மனதைநாடிற், போதமேநிற்குமப் போதத்தைநாடிலோ போதமுநின்னல்விளக்கம், பொய்யன் றுதெய்வமறையாவுமேநீயென்று போக்குவரவறநிகழ்த்து, மாதாரவாதேய முழுது நீயாதலா லகிலமீ தென்னையாட் டி, மாடல்கண்டவனுநீ யாடுகின்றவனுநீ யருளுநீமௌன ஞான, தாதாவு நீபெற்ற தாய்தந்தை தானுநீ தமருநீயாவுநீ காண் சர்வபரி பூரணவகண்டதத்துவமான சச்சிதானந்த சிவமே. (கஎ)

தந்தைதாய் தமர்தார மகவென்னுமிவையெலாஞ் சந்தி யிற் கூட்டமிதிலோ, சந்தேகமில்லைமணி மாடமாளிகை மேடைசதுரங்கசேனையுடனே, வந்ததோர்வாழ்வுமோரிந் த்ரசாலக்கோலம்வஞ்சனைபொருமைலோபம், வைத்தமன

மாங்கிருமி சேர்ந்தமலபாண்டமோ வாஞ்சையிலாதகன வே,யெந்தநாளுஞ்சரியெனத்தேர்ந்து தேர்ந்துமே யிரவு பகலில்லாவிடத், தேகமாய்நின்றநின் னருள்வெள்ளமீதி லே யானென்ப தறவுமூழ்கிச், சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ தேடரியசத்தாகியென், சித் தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே தேசோமயா னந்தமே. (கஅ)

ஆராரெனக்கென்ன போதித்துமென்னவென் னறிவி னைமயக்கவசமோ, வண்டகோடியையெலாங் கருப்பவறை போலவுமடுக்காயமைத்தமைத்துப், பேராமனின்றபரவெளி யிலேமனவெளிபிறங்குவதலாதோன்றினும்பின்னமுறமரு வாது ரன்னயத்தாலினிப் பேரின்பமுத்திநிலையுந் தாராது தள்ளவும் போகாதுனலது தள்ளினும்போகேனியான் ற டையேதுமில்லையாண் டவனடிமையென்னுமிரு தன்மை யிலுமென்வழக்குத் தீராதுவிடுவதில்லை நடுவானகடவுளே தேடரியசத்தாகியென்,சித்தமிசைகுடிகொண்டவறிவான தெய்வமேதேசோமயானந்தமே. (ககூ)

கந்துகமதக்கரியை வசமாய் நடத்தலாங் கரடிவெம்புலி வாயையுங், கட்டலாமொருசிங்க முதுகின்மேற்கொள்ள லாங்கட்செவி யெடுத்தாட்டலாம், வெந்தழலினிரதம்வை த்தைந்துலோகத்தையும் வேதித்துவிற்றுண்ணலாம், வே றொருவர்காணம லுலகத்துலாவலாம் விண்ணவரையேவ ல் கொளலாஞ், சந்ததமுமிளமையோடிருக்கலா மற்றொரு சரீரத்தினும்புகுதலாஞ், சலமேனடக்கலாங் கனன்மேலிரு க்கலாந்தன்னிகரில்சித்திபெறலாஞ், சிந்தையையடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிதுசத்தாகியென் சித்தமிசைகுடி கொண்டவறிவானதெய்வமே தேசோமயானந்தமே. (உ0)

தாயுமானசுவாமிகள் திருவடிகளேசரணம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இராமலிங்க சுவாமிகளருளிச்செய்த

திருவருட்பா.

—*—

நாமாவளி.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-ஆதிதாளம்.

அம்பலத்தரசே யருமருந்தே
ஆனந்தத்தேனே யருள்விருந்தே (க)
பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெலாம்புகழ் கண்ணியனே (உ)
மலைதருமகளே மடமயிலே
மதிமுகவமுதே யிளங்குயிலே (ந)
ஆனந்தக்கொடியே யிளம்பிடியே
யற்புதத்தேனே மலைமானே (ச)
சிவசிவசிவ சின்மயதேஜா
சிவசுந்தரகுஞ்சித நடராஜா (ரு)
படனவிவேக பரம்பரவேதா
நடனசபேச சிதம்பரநாதா (சு)
அரிபிரமாதியர் தேடியநாதா
அரகரசிவசிவ வாடியபாதா (எ)
அந்தணவங்கண வம்பரபோகா
அம்பலவம்பர வம்பிகைபாகா (அ)
அம்பரவிம்ப சிதம்பரநாதா
அஞ்சிதரஞ்சித குஞ்சிதபாதா (கூ)
தந்திரமந்திர யந்திரபாதா
சங்கரசங்கர சங்கரநாதா (ய)
கனகசிதம்பர சங்கரபுரஹர
அனகபரம்பர சங்கரஹரஹர (யக)

சகல்கலாண்ட சராசரகாரண
சகுணசிவாண்ட பராபரிபூரண (௰௨)

இக்கரைகடந்திடி லக்கரையே
இருப்பதுசிதம்பரச் சர்க்கரையே (௰௩)

என்னுயிருடம்பொடு சித்தமதே
இனிப்பதுநடராஜ புத்தமுதே (௰௪)

ஐயர்திருச்சபை யாடகமே
ஆடுதலானந்த நாடகமே (௰௫)

உத்தரஞான சிதம்பரமே
சித்தியெலாந்தரு மம்பரமே (௰௬)

அப்பலவாசிவ மாதேவா
வம்பலவாவிங்கு வாவாவா (௰௭)

நடமிடும்பல நன்மணியே
புடமிடுசெம்பலப் பொன்மணியே (௰௮)

உவட்டாதுசித்திக்கு முள்ளமுதே
தெவிட்டாதுதித்திக்குந் தெள்ளமுதே (௰௯)

நடராசவள்ளலை நாடுதலே
நந்தொழிலாம்விளை யாடுதலே (௨௰)

அருட்பொதுநடமிடு தாண்டவனே
யருட்பெருஞ்சோதியென் னாண்டவனே (௨௧)

நடராஜமாணிக்க மொன்றதுவே
நண்ணுதலாணிப்பொன்மன்றதுவே (௨௨)

நடராஜபலமது நம்பலமே
நடமாடுவதுதிரு வம்பலமே (௨௩)

திருச்சிற்றம்பலம்.

பரமசிவதோத்திரம்.

விண்ணுடையாய்வெள்ளி வெற்புடையாய்மதி மேவு
சடைக், கண்ணுடையாய்நெற்றிக் கண்ணுடையாயருட்
கண்ணுடையாய், பண்ணுடையாய்திசைப் பட்டுடையா
யிடப்பாலிலருட், பெண்ணுடையாய்வந்திப் பிட்டுடையா
யென் பெருஞ்செல்வரே. ௧

விடையுடையாய்மறைமேலுடையாய்நதிமேவியசெஞ்
சடையுடையாய்கொன்றைத்தாருடையாய்கரந்தாங்குமழு
படையுடையாயருட்பண்புடையாய்பெண்பரவையின்ப
னடையுடையாயருளுடுடையாய்பதநல்குகவே. ௨

கீளுடையாய்பிறைக்கீறுடையாயெங்கிளைத்தலைமேற்
றாளுடையாய்செஞ்சடையுடையாயென்றனையுடையாய்
வாளுடையாய்மலைமானுடையாய்கலைமானுடையா
யாளுடையாய்மன்றுளாட்டுடையாயென்னையான்டருளே
நான்படும்பாடுசிவனேயுலகர்நவிலும்பஞ்சு [மோ
தான்படுமோசொல்லத்தான்படுமோவெண்ணத்தான்படு
காண்படுகண்ணிவின்மாபடுமாறுகலங்கிநின்றே [னே
னேன்படுகின்றனையென்றிரங்காயென்னிலென்செய்வே

விண்ணேவிண்ணுருவேவிண்முதலே விண்ணுவவெ
ளியேயவ்வெளிவிளங்கு வெளியேயென்றன், கண்ணேக
ண் மணியே கண்ணொளியே கண்ணுட்கலந்து நின்றகதி
ரேயக்கதிரின்வித்தே தண்ணேதன்மதியேயம்மதியிற்பூத்
த தண்ணமுதேதண்ணமுதசாரமேசொற், பண்ணேபண்
ணிசையேபண்மயமே பண்ணின்பயனே மெய்த்தவர்வாழ்
த்திப்பரவுந்தேவே. ௫

சுழியாதவருட்கருணைப் பெருக்கேயென்றுந் தாண்
டாதமணிவிளக்கின்சோதியேவா, ஞெழியாது கதிர்பரப்
புஞ் சுடரேயன்பர்க் கோவாதவன்பருளுமொன்றேவிண்
ணோர், விழியாலுமொழியாலு மனத்தினாலும் விழைதரு
மெய்த்தவத்தாலும் விளம்புமெந்த, வழியாலுங்கண்டுகொ
ளற் கரிதாய்ச்சுத்த மௌனவெளியூடிருந்து வயங்குந்
தேவே. (௬)

குலத்திடையுங்கொடியனொரு குடித்தனத்துங்கொடியேன், குறிகளிலுங்கொடியனன்றிக்குணங்களிலுங்கொடியேன், மலத்திடையேபுழுத்தசிறுபுழுக்களிலுங் கடையேன், வன்மனத்துப்பெரும்பாவி வஞ்சநெஞ்சப்புலையேன், நலத்திடையோரணுவளவும் நண்ணுகிலேன்பொல்லா நாய்க்குநகைதோன்றநின்றேன் பேய்க்குமிகவிழித்தேன், நிலத்திடைநானேன்பிறந்தே நின்கருத்தையறியே னிர்க்குணனே நடராஜநிபுணமணிவிளக்கே. (எ)

விளக்கறியா விருட்டறையிற் கவிழ்ந்துகிடந்தழுது விம்முகின்ற குழவியினுமிகப்பெரிதுஞ்சிறியேன் அளக்கறியாத் துயர்க்கடலிலழுந்திநெடுங்கால மலைந்தலைந்துமெலிந்ததுரும் பதனின்மிகத்துரும்பேன் கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழுமரத்தேன் கெடுமதியேன் கடுமையினேன்கிறிபேசும் வெறியேன், களக்கறியாப்புவியிடைநா னேன்பிறந்தேனந்தோ கருணைநடத்தரசே நின்கருத்தையறியேனே. (அ)

அரசரெலாமதித்திடப்பே ராசையிலேயரசே டாலெனவேமிகக்கிளைத்தே னருளறியாக்கடையேன், புரசமரம்போற்பருத்தேனெட்டியெனத் தழைத்தேன் புங்கெனவும் புளியெனவுமங்கியுதிர்கின்றேன், பரசும்வகைதெரிந்துகொளேன் தெரிந்தாரைப்பணியேன் பசையறியாக்கருங்கன்மனப் பாரைசுமந்துழல்வேன், விரசுநிலத்தேன்பிறந்தே னின்கருத்தையறியேன்வியக்குமணிமன்றோங்கி விளங்குபரம் பாருளே (கூ)

பொருளறியேன் பொருளறிந்தார் போன்றுநடித்திங்கே பொங்கிவழிந்துடைகின்றேன் பொய்யகத்தேன்புலையேன், மருளறியாத்திருவாளருளங்களிக்கதிரிவேன் மவையுண்டுமுழவுதர மாடெனவேதடித்தேன், வெருளறியாக் கொடுமனத்தேன் விழற்கிறைத்துக்களிப்பேன் வீணர்களிற்றலைநின்றேன் விலக்கனைத்தும்புரிவேன், தெருளறியேனுலகிடைநா னேன்பிறந்தேனினது திருவுளத்தையறிந்திலேன் தெய்வநடத்தவனே. (௰)

மருந்தறியேன்மணியறியேன்மந்திரமொன்றறியேன் மதியறியேன்விதியறியேன் வாழ்க்கைநிலையறியேன், திருந்தறியேன்றிருவருளின் செயலறியேனறந்தான் செய்தறியேன்மனமடங்குந்திறத்தினிலோரிடத்தே, யிருந்தறியேனறிந்தோரையேத்திடவுமறியே னெந்தைபிரான் மணிமன்றமெய்தவறிவேனோ, இருந்ததிசைசொலவறியே னெங்ஙனநான்புகுவேன் யார்க்குறைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே. (௰க)

வெறுத்துரைத்தேன் பிழைகளெலாம் பொறுத்தருளல்வேண்டும் விளங்கறிவுக்கறிவாகிமெய்ப்பொதுவி னடிப்போய், கறுத்துரைத்தார்தமக்குமருள் கனிந்துரைக்கும்பெரிய கருணைநெடுங்கடலேமுக்கண்ணோங்குகரும்பே, மறுத்துரைப்பதெவனருணீ வழங்குகினுமன்றி மறுத்திடினுமுன்னையலான் மற்றொருசார்பறியேன், செறுத்துரைத்தவுரைகளெலாந்திருவருளேயென்று சிந்திப்பதல்லாமற்செய்வகையொன்றிலனே. (௰உ)

களக்கமறப்பொதுநடநான் கண்டுகொண்ட தருணங்கடைச்சிறியேனுளம்பூத்துக்காய்த்ததொருகாய்தான், விளக்கமுறப்பழுத்திடுமோ வெம்பியுதிர்ந்திடுமோ வெம்பாதுபழுக்கினுமென்கரத்திலகப்படுமோ, கொளக்கருதுமலமாயைக் குரங்குகவர்ந்திடுமோகுரங்குகவராதெனது குறிப்பிலகப்படினுந், துளக்கமறவுண்ணுவனோ தொண்டைவிக்கிக்கொளுமோ சோதிதிருவுளமெதுவோ வேதுமறிந்திலனே. (௰ந)

அப்பாநான் வேண்டுதல்கேட்டருள்புரிதல்வேண்டு மாருயிர்கட்கெல்லாநானன்புசெயல்வேண்டு, மெப்பாருமெப்பதிமு மெங்கணுநான்சென்றேயெந்தைநினதருட்புகழையியம்பியிடல்வேண்டும், செப்பாதமேனிலைமேற்சுத்தசிவமார்க்கந்திகழ்ந்தோங்கவருட்சோதிசெலுத்தியிடல்வேண்டுந், தப்பேதுநான்செயினுநீபொறுத்தல்வேண்டுந் தலைவநினைப்பிரியாதநிலைமையும்வேண்டுவனே. (௰ச)

சொல்லவனே பொருளவனே துரியபதத்தவனே தூய
வனே நேயவனே சோதியுருவவனே, நல்லவனேநன்னிதி
யே ஞானசபாபதியே நாயகனே தாயகனே நண்பவனேய
னைத்தும், அல்லவனேயானவனேயம்மையப்பா வென்னை
யாண்டவனேதாண்டவனே யருட்குருவேயெல்லாம், வ
ல்லவனே சிவகாம வல்லிமணவாளா மன்னவனேயென்ன
வனேவந்தருள்க விரைந்தே. (௰௫)

படமுடியா தினித்துயரம் படமுடியாதரசே பட்டதெ
லாம்போதுமிந்தப்பயந்தீர்த்திப்பொழுதென், னுடலுயிரா
தியவெல்லாம் நீயெடுத்துக்கொண்டுன்னுடலுயிராதியவெ
ல்லாமுவந்தெனக்கேயளிப்பாய், வடலுறுசிற் றம்பலத்தே
வாழ்வாயென்கண்ணுன்மணியேயென் குருமணியேமாணி
க்கமணியேநடனசிகா மணியேயென்னவமணியே ஞானந
ன்மணியே பொன்மணியே நடராஜமணியே. (௰௬)

வாழையடிவாழையெனவந்ததிருக்கூட்ட மரபினில்யா
னொருவனன்றோவகையறியேனிந்த, வேழைபடும்பாடுனக்
குத்திருவுளச்சம்மதமோ விதுதகுமோவிதுமுறையோ வி
துதருமந்தானோ, மாழைமணிப்பொதுநடனஞ் செய்வள்
ளல்யானுமகனலனோநீயெனக்குவாய்த்ததந்தையலையோ,
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருணின் னருளொளியைக் கொடுத்தருளிப்பொ
ழுதே. (௰௭)

உன்னைமறந்திடுவேனோமறப்பறியேன்மறந்தா லுயிர்வி
டுவேன் கணந்தறியேனுன்னாணையிதுநீ, யென்னைமறந்திடு
வாயோமறந்திடுவாயெனில்யா னென்னசெய்வேனென்கு
ருவேனெவர்க்குரைப்பேனெந்தா, யன்னையினுந்தயவுடை
யாய்நீமறந்தாயெனினுமகிலமெலாமளித்திடுசின்னருள்மற
வாதென்றே. யின்னுமிகக்களித்திங்கேயிருக்கின்றேன்மற
வேலிதுதருணமருட்சோதியெனக்குவிரைந்தருளே. (௰௮)

அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிசிவமே யரு
ளமுதேயருணிறைவேயருள்வடிவப்பொருளே, யிருள்கடி

ந்தென்னுளமுழுது மிடங்கொண்டபதியே யென்னறிவே
யென்னுயிரே யெனக்கினியவுறவே, மருள்கடிந்தமாமணி
யே மாற்றறியாப்பொன்னே மன்றில்நடம்புரிகின்ற மண
வாளாவெனக்கே, தெருளளித்ததிருவாளா ஞானவுருவா
ளா தெய்வநடத்தரசேநான் செய்மொழியேற்றருளே.

கோடையிலேயிளைப்பாற்றிக் கொள்ளும்வகைகிடைத்த
குளிர்தருவேதருநிழலேநிழல்கனிந்தகனியே, ஓடையிலே
யூறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே யுகந்ததண்ணீரிடைமலர்
ந்தசுகந்தமணமலரே, மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்
காற்றே மென்காற்றில்விளைசுகமே சுகத்திலுறும்பயனே,
யாடையிலேயெனைமணந்தமணவாளாபொதுவி லாடுகின்
றவரசேயென்னலங்கலணிந்தருளே. (௨௰)

கண்களிக்கப்புகைசிறிதுங்காட்டாதேபுருவக்கலைநடுவே
விளங்குகின்றகற்பூரவிளக்கே, பண்களிக்கப்பாடுகின்றபா
ட்டில்விளைசுகமே பத்தருளேதித்திக்கப் பழுத்ததனிப்பழ
மே,மண்களிக்கவான்களிக்கமணந்தசிவகாம வல்லியெனம
றைகளெலாம் வாழ்த்துகின்றவாமப், பெண்களிக்கப்பொ
துநடஞ்செய் நடத்தரசேநினது பெரும்புகழ்ச்சேவடிகளு
க்கென் சொல்லுமணிந்தருளே. (௨௧)

உருவெளியேயுருவெளிக்குளுற்றவெளியுருவே யுருநடுவு
ம்வெளிநடுவுமொன்றானவொன்றே, பெருவெளியே பெரு
வெளியிற் பெருஞ்சோதிமயமே பெருஞ்சோதிமயநடுவே
பிறங்குதனிப்பொருளே, மருவொழியாமலரகத்தேவயங்
குமொளிமணியே, மந்திரமேதந்திரமேமதிப்பரியமருந்தே
திருவொழியாதோங்குமணிமன்றினடத்தரசே சிறுமொழி
யென் றிகழாதேசேர்த்துமகிழ்ந்தருளே. (௨௨)

பார்த்தாலும்நினைத்தாலும்படித்தாலும்படிக்கப் பக்கம்நி
ன்றுகேட்டாலும் பரிந்துளுணர்ந்தாலும், ஈர்த்தாலும்பிடி
த்தாலுங்கட்டியணைத்தாலு மித்தனைக்குந்தித்திக்குமினித்
தசுவைக்கரும்பே, வேர்த்தாவிமயங்காதுகனிந்தநறுங்கனி
யே, மெய்மையறிவானந்தம்விளங்குமருளமுதே, தீர்த்தா
வென்றன்பரெலாந் தொழப்பொதுவில் நடிக்குந்தெய்வந
டத் தரசேயென் சிறுமொழியேற்றருளே. (௨௩)

கல்லார்க்குங்கற்றவர்க்குங்களிப்பருளுங்களிப்பே காணா
ர்க்குங் கண்டவர்க்குங்கண்ணளிக்குங்கண்ணே, வல்லார்க்
குமாட்டார்க்கும் வரமளிக்கும்வரமே மதியார்க்குமதிப்பவ

ர்க்கு மதிகொடுக்கும்மதியே, நல்லார்க்கும்பொல்லார்க்கும் நடுநின்றநடுவே நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்குநலமே யெல்லார்க்கும்பொதுவில்னட மிடுகின்றசிவமே யென்னரசே யான்புகலு மிசையுமணிந்தருளே. (உச)

அறிந்தானை யறிவறிவுக்கறிவானானை யருட்பெருஞ்சோதி தானானை யடியேனன்பிற், செரிந்தானையெல்லாஞ்செய்வல்லசித்தாய்ச் சிறந்தானைசிறுநெறியிற்சென்றார்தம்மைப், பிரிந்தானை யென்னுளத்திற்கலந்துகொண்ட பிரியமுள்ள பெருமானைப்பிறவிதன்னை, யெறிந்தானை யெனையறியாதெடுத்தாண்டானை யெம்மானைக் கண்டுகளித்திருக்கின்றேனே. (உரு)

பாலானைத்தேனானைப்பழத்தினானைப்பலனூறுசெங்கரும்பானைப்பாய்ந்துவேகாக், காலானைக்கலைசாகாத் தலையினானைக்காலென்றுந்தலையென்றுங்கருதற்கெய்தா, மேலானை மேனிலைமேலமுதானானைமென்மேலுமெனதுளத்தே விளங்கலன்றி,யேலானையென்பாடலேற்றுக்கொண்டவெம்மானைக்கண்டுகளித்திருகின்றேனே. (உசா)

அருளரசை யருட்குருவை யருட்பெருஞ்சோதியையென்னம்மையையென்னப்பனையென் னாண்டவனையமுதைத் தெருளுருமென்னுயிரையென்றனுயிர்க்குயிரையெல்லாஞ்செய்யவல்லதனித்தலைமைச்சித்தசிகாமணியை,மருவுபெருவாழ்வையெல்லாவாழ்வுமெனக்களித்த வாழ்முதலைமருந்தினைமாமணியையென்கண்மணியைக், கருணைநடம்புரிகின்றகனகசபாபதியைக் கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன்களித்தே. (உஎ)

மதித்திடுதலரியவொரு மாணிக்கமணியை வயங்கியபேரொளியுடையவச்சிரமாமணியைத், துதித்திடுவேதாகமத்தின்முடிமுடித்தமணியைச்சுயஞ்சோதித்திருமணியைச்சுத்தசிவமணியை,விதித்தன்முதற்றொழிலியற்றுவித்தகுருமணியை விண்மணியையம்மணிக்குள்விளங்கியமெய்ம்மணியைக்,கதித்தசுகமயமணியைச்சித்தசிகாமணியைக் கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. (உஅ)

அருட்சோதித் தெய்வமெனை யாண்டுகொண்டதெய்வ மம்பலத்தேயாடுகின்ற வானந்தத்தெய்வம், பொருட்சாறு மறைகளெலாம் போற்றுகின்றதெய்வம் போதாந்தத்தெய்வமுயர் நாதாந்தத்தெய்வ, மிருட்பாடுநீக்கியொளி யீந்தருளுந்தெய்வ மெண்ணியநானெண்ணியவா றெனக்கருளுந் தெய்வந், தெருட்பாடலுவந்தெனையுஞ் சிவமாக்குந்தெய்வம்சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம். (உகூ)

எல்லாஞ்செய் வல்லதெய்வ மெங்குநிறைதெய்வ மென்னுயிரிற்கலந்தெனக்கேயின்பநல்குந்தெய்வம்,நல்லார்க்குநல்லதெய்வம் நடுவானதெய்வம் நற்சபையிலாடுகின்றநடராஜதெய்வம், கல்லார்க்குங்கற்றவர்க்குங் களிப்பருளுந்தெய்வங் காரணமாந்தெய்வமருட் பூரணமாந்தெய்வம், செல்லாதநிலைகளெலாந் செல்லுகின்றதெய்வம் சிற்சபையில்விளங்குகின்ற தெய்வமதேதெய்வம். (ஙய)

பதியேயெம்பரனேயெம்பரம்பரமேயெமதுபராபரனே யானந்தப்பதந்தருமெய்ஞ்ஞான, நிதியேமெய்ந் நிறைவே மெய்ந் நிலைமெய்யின்ப நிருத்தமிடுந் தனித்தலைமை நிபுண மணிவிளக்கே, கதியேயென்கண்ணேயென் கண்மணியே யெனதுகருத்தேயென்கருத்திலுற்றகனிவே செங்கனியே துதியேயென்னுரையேயென்றோழாவென்னுளத்தே சுத்தநடம்புரிகின்றசித்தசிகாமணியே. (ஙக)

ஆரணமேயாகமமேயாரணவாகமத்தினரும்பொருளேயரும்பொருளினனுபவமேயறிவே, காரணமே காரியமேகாரணகாரியங்கள் கடந்தபெரும்பதியே யென் கருத்தமர்ந்தநிதியே, பூரணமே புண்ணியமேபொதுவிளங்குமரசே புத்தமுதேசத்தியமேபொன்னே செம்பொருளே, தோரணமேவிளங்குசித்தியத்தினுமென்னுளத்துஞ்சுத்தநடம்புரிகின்றசுத்தசிகாமணியே. (ஙஉ)

கருவிற்கலந்ததுணையே யென்கனிவிற் கலந்தவமுதே யென்கண்ணிற்கலந்தவொளியேயென்கருத்திற்கலந்தகளிப்பேயென். னுருவிற்கலந்தவழகேயென் னுயிரிற்கலந்தவுறவேயென்னுணர்விற்கலந்தசுகமேயென் னுடையவொருமைப்பெருமானே, தெருவிற்கலந்து விளையாடுஞ் சிறியேன்றனக்கேமெய்ஞ்ஞானசித்தியளித்த பெருங்கருணைத்தேவேயுலகத்திரளெல்லா, மருவிக்கலந்து வாழ்வதற்கு வாய்த்தருணமிதுவென்றே வாயேபறையாயறைகின்றேனெந்தாய் கருணைபலத்தாலே. (ஙங)

திருச்சிற்றம்பலம்.

திருத்தணிகைப்பதிகம்.

———()*()———

அடியார்க்கெளியரெனுமுக்கணையர்தமக்குமுலகீன்றவம்மைதனக்குந்திருவாய்முத்தளித்துக்களிக்குமருமருந்தே, கடியார் கடப்பமலர் மலர்ந்தகருணைப்பொருப்பேகற்பகமே கண்ணுன்மணியேயன்பர் மனக்கமலம்விரிக்குங் கதிரொளியே; படியார்வெளிவான்றீமுதலைம்பகுதியாயபரம்பொருளேபகர்தற்கரிய மெய்ஞ்ஞானப்பாகேயசுரர்படைமுழுதுந், தடிவாயென்னச்சுரர்வேண்டத் தடிந்தவேற்கைத்தனிமுதலே தணிகாசலமாந்தலத்தமர்ந்தசைவமணியேசண்முகனே. (க)

காயாதளியக்கனிந்தன்பாற் கல்லாலடிநின்றருளொழுகுங்கனியுட்சுவையே யடியர்மனக்கவலையகற்றுங்கற்பகமே, யோயாதுயிர்க்கு ளொளித்தெதையுமுணர்த்தியருளுமொன்றேயென் னுள்ளக்களிப்பேயைம்பொறியு மொடுக்கும்பெரியோர்க்கோருறவே தேயாக்கருணைப்பாற்கடலே தெளியாவசுரர்போர்க்கடலே, தெய்வப்பதியே முதற்கதியேதிருச்செந்தூரிற்றிகழ்மதியே, தாயாயென்னைக்காக்கவருந்தனியேபரமசற்குருவே தணிகாசலமாந்தலத்தமர்ந்தசைவமணியேசண்முகனே. (உ)

நானுமயன்மாலிந்திரன்பொன் னுட்டுப்புலவர்மணம்வேட்ட நங்கைமார்கண் நங்கலப்பொன் னுண்காத்தளித்தநாயகமே. சேனும்புவியும்பாதலமுந்தித்தித்தொழுகுஞ்செந்தேனே செஞ்சொற்சுவையே பொருட்சுவையே சிவன்கைப்பொருளே செங்கழுநீர்ப், பூணுந்தடந்தோட்பெருந்தகையே பொய்யாறியாப்புண்ணியமே போகங்கடந்தயோகியர்முப்போகம்விளைக்கும்பொற்புலமே, தானுவென்னவுலகமெலாந்தாங்குந்தலமைத் தயாநிதியே தணிகாசலமாந்தலத்தமர்ந்த சைவமணியேசண்முகனே. (ங)

முன்னைப்பொருட்கு முதற்பொருளே முடியாதோங்குமுதுமறையே முக்கட்கரும்பீன்றெடுத்தமுழு முத்தேமுதிர்ந்தமுக்கனியே பொன்னைப்புயங்கொண் டவன் போற்றும்பொன்னேபுனிதபூரணமே போதமணக்கும்புதுமலரே புலவரெவரும் புகும்பதியே மின்னைப்பொருவுமுலகமயல் வெறுத்தோருள்ளவிளக்கொளியே மேலுங்கீழுநடுவுமெனவிளங்கிநிறைந்தமெய்த்தேவே, தன்னைப்பொருவுஞ் சிவயோகந் தன்னையுடையோர் தம்பயனே தணிகாசலமாந்தலத்தமர்ந்தசைவமணியேசண்முகனே. (ச)

திருச்சிற்றம்பலம்.

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

உ

சிவமயம்.

நால்வர் தேவாரத்திரட்டின்

அ க ரா தி.

பதிகம்.	பக்கம்.	பதிகம்.	பக்கம்.
சம்பந்தசுவாமி.		சொன்மாலை	ருஉ
		ஒன்றுகொலா	ருச
தோடுடைய	அ	பண்ணினேர்	ருசு
கற்றுங்கெரி	ய	பொன்னூர்திரு	ருஎ
ஆடினாய்நறு	யக	கருநட்ட	ருஅ
பூவார்மலர்	யங	சிந்திப்பரி	,,
மையாடிய	யச	ஓம்பினேன்	ருகூ
வேதமோதி	யசு	கங்கையைச்	,,
கொட்டமே	யஎ	அரியானை	சுய
பவனமாய்ச்	யகூ	குருகாம்வயிர	சுஉ
வாசிதீரவே	உய	திருவேயென்	சுங
வானுலாவு	உக	எத்தாய	,,
கூனற்றிங்கட்	உங	பண்ணியனை	சுசு
நன்றுடையானைத்	உரு	ஓசையொலி	,,
வடந்திகழ்	உசு	ஆர்த்தவெனக்	சுஎ
சாந்தம்வெண்	உஅ	நில்லாதநீர்	சுஅ
நீறுசேர்வ	ஙய	நீறேறுதிரு	சுகூ
வானத்துயர்	ஙக	போரானை	எய
ஆரிடம்பாடி	ஙங	திருமணியைத்	,,
துணிவளர்	ஙச	இடர்கெடுமா	எக
வானைக்காவல்	ஙசு	ஒருவனாயல	எஉ
மழையா	ஙஅ	மூளைத்தானை	எச
வீடலால	ஙகூ	வானவன்	எரு
கல்லூர்ப்	சக	கருவாகி	எசு
மாதர்மடப்பிடியு	சங	அப்பனீயம்	,,
		மண்ணுகி	எஅ
திருநாவுக்கரசுசுவாமி.		நாமார்க்குங்	எகூ
		எண்ணுகே	அய
விடகிலே	சகூ	பத்தனாய்ப்	அஉ
மாதர்ப்பிறைக்	ருய	தலையேநீ	அச

பதிகம்.	பக்கம்.
மட்டுவார்	௮௫
மூத்தவனை	௮௬
மத்தமாமலர்	௮௮
கோணைக்காவி	௯௦
முன்னைத்	௯௧
காலபாச	௯௩
முற்றிலாமுலை	௯௫
கரப்பர்கால	௯௬
பண்ணியசெந்	௯௮
சுந்தரமூர்த்திசுவாமி.	
பித்தாபிறை	௧௦௫
மற்றுப்பற்	௧௦௬
மருவார்	௧௦௮
தில்லைவாழந்	௧௧௦
வைத்தனன்	௧௧௩
விடையாருங்	௧௧௫
காருலாவிய	௧௧௬
மறைகளாயின	௧௧௮
மாணிக்கவாசகசுவாமி.	
ஆதியுமந்த	௧௨௬
செங்கணெடு	௧௨௭
பாரொடுவிண்	௧௨௮
பூசுவதும்	௧௨௯
சோதியே	௧௩௦
உம்பர்கட்	௧௩௨
பூங்கமலத்	௧௩௩
முத்திநெறி	௧௩௪

பதிகம்.	பக்கம்.
நால்வர்துதி.	
புனலிலே	௧௩௫
தலைகொ	
வெங்கரா	
பெருகும்	௧௩.
அப்பருக்	
சித்திரைச்	
அங்கமா	
தாயுமானசுவாமி.	
அங்கிங்	௧௩௭
வாசாகயிங்	,
ஆழாழி	,,
ஆசைக்	௧௩௮
மின்னனைய	,,
பண்ணே	,,
எண்ணரிய	௧௩௯
ஆணிலே	,,
கல்லாத	,,
கொல்லாமை	௧௪௦
கல்லேனு	,,
அரும்பொ	,,
அவனன்றி	௧௪௧
காகமானது	,,
பாகத்தினூற்	,,
இனியே	௧௪௨
வேதாவை	,,
தந்தைதாய்	,,
ஆராரெனக்	௧௪௩
கந்துக	.
இராமலிங்கசுவாமி.	
அம்பலத்தரசே	௧௪௫

தேவாரத்திரட்டின் அகராதி

முற்றிற்று.

—